விலை : 20.00 website : www.valampurii.lk Registered as a Newspaper in Srilanka

பக்கங்கள் : பதினாறு + பதினாறு

# வலம்புரி Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

SPEED
PURIFIED DRINKING WATER
சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், விடுதிகள், ஹோல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.
ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(C-5129)
021 222 5392

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஆனி 26 ஞாயிற்றுக்கிழமை (10.07.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 203



# சர்வதேச பங்களிப்பை தட்டிக் கழிக்க முடியாது

## நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துங்கள்-பிரிட்டன்

(லண்டன்)

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றச்சாட்டுக்களுக்கு பொறுப்புக் கூறும் விசாரணைப் பொறிமுறையில் சர்வதேச நீதிபதிகளின் பங்களிப்பு அவசியம் என பிரித்தானிய வெளிவிவகார மற்றும் பொதுநலவாய அலுவல்களுக்கான துணை அமைச்சர் ஹியூகோ சுவயர் வலியுறுத்தியுள்ளார்.

15 ஆம் பக்கம் பார்க்க....

## நாடாளுமன்ற அனுமதியுடனே விசாரணை

ஐ.நா தீர்மானத்திற்கு அமைய உள்ளக நீதிமன்ற விசாரணை பொறிமுறை, நாடாளுமன்றத்தின் அனுமதியுடனேயே அமைக்கப்படும் என அரசாங்கம் உறுதி அளித்துள்ளது.

கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார நாடாளுமன்றில் எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதில் அளித்த நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, அரசாங்கத்தின் இந்த நிலைப்பாட்டை தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், நாடாளுமன்றில் நேற்று விவாதத்திற்கு

16 ஆம் பக்கம் பார்க்க....

## பகுதி பகுதியாக விடுவிப்போம்

## பரவிப்பாஞ்சான் மக்களிடம் இராணுவத் தளபதி வாக்குறுதி



(பரந்தன்)

பரவிப் பாஞ்சான் மக்களுக்கு காணி விடுவிப்பு தொடர்பில் விரைவில் உரிய தீர்வைவொன்றை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்ப

15 ஆம் பக்கம் பார்க்க....

# வெளி.நீதிபதிகளை வரவழைத்து வழக்கை விசாரிக்க தயாரில்லை!

## ஜனாதிபதி மீண்டும் அறிவிப்பு



(கொழும்பு)

எமது நாட்டு அரசியலமைப்பின் பிரகாரம் வெளிநாட்டியிலிருந்து நீதிபதிகளை வரவழைத்து வழக்கு விசாரிப்பதற்கான எந்தவித ஏற்பாடுகளும் இல்லையெனத் தெரிவித்த ஜனாதிபதி, அதற்கு வசதியளிப்பதற்கு தான் ஒருபோதும் தயாரில்லையென மீண்டும் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று பிற்பகல் பேராதனை ஸ்ரீ சுபோதிராமவிகாரையில் இடம்பெற்ற புண்ணிய நிகழ்வில் கலந்து கொண்ட போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதனைத் தெரிவித்தார்.

இன்னும் இரு வாரங்களுள் யுத்த நீதிமன்றம் -வெளிநாட்டு நீதிபதிகளும் வருகை தரவுள்ளனா என்பதாக உள்நாட்டு ஞாயிறு வார

15 ஆம் பக்கம் பார்க்க....

## மகிந்தவுக்கு ரவி சவால்!

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பொருளாதாரம் தொடர்பான விவாதத்திற்கு வருமாறு நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க நேற்று மீண்டும் சவால் விடுத்துள்ளார்.

பாலத்துறையிலுள்ள ஐக்கிய தேசிய கட்சி அலுவலகத்தில் நேற்று

15 ஆம் பக்கம் பார்க்க....

•யாழ்ப்பாணம் •மன்னார் •முல்லைத்தீவு

## 2ஆவது தென்னை முக்கோண வலயம் நேற்று பிரகடனம்



15 ஆம் பக்கம் பார்க்க....

## மீனவர்கள் போராட்டம்


(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்பிற்குள் இந்திய மீனவர்களை மீன்பிடிக்க அனுமதிக்குமாறு இந்திய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்திடம் கோரியுள்ள நிலையில், இந்த கோரிக்கையை உடனடியாக எந்தவித பரிசீலனையும் இன்றி நிராகரிக்குமாறு கோரி வடக்கு மீனவர்கள் பெரும் போராட்டம் ஒன்றில் ஈடுபட

15 ஆம் பக்கம் பார்க்க....

## தென் சீனக் கடல் விவகாரம்

## சீன வெளிவிவகார அமைச்சர் பிரதமர் ரணிலுடன் சந்திப்பு



16 ஆம் பக்கம் பார்க்க....

## பொருளாதார மத்திய நிலையத்துக்கான காணியை த.தே.கூ நேற்றுப் பார்வை முதலமைச்சருடனும் இன்று சந்திப்பு

(குருமன்காடு)

வடமாகாணத்துக்கான பொருளாதார மத்திய நிலையத்தை ஓமந்தையில் அமைப்பதற்கு துறை சார்ந்தவர்களால் வலியுறுத்தப்பட்டு வரும் நிலையில் குறித்த பகுதியை பாராளுமன்ற உறுப்பினர்களான தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் ஆகியோர நேற்று சனிக்கிழமை பார்வையிட்டுள்ளனர்.

பொருளாதார மத்திய நிலையத்தினை வவுனியாவில் தாண்டிக்குளத்திலா? ஓமந்தையிலா? அமைப்பது என்ற இழுபறி நிலை காணப்பட்டு வந்த நிலையில் தமிழ்த் தேசியக்

15 ஆம் பக்கம் பார்க்க....

## பலத்த காற்று வீசும் சாத்தியம்

(கொழும்பு)

நாட்டை சூழவுள்ள கடற்பிராந்தியங்களில் இன்னும் சில நாட்களுக்கு காற்றின் வேகமானது மணித்தியாலத்திற்கு 60 முதல் 70 கிலோ மீற்றராக அதிகரித்து வீசக்கூடும் என வளி மண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

வளி மண்டலவியல் திணைக்களம் வெளியிட்டுள்ள செய்திக்

15 ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இளைஞன் பலி; சாரதி கைது

(கரணவாய்)

பருத்தித்துறை ஓராம் கட்டைச் சந்திக்கு சமீபமாக கடந்த வெள்ளிக்கிழமை இரவு 7.15 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தமையை அடுத்து பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.


இ.போ.சபைக்கு சொந்தமான பஸ் வண்டியும் மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் 26 வயதுடைய இளைஞர் ஒருவர் பலியானார். பஸ்ஸின் சாரதியான வராத்துப்பளை, பருத்தித்துறையைச் சேர்ந்த 57 வயதுடைய நபரை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (செ-60)

# 11 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிப்பு

(கரணவாய்)

நெல்லியடி நகர் பகுதியில் மதுபோதையிலும், சாரதி அனுமதிப் பத்திரமின்றியும் மோட்டார் சைக்கிள் ஓட்டிய நபர் ஒருவரிற்கு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி பெருமாள் சிவகுமாரினால் 11 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. (செ-60)

# மோ.சைக்கிள் - கார் விபத்து; ஒருவர் படுகாயம் ; சாரதி கைது



(கரணவாய்)

வடமராட்சி மாலி சந்திப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்ததுடன் அதற்கு காரணமான கார் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுச் சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கரணவாயைச் சேர்ந்த சிவச்சந்திரதேவா (வயது -56) என்பவர் படுகாயமடைந்தார்.

வதிரிப் பக்கமாக இருந்த வந்த மோட்டார் சைக்கிளுடன் பருத்தித்துறைப் பக்கமாக சென்ற கார் மோதியதில் இவ்விபத்து ஏற்பட்டுள்ளது. இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் படுகாயமடைந்தார்.

இந்நிலையில் காரைச் செலுத்தி வந்தாகக் கூறப்படும் தென் பகுதியைச் சேர்ந்த கார்ச் சாரதி அங்கிருந்து தப்பிச்செல்ல முற்பட்ட வேளை பொலிஸார் வரும்வரை பொதுமக்கள் மறித்து வைத்திருந்தனர்.

சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் காரினை பொலிஸ் நிலையம் எடுத்துச் சென்றதுடன் கார் சாரதியையும் கைது செய்துள்ளனர்.

விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த நபர் சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (செ-60)

# 10 பேர் கைகலப்பு; பொலிஸ் எச்சரிக்கை

(கரணவாய்)

கரணவாய் மத்தியில் கைகலப்பில் ஈடுபட்ட இரண்டு மாணவர்கள் உட்பட பத்து பேரை நெல்லியடிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர்.பி.ஏ. பிரியந்த கடும் எச்சரிக்கை செய்ததுடன் அறிவுரையும் கூறி அனுப்பி வைத்துள்ளார்.

கடந்த 07-ம் திகதி வியாழக்கிழமை இடம்பெற்ற கைகலப்புத் தொடர்பில் இருவர் காயங்களுக்குள்ளானதாக நெல்லியடிப் பொலிஸ் பொறுப்பதிகாரியின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது.

இதனையடுத்து மறுநாள் இருபகுதியினரையும் அவர்களின் பெற்றோரையும் பொலிஸ் நிலையம் அழைத்த பொறுப்பதிகாரி இச்சம்பவத்தில் மாணவர்களும் ஈடுபட்டதனால் அவர்களின் எதிர்காலத்தினையும் கருத்திற்கொண்டு இனிமேல் இவ்வாறான சம்பவங்களில் ஈடுபடக்கூடாது என அறிவுரை கூறியதுடன்.

மேலும் இவ்வாறான சம்பவங்களில் ஈடுபட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவுறுத்தி எச்சரிக்கை செய்து அனுப்பி வைத்தார். (செ-60)


## வீடு வாடகைக்கு

வெள்ளவத்தையில் 42-ம் வீதியில் 3-ம் இலக்கத்தில் இரண்டு அறைகள் (AC / Non AC) இணைந்த குளியலறையுடன் கூடிய தொடர் மாடி நாள் / கிழமை / மாத வாடகைக்குண்டு

தொடர்பு :-
077 837 8597

(5184)


# குழப்பம் விளைவித்த இளைஞருக்கு அபராதம்

(கரணவாய்)

நெல்லியடி நகர்ப்பகுதியில் மதுபோதையில் குழப்பம் விளைவித்த இளைஞர் ஒருவருக்கு ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி பெருமாள் சிவகுமார் தீர்ப்பளித்துள்ளார்.

மதுபோதையில் குழப்பம் விளைவித்ததாக நெல்லியடி பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட இளைஞர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போதே அவருக்கு ஆயிரம் ரூபாய் அபராதம் நீதவானால் விதிக்கப்பட்டது. (செ-60)

# மரண அறிவித்தல்



## இரத்தினம் அழகம்மா

கோண்டாவில் கிழக்கு ஆஸ்பத்திரி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் அழகம்மா நேற்று (09.07.2016) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னன் - அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னன் - கனகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இரத்தினம் அவர்களின் பாசமிகு மனைவியும், துரைராஜசிங்கம் (ஓய்வூதியர் - பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்), சந்திரவதி, புஸ்பமலர், காலஞ்சென்ற லோகநாதன் மற்றும் தவமலர், சிவகுமார் (யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சின்னப்பு தேவராஜா அவர்களின் வளர்ப்புத் தாயாரும், பரமநாதன் (ஓய்வூதியர் - யாழ்.மாநகரசபை), தம்பியானந்தன் (முன்னாள் இலங்கை மின்சாரசபை ஊழியர்), நளினி, புற்பசிங்கம் (சைவ வித்தியா விருத்திச் சங்கம்), சுமதி, மங்களமலர் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஹரிகரன் (நீர்பாசனத் திணைக்களம் - கிளிநொச்சி), மதனகரன் (நீதிமன்றம் - ஊர்காவற்றுறை), பகிஸ்கரன் (யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை), கதீஸ்கரன் (ஆயுர்வேத மத்திய மருந்தகம் -ஊர்காவற்றுறை), கோகிலகரன் (நீதிமன்றம் -சாவகச்சேரி), கபிலன் (உயர் கலைக்கல்லூரி மாணவன்), மதிரூபன் (ஆசிரியர்- ஏழாலை இசிதோர் பாடசாலை), கமலினி (லண்டன்), ரவிரூபன் (லண்டன்), சுகந்தா (ஆசிரியர் -மு/ஒலுமடு தமிழ் வித்தியாலயம்), றேகன் (கிராம அலுவலர் - ஜே/123), நந்துஜன் (யாழ்.பல்கலைக்கழகம்), சோபிதா, லோகினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், சாம்யோசுவா, சலோமி, அக்ஷா, மேசாக், ஏனோக், யுவன் (லண்டன்), கனிமொழி (லண்டன்), மாதுரி (லண்டன்), பிரஷ்ணவி, சோபினி, வர்ஷா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.07.2016) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11 மணியளவில் கோண்டாவில், கொட்டைக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆஸ்பத்திரி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

தகவல் :
குடும்பத்தினர்.

(5181)


## VACANCY

- **Designer** (Male or Female)
  பிறிண்டிங் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை
- **Office Receptionist** (Female)
  அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை
  மேலும் அடிப்படை கணக்கு பதிவியல் தெரிந்திருத்தல் வேண்டும்.

உங்கள் சுயவிபரக்கோவையுடன் இம்மாதம் 14ஆம் திகதிக்கு முன்னதாக நேரில் சமூகமளிக்கவும்

ideaS ADVERTISING & PRINTING
936A, K.K.S Road, Naachimar Kovil, Jaffna. (near the naachimar kovil )
021 222 7788

(C-5152)

மஹா கும்பாபிஷேகம் 10.07.2016
ஞாயிற்றுக்கிழமை காலை 9 - 10 மணி

குப்பிழான் கற்கரை பதியிலுறை
கற்பக - விநாயகனே
பேசும் தெய்வமாய் நின்று
உலகாளும் ஓம்கார நாயகனே
கருணைமழை பொழிந்தெம்மை
காத்தருளும் - கற்பகனே
காசி புனித தீர்த்தம் கொண்டு நின்
கும்பாபிஷேகம் காண
கோடிதவம் செய்தோமையா!

தி. ரவீந்திரநாதன் (M.A)
சுபம் அதிபர்

கும்பாபிஷேகம் சிறக்க வாழ்த்துபவர் :
R.M.S TOURIST INN
121A, Patricks Road, Jaffna.
Tel : 077 949 6985

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## வேலை ஆட்கள் தேவை

நெல்லியடியில் இயங்கும் Baby Needs-ற்கு வேலைக்கு ஆண் - பெண் இருபாலாரும் தேவை

தொடர்புகளுக்கு :-
0777 162 272

## சேவை முகவர்

**வீடு, காணிகள் விற்பனைக்கு**

யாழ் மணிக்கூட்டு வீதி V.M.C லேனில் 2 1/2 மணல்தறை லேன், 3 பரப்பு, A-9 நுணாவில் 1/4 மைல் தூரம், 21 பரப்பு, யாழ், நல்லூர் தொகுதியில் விற்க விரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம்.

சுந்தரம்
077 4819 801

## தங்கச் சங்கிலி தவறிவிட்டது

ஓட்டுமடம் சந்திக்கும் அராலிப் பாலத்திற்கும் இடையில் ஒன்றரைப் பவுண் தங்கச் சங்கிலி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் நல்லுள்ளம் கொண்டு ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு
0766 992 271

## பெண்களுக்கான ஆடைகள் தைப்பதில் முன் அனுபவம் உடையவர்கள் தேவை

தொடர்புகளுக்கு:
ANOJH TAILORING
Station Road, Kondavil.

தொலைபேசி :-
076 871 1200

# வடக்கு மக்கள் இழந்த உரிமைகளை நான் மீண்டும் பெற்றுக்கொடுப்பேன்

## ஜனாதிபதி மைத்திரி திடசங்கற்பம்



(கொழும்பு)

**வடக்கு மக்கள் இழந்த அபிவிருத்தி உரிமைகளை மீண்டும் பெற்றுக்கொடுப்பதற்காக அப்பிரதேசங்களின் அபிவிருத்தி குறித்து அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்தி வருகிறது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உபதலைவர் Wencai Zhang உள்ளிட்ட பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலானசந்திப்புநேற்று முன்தினம்வெள்ளிக்கிழமை ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ இல்லத்தில் இடம்பெற்ற பொழுது இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டை கட்டியெழுப்புவதற்காக கிடைக்கும் உதவிகளை ஊழல் மோசடிகளின்றி சரியாக முதலிடுவதற்கு எமது அரசாங்கத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் ஆரம்பிக்கப்பட்டுள்ள செயற்றிட்டங்களை உரிய காலத்தில் நியமங்களுக்கு ஏற்ப நிறைவு செய்வதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. குடிநீர், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் விவசாயத்துறை ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டிருப்பதுடன், இலங்கையின் சகல பிரதேசங்களுக்கும் சமனான முறையில் அபிவிருத்தியைப் பெற்றுக் கொடுப்பதே எமது நோக்கம்.

அதேவேளை, 26 வருடங்களுக்கும் மேலாக இடம்பெற்ற யுத்தத்தின் காரணமாக வடக்குமக்கள் இழந்த அபிவிருத்தி உரிமைகளை மீண்டும் பெற்றுக் கொடுப்பதற்காக அப்பிரதேசங்களின் அபிவிருத்திக்கு அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்தி வருவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

சுமார் 50 வருட காலமாக இலங்கையுடன் சிறந்த தொடர்புகளை பேணிவரும் ஆசிய அபிவிருத்தி வங்கி இதுவரை இலங்கையின் அபிவிருத்திக்காக 7.9 பில்லியன் டொலர்களை உதவியாக வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

## நிழல் அமைச்சரவை தொடர்பில் பாராளுமன்றில் நகைச்சுவை!

(கொழும்பு)

தனது கேள்விக்கு பதில் வழங்குவதற்கு நிழல் அமைச்சுக் கூட பாராளுமன்றில் இல்லை என அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் அநுர திஸாநாயக்க ஆகியோர் நகைச்சுவையாக கூறியுள்ளனர்.

பாராளுமன்றில் நேற்று முன்தின விவாதத்தின் போது நிலையியற் கட்டளை 23 இன் கீழ் 2 இல் விசேட கேள்வியினை பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க முன்வைத்தார்.

தனது கேள்வியினை முன்வைப்பதற்கு முன்னர் குறித்த கேள்விக்கு யார் பதில் வழங்கப் போகின்றார்கள் என பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபாலவிடம் வினவினார்.

இதன்போது அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல என்ன கேள்வி கேட்கப்போகின்றீர்கள் என பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்கவிடம் கேட்டார்.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க நான்தான் கேள்வி கேட்க எழுந்தேன். எனினும் நீங்கள் என்னிடம் கேள்வி கேட்கின்றீர்கள் என கூறினார்.

அப்போது சிரித்தவாறே கேள்வி தொடர்பாக விடயத்தை கூறிய அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல சம்பந்தப்பட்ட விடயத்திற்கான அமைச்சரும், பிரதியமைச்சரும் இல்லை என தெரிவித்தார்.

அத்துடன், உங்கள் கேள்வியினை கேட்பதால் பயன் ஏதும் இல்லை என குறிப்பிட்ட அவர் சிரித்தவாறே நிழல் அமைச்சரவையும் இல்லை என தெரிவித்தார்.

இந்நிலையில், குறுக்கீடு செய்த பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க அமைச்சரும் இல்லை, இராஜாங்க பிரதி அமைச்சரும் இல்லை; ஆகக்குறைந்த நிழல் அமைச்சரும் இல்லை என சிரித்தவாறே கூறியிருந்தார். (இ-10)

## ஐ.நா. ஆணையாளருக்கு எதிராக ஐரோப்பிய நீதிமன்றில் வழக்கு!



(கொழும்பு)

மனித உரிமைகள் பரிந்துரைகளை மீறி இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களுக்கு எதிராக ஐ.நா.மனித உரிமைகள்ஆணையாளர் நாயகம் செயிட் ராத் அல் ஹுசைனுக்கு எதிராக ஐரோப்பிய மனித உரிமைகள் நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தாக்கல் செய்ய வெளி நாட்டிலுள்ள இலங்கை புத்திஜீவிகள் குழுவொன்று தீர்மானித்துள்ளது.

மனிதஉரிமைகள்ஆணையாளர் இலங்கை மீது சுமத்தியுள்ள நிபந்தனைகள், பரிந்துரை 38 இற்கும் 35 இற்கும் முரணானது எனவும் அக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறு வழக்குத் தாக்கல் செய்யப்படின், உலக வரலாற்றில் மனித உரிமைகள் ஆணையாளர் நாயகமொருவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்த முதலாவது சந்தர்ப்பம் இதுவாக பதியப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வழக்கை தொடுப்பதற்கு பிரித்தானியாவிலுள்ள சட்டத்தரணியொருவர் முன்வந்துள்ளதாகவும் வெளிநாட்டிலுள்ள புத்திஜீவிகள் குழுவின் பேச்சாளர் ஒருவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-10)

## வாக்குறுதியை மீறி அமைச்சர்களுக்கு வாகனம் கொள்வனவு செய்த ரணில்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வழங்கிய வாக்குறுதியை மீறி இரு அமைச்சர்களுக்கு அதிசொகுசு வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

சுமார் 118 கோடி ரூபாவை செலவிட்டு அமைச்சர்களுக்காக கொள்வனவு செய்யப்படவிருந்த சொகுசு வாகனங்களை மூன்று மாதங்களுக்கு இடை நிறுத்தியுள்ளதாக பிரதமர் அறிவித்திருந்தார்.

ஆனால் பிரதி அமைச்சர் நிமல் லன்சா மற்றும் அமைச்சர் தலதா அத்துகோரலவுக்கான இரண்டு வாகனங்கள் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஜூன் மாதம் 7 ஆம் திகதி 118 கோடி ரூபாவுக்கு வாகனம் கொள்வனவு செய்வதற்காக ஒதுக்கப்பட்ட குறை நிரப்பு மதிப்பீடு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

எனினும் குறித்த சந்தர்ப்பத்தில் நாட்டில் ஏற்பட்டிருந்த மண்சரிவு, வெள்ளம் மற்றும் சாலாவ வெடிப்பு போன்ற அனர்த்தங்கள் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாமல், வாகனத் கொள்வனவு செய்வதற்கு கோடி கணக்கில் பணம் செலவிடுவது தொடர்பில் அரசாங்கத்திற்கு எதிராக கடுமையாக விமர்சிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-10)

## வற்வரி குறித்து 20ம் திகதி நாடாளுமன்றில் விவாதம்

(கொழும்பு)

வற்வரிகுறித்து எதிர்வரும் 20 ஆம்திகதிநாடாளுமன்றில் விவாதம் நடத்தப்படவுள்ளது.

வற்வரி உயர்த்துவது குறித்த சட்ட மூலம் தொடர்பில் எதிர்வரும் 20 ஆம் திகதி நாடாளுமன்றில் விவாதம் நடத்தப்படும் என அவைத் தலைவர் லக்ஷ்மன் கிரியெல்ல நேற்று முன்தினம் நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

இந்த உத்தேச சட்ட மூலத்தை நிதி அமைச்சர் ரவி கருணா நாயக்க நாடாளுமன்றில் நேற்று முன்தினம் சமர்ப்பித்துள்ளார்.

இந்த சட்டம் விரைவில் அமுல்படுத்தப்பட வேண்டுமெனவும் எப்போது விவாதம் நடத்தப்பட முடியும் எனவும் நிதி அமைச்சர் அவைத் தலைவரிடம் கோரியிருந்தார்.

இதேவேளை, இந்த உத்தேச சட்டம்தொடர்பில்வழக்குத் தாக்கல் செய்யப்படுவதாக அறியக் கிடைத்தது எனவும் அவ்வாறு இல்லையென்றால் 20 ஆம் திகதி விவாதம் நடத்தப்பட முடியும் எனவும் பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபால தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 20 ஆம் திகதி விவாதம் செய்ய கட்சித் தலைவர்களும் இணக்கம் வெளியிட்டுள்ளதாக அவைத்தலைவர் கிரியெல்ல தெரிவித்துள்ளார். (இ-10)

## 3000 மாணவர்களுக்கு பாடசாலைகள் இல்லை

இலங்கையில் இந்த வருடத்தில் மாத்திரம் 3 ஆயிரம் மாணவர்களுக்கு பாடசாலை அனுமதி கிடைக்காமல் இருப்பதாக இலங்கை ஆசிரியர் சங்க செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

அத்துடன் மீகாதென்ன பாடசாலையில் அண்மையில் ஏற்பட்ட குழப்பநிலைகளே பாடசாலைகளுக்கு மாணவர்களை இணைத்துக்கொள்வதில் உள்ள சிக்கல் நிலையினை எடுத்துக் காட்டுவதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் பாடசாலையில் தரம் ஒன்றிற்கு சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கையில் பெற்றோரை கைது செய்வது தவறான செயல் என்றும் தெரிவித்த அவர் பிரதி அமைச்சர் தேவரப்பெருமவின் சம்பவம் தொடர்பில் சந்தர்ப்பம் வரும் வரை காத்திருந்து குறித்த பெற்றோர்களை பொலிஸார் கைது செய்திருப்பதாகவும் அவர் குற்றஞ் சுமத்தியுள்ளார்.

மேலும் பிரதி அமைச்சரின் நடவடிக்கைகளுக்கு பின்புலத்தை ஆராய்வோமானால் தரம் ஒன்றிற்கு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளும் நடைமுறைகளில் உள்ள சிக்கல்களே இதற்கான காரணமாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-10)

## வற் வரி அதிகரிப்புக்கு எதிராக உயர்நீதிமன்றில் வழக்கு-பந்துல

பெறுமதி சேர் வரி திருத்தம் வற்வரி மூலம் மக்களுக்கு கஷ்டத்தை ஏற்படுத்தியமைக்கு எதிராக 7 தினங்களுக்குள் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

பெறுமதி சேர் வரி திருத்தம் இன்றே நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. நாடாளுமன்றத்தில் திருத்தத்தை நிறைவேற்றும் வரை அந்த வரியை அறவிடுவது சட்டவிரோதமானது.

இதனால், இந்த சட்ட விரோத பெறுமதி சேர் வரி அறவீட்டுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர தீர்மானித்துள்ளேன்.

நிழல் அமைச்சரவையின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் தனக்கு நிதித்துறை பொறுப்பு வழங்கப்பட்டுள்ளதால், அதற்கு அமைய இதனை மேற்கொள்ள உள்ளதாகவும் பந்துல குணவர்தன மேலும் தெரிவித்தார். (இ-10)

# விம்பிள்டனில் செரீனா சம்பியன்; 22 கிராண்ட்ஸ்லாம் வென்று சாதனை

விம்பிள்டன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடரில் செரீனா சம்பியன் பட்டம் வென்றார். இதன் மூலம் 22 கிராண்ட்ஸ்லாம் வென்று ஸ்டெபி கிராஃப் சாதனையை சமன் செய்தார்.

விம்பிள்டன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடர் இங்கிலாந்தில் உள்ள லண்டன் நகரில் நடைபெற்று வருகிறது. பெண்களுக்கான ஒற்றையர் பிரிவில் செரீனா வில்லியம்ஸ், ஜெர்மனியின் ஏஞ்சலிக் கெர்பரை எதிர கொண்டார்.

இந்த வருடத்தின் முதல் கிராண்ட்ஸ்லாம் போட்டியான அவுஸ்திரேலிய ஓபனில் செரீனாவை வீழ்த்தி கெர்பர் சம்பியன் பட்டம் வென்றார். இதற்கு தகுந்த பதிலடி கொடுக்க வேண்டும் என்று எண்ணிய செரீனாவிற்கு இந்த இறுதிப்போட்டி சாதகமாக அமைந்தது.

முதல் செட்டில் இருவரும் சம பலத்துடன் விளையாடினார்கள். முதல் சர்வீஸை செரீனா தொடங்கினார். இந்த கேமை எந்தவித சிரமுமின்றி கைப்பற்றினார். 2-வது கேமை கெர்பர் தொடங்கினார். இதில் பிரேக் பாயிண்ட் வரை சென்ற பின் கெர்பர் கைப்பற்றினார். இதனால் தொடக்கத்திலேயே கெர்பர் நெருக்கடிக்கு உள்ளானார்.

அடுத்த சர்வீஸில் புள்ளிகள் ஏதும் கொடுக்காமல் செரீனா கைப்பற்றினார். அடுத்த செட்டை கெர்பர் கைப்பற்றினார். இப்படி 5-5 என சமநிலையில் சென்று கொண்டிருந்தது. 6-வது சர்வீஸையும் செரீனா கைப்பற்றினார். ஆனால் கெர்பர் தனது 6-வது சர்வீஸை கோட்டை விட்டதால் செரீனா 7-5 என முதல் செட்டை கைப்பற்றினார்.

அடுத்த செட்டில் 4-3 என்ற நிலையில் கெர்பரின் 4-வது சர்வீஸை திறமையாக செரீனா கையாண்டு தனதாக்கினார். இதனால் செரீனா 5-3 என முன்னிலை பெற்றார். அடுத்த தனது சர்வீஸை சிறப்பாக முடித்த செரீனா 6-3 என கைப்பற்றி வெற்றி பெற்றார்.




இந்த வெற்றியின் மூலம் அவுஸ்திரேலிய ஓபனில் தோல்வியடைந்ததற்கு பழிதீர்த்தார். மேலும் செரீனா 7-வது முறையாக விம்பிள்டனை கைப்பற்றினார். அத்துடன் 22 கிராண்ட்ஸ்லாம் பதக்கங்கள் வென்று ஸ்டெபி கிராஃபின் சாதனையை சமன் செய்துள்ளார். (க)

## நூல் அறிமுகம்

"ஆறிப்போன காயங்களின் வலி" நூல் அறிமுக விழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் ச.ராதேயன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நூல் பற்றிய கருத்துரைகளை யாழ். பல்கலைக்கழகத்தின் சமூகவியற்துறை விரிவுரையாளர் எஸ்.ஜீவசுதனும், உரும்பிராய் இந்துக் கல்லூரி ஆசிரியர் தி.செல்வமனோகரனும் நிகழ்த்தவுள்ளனர். ஏற்புரையினை நூலாசிரியர் வெற்றிச்செல்வி ஆற்றவுள்ளார். (செ-11)

# விம்பிள்டன் டென்னிஸ் போட்டி பெடரர் அதிர்ச்சித் தோல்வி



விம்பிள்டன் அரையிறுதி போட்டியில் நட்சத்திரவீரர் ரோஜர் பெடரர் அதிர்ச்சி தோல்வியடைந்துள்ளார்.

விம்பிள்டன் ஆடவர் பிரிவு அரையிறுதிப் போட்டியில் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் கனடாவின் மிலோஸ் ரயோனிக்கை எதிர் கொண்டார்.

நீண்ட நாட்களுக்குப்பின் கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வெல்ல பெடருக்கு அதிக வாய்ப்பு இருப்பதாக கருதப்பட்ட நிலையில் அவருக்கு ரயோனிக் கடும் சவாலாக விளங்கினார்.

முதல் செட்டில் 3-ம் நிலையில் இருக்கும் பெடரருக்கு 6-ம் நிலை வீரரான ரயோனிக் அதிர்ச்சி அளித்ததுடன் அந்த செட்டை 6-3 என எளிதில் கைப்பற்றினார்.

இதனால் அடுத்த செட்டில் பெடரர் சுதாரித்து விளையாடினார். இருந்தாலும் கனடா வீரர் கடும் நெருக்கடி கொடுத்ததால் 'டை பிரேக்கர்' வரை சென்றது. இறுதியில் பெடரர் 7(7)-6(3) அந்த செட்டை கைப்பற்றினார். அடுத்த செட்டையும் 6-4 என பெடரர் வீழ்த்தினார்.

மூன்று செட்டுகள் முடிவில் பெடரர் 2-1 என முன்னிலையில் இருந்தார். இதே வேகத்துடன் அடுத்த செட்டையும் பெடரர் கைப்பற்றி இறுதிப்போட்டிக்கு முன்னேறுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், பெடரர் அந்த செட்டை 5-7 என கோட்டைவிட்டார்.

இதனால் வாழ்வா? சாவா? என்பதை நிர்ணயிக்கும் ஐந்தாவது மற்றும் கடைசி செட்டில் இருவரும் களம் இறங்கினார்கள்.

இதிலும் பெடரரால் ஆதிக்கம் செலுத்த முடியவில்லை. இறுதியில் ரயோனிக் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

17 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்ற பெடரர் 18-வது பட்டத்திற்காக போராடி வருகிறார். கடைசியாக 2012-ம் ஆண்டு விம்பிள்டன் பட்டம் வென்றார். அதன்பின் அவரால் ஒரு கிராண்ட்ஸ்லாம் பதக்கங்களை கூட வெல்ல முடியாமல் தவித்து வருவது குறிப்பிடத்தக்கது. (க)

# வடக்கு சபையின் புதிய உறுப்பினராக செ.மயூரன் நேற்று சத்தியப்பிரமாணம்



(குருமன்காடு)

வட மாகாண சபையின் புதிய உறுப்பினராக செ. மயூரன் நேற்று சத்தியப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சுழற்சி முறை ஆசனத்திற்கான உறுப்பினராக இது வரை பதவி வகித்து வந்த ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியைச் சேர்ந்த எம். பி. நடராசா கடந்த மாதம் முதலாம் திகதி தனது பதவியை இராஜினாமா செய்திருந்த நிலையில் அடுத்த சுழற்சி முறை ஆசனத்திற்காக செ.மயூரன் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

இந்நிலையில் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் பங்காளி கட்சியான தமிழீழ விடுதலை இயக்கமான ரெலோ அமைப்பின் உறுப்பினரான இவர் நேற்று அக் கட்சியின் தலைவரும், பாராளுமன்ற குழுக்களின் பிரதி தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் முன்னிலையில் வவுனியா அலுவலகத்தில் வைத்து சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். (செ-2-250)


## திருமண வைபவம் ஒத்திவைப்பு

செல்வன் பா. யசிந்தன், செல்வி த. தர்சினி ஆகிய இருவருக்கும் இன்று (10.07.2016) ஞாயிற்றுக்கிழமை தச்சந்தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆலயத்தில் நடைபெறவிருந்த திருமணம் தவிர்க்க முடியாத காரணத்தால் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

**தகவல்**

(சி-5161)

பாலசுப்பிரமணியம் நீலாம்பிகை குடும்பம், சாமியன் அரசடி நெல்லியடி கிழக்கு, கரவெட்டி. தொ பே: 021 226 1437 / 077 465 8061

தங்கத்துரை பாலேஸ்வரி குடும்பம் அத்தாய், அல்வாய் கிழக்கு, அல்வாய். தொ பே: 076 921 2220 / 076 625 3547



## துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரியின் ஆசிரிய சகோதரத்துவ உறுப்பினரும், அபிவிருத்தி உத்தியோகத்தருமான திரு நா. பிரதாப் அவர்களின் அன்புத் தந்தையார்

**சண்முகம் நாகராஜா**

அவர்கள் 08.07.2016 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார். அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரிய சகோதரத்துவம்**
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி

(சி-5161)

# இலங்கைக்கு உதவுவதற்கு தயார்; ஆசிய அபிவிருத்தி வங்கி அறிவிப்பு

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள நிதியுதவிகள் தற்போதைய அரசாங்கத்தின் கீழ் முறையாக முதலிடப்பட்டிருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது என்றும் இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு தொடர்ந்தும் உதவிகளை வழங்கத் தாம் தயார் என்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளது.


ஆசிய அபிவிருத்தி வங்கியின் உபதலைவர் Wencai Zhang உள்ளிட்ட பிரதிநிதிகள் நேற்று முன்தினம் முற்பகல் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்த போதே இதனைத் தெரிவித்தனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, நாட்டை கட்டியெழுப்புவதற்காக கிடைக்கும் உதவிகளை ஊழல் மோசடிகளின்றி சரியாக முதலிடுவதற்கு தமது அரசாங்கத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

மேலும் ஆரம்பிக்கப்பட்டுள்ள செயற்றிட்டங்களை உரிய காலத்தில் நியமங்களுக்கு ஏற்ப நிறைவு செய்வதற்கு குறித்த பிரிவினர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

குடிநீர், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் விவசாயத் துறைக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, இலங்கையின் சகல பிரதேசங்களுக்கும் சமனான முறையில் அபிவிருத்தியைப் பெற்றுக் கொடுப்பதே தமது நோக்கமாகும் என்றும் தெரிவித்தார்.

26 வருடங்களுக்கும் மேலாக இடம்பெற்ற யுத்தத்தின் காரணமாக வடக்கு மக்கள் இழந்துபோன அபிவிருத்தி உரிமைகளை மீண்டும் பெற்றுக் கொடுப்பதற்காக அப்பிரதேசங்களின் அபிவிருத்திக்கு அரசாங்கம்கூடுதல் கவனம் செலுத்தி வருவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.



ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கையுடன் 50 வருட காலமாக தொடர்புகளை பேணி வருவதுடன், இலங்கையின் அபிவிருத்திக்காக இதுவரையில் 7.9 பில்லியன் டொலர்களை உதவியாக வழங்கியுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியை பிரதிநிதித்துவப்படுத்தி Huiping Huang, Sri widowati, tadatery Hayashi Shr ஆகியோர் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர். (இ-10)


## விவாக சுபமுகூர்த்த பத்திரிகை

அன்புடையீர்!

நிகழும் சுப மங்களகரமான துர்முகி வருஷம் ஆனித் திங்கள் 27 ஆம் நாள் (11.07.2016) திங்கட்கிழமை முற்பகல் 11.25 மணி முதல் 01.27 மணிவரையுள்ள அத்த நட்சத்திரமும், சித்தாமிர்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

திரு. திருமதி குணநாயகம் அமராவதி தம்பதியினரின் கனிஷ்ட புத்திரன் திருநிறைசெல்வன் **மயூரன்** அவர்களுக்கும்

திரு. திருமதி ஏகாம்பரநாதன் தேவராணி தம்பதியினரின் ஏக புத்திரி திருநிறைசெல்வி **கார்த்திகா** அவர்களுக்கும்

ஸ்ரீ காயாரோகண ஸ்வாமி, முத்துமாரி அம்மன் திருவருள் துணைகொண்டு "சங்கிலியன் மண்டபத்தில்" (கிறீன் கிறாஸ் ஹோட்டல்– இல. 33, ஆசீர்வாதம் லேன், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்) திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்துத் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்.

(5164)

திருமதி குணநாயகம் குடும்பத்தினர்
மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி.
தொ.பே. 021 222 5383

(இருவீட்டார் அழைப்பு)

திரு. திருமதி. ஏகாம்பரநாதன் குடும்பத்தினர்
கேசாவில் பிள்ளையார் கோவிலடி,
165, சிவப்பிரகாசம் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 077 844 5400



## 45 ஆம்நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 01.10.1986 — உதிர்வு 27.05.2016

**அமரர் சிவதாஸ் சிவதர்ஜினி**



அன்பும் அறிவும் கலந்து நிற்க
எமது குடும்பத்தில் ஒளிவிளக்காய்
வந்துதித்த எம் மகளே, சோதரியே
உன்னை மறந்து வாழவும் முடியுமோ
எத்தனை யுகங்கள் போனாலும்
என்றென்றும் எங்கள் நினைவுகளில்
நிறைந்து நிற்பாய்

கடந்த 27.05.2016 அன்று இறைபதம் அடைந்த எமது அன்பின் ஒளிவிளக்கு சிவதர்ஜினி அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 10.07.2016 ஞாயிறு பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளதால் அனைத்து அன்பு உள்ளங்களும் அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையில் கலந்து கொள்வதுடன் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். மேலும், அன்னாரது மறைவுச் செய்தி கேட்டு, உள்நாட்டிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் தொலைபேசியிலும் நேரிலும் அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டோருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நக்கா வீதி, கண்டுக்குளி

இங்ஙனம் குடும்பத்தினர்.

(5174)


## இராசி பலன்

10.07.2016
(ஆனி 26, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.00 மணிக்கு
சஷ்டி மாலை 5.15 மணிவரை
உத்தரம் பின்னிரவு 12.30 மணிவரை
சுபநேரம் 8.58 - 10.28 மணிவரை
இராகுகாலம் 4.28 - 5.58 மணிவரை
ஆனி உத்தரம், குமார சஷ்டி விரதம்

| | | | |
|---|---|---|---|
| | | | சூரி |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>அவிட்டம் - சதயம் | | சுக்<br>புத |
| | | | குரு<br>ராகு |
| | சனி<br>செவ் | | சந் |

**மீனம்:** நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும் நாள், வழிபாடு விருப்பத்தை நிறைவேற்றும், முயற்சிகள் எளிதில் கைகூடும்.

**மேடம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டியநாள், கலகலப்பான தகவல்கள் காலை நேரத்திலேயே வந்து சேரலாம், மற்றவர்களின் மனநிலையை அறிந்து செயற்படுவீர்கள்.

**இடபம்:** பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள், கனவுகள் நனவாக அம்பிகையை வழிபடவேண்டிய நாள், சுபகாரியச் செலவுகள் நல்ல முடிவுக்கு வரும்.

**மிதுனம்:** தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும், நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும்.

**கும்பம்:** தேவையற்ற எதிர்ப்புக்களை சந்திக்க நேரிடலாம், குடும்பப் பொறுப்புகள் கூடும், மருத்துவச் செலவுகள் ஏற்படலாம், பிரயாண பயம் உண்டு.

**கடகம்:** ஆலய வழிபாட்டால் ஆனந்தம் காணவேண்டிய நாள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், பொருளாதார நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**மகரம்:** மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும் நாள், வரவேண்டிய பண வரவுகள் வந்து சேரலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சொத்துக்களால் ஆதாயம் உண்டு.

**சிம்மம்:** சிவனை வழிபட்டு சிறப்புக்களை காண வேண்டியநாள், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழும் நாள், நாவன்மையால் நல்ல பெயர் எடுப்பீர்கள்.

**தனுசு:** குடும்ப ஒற்றுமை கூடும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், உறவினர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவர்.

**விருச்சிகம்:** எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், உறவினர் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**துலாம்:** நடப்பதெல்லாம் நன்மைக்கே என நினைக்க வேண்டிய நாள், சுப காரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம்பெறலாம்.

**கன்னி:** விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கிச் சாப்பிடுவதில் அக்கறை காட்டுவீர்கள், புதிய அனுபவங்கள் ஏற்படலாம், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

வளவன்

# மாகாண சபைகளுக்கு மத்தி இடையூறாக இருக்கக்கூடாது

## வடமாகாணசபை உறுப்பினர் கஜதீபன் சுட்டிக்காட்டு





மாகாணத்துக்கு ஒதுக்கப்படுகின்ற நிதிகளை மாகாணசபைகளே சுயமாக செலவு செய்ய மத்திய அரசாங்கம் இடையூறாக இருக்கக்கூடாது என கல்வி இராஜாங்க அமைச்சர் முன்னிலையில் வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இன்றைய அரசாங்கம் கல்விக்கு நாட்டின் தேசிய வருமானத்தில் 6வீதம் வரை ஒதுக்கீடு செய்து செயற்படுவதென்பது வரவேற்கக் கூடிய ஒன்றாகும். இவ்வாறு நிதிஒதுக்கீடு செய்யப்படும் போது அந்தந்த மாகாண கல்வியமைச்சின் ஊடாகவே அந்த நிதிகள் பயன்படுத்த வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார். மானிப்பாய் இந்துக் கல்லூரியில் அண்மையில் இடம் பெற்ற பரிசளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், மத்திய அரசினால் மாகாணங்களுக்கென ஒதுக்கீடு செய்யப்படும் நிதியொதுக்கீடுகள்யாவும்மாகாண சபையால் சுயமாக செலவழிக்க அனுமதிக்கப்படவேண்டும் எனச் சொல்லப்படுகிறது. ஆனால் மாகாண அரசிடம் கல்வி சார்ந்த சகல திட்டங்களையும் மத்திய அரசாங்கம் பெற்றுக்கொண்டு. அதன்படி நிதியொதுக்கீடுகளைச் செய்து செலவு செய்யப்பட வேண்டுமென்பதுதான் முறை யானது. அப்படித்தான் செய்கிறோம் எனச்சொல்லுகிறீர்கள். ஆனால் மாகாண கல்வியமைச்சின் ஆலோசனைக் குழுக்கூட்டங்களில் முடிவெடுக்கப்பட்டு உங்களுக்கு அனுப்பப்பட்ட பல்வேறு செயற்றிட்டங்கள் இறுதி செய்யப் படுகின்ற போது, மத்திய அரசினால் தன்னிச்சையாக மாற்றியமைக்கப்பட்டு எமக்கு தெரிவிக்கப்படுகின்றது.

இச்செயற்பாடு மாகாண அரசாங்கத்தின் அதிகாரங்களில் தலையீடு செய்கின்ற ஒரு செயற்பாடாகும். இது ஆரோக்கியமானது கிடையாது. ஒரு சில மாதங்களுக்கு முன்பு கூட எமது உறுப்பினர்களுடைய ஆலோசனைகளின் படி அபிவிருத்தி செய்யப்பட வேண்டியபாடசாலை களின் பட்டியல் தீர்மானிக்கப்பட்டு மத்திய அரசாங்கத்துக்குக் கொடுக்கப்பட்ட பட்டியல் இறுதி செய்யப்பட்டு மீளவுமிங்கு திரும்பி வருகின்ற போது வேறு பாடசாலைகள் உள்ளடக்கப் பட்டு, முன்னுரிமை அடிப்படையில் தேவையான பாடசாலைகள் நீக்கப்பட்டுகாணப்பட்டமையை குறிப்பிட முடியும். எனவே கல்வியில் மத்திய அரசாங்கம் தன்னுடைய மேலாதிக்க மனநிலையை கைவிட்டு சுமுகமான ஒரு நிலையை ஏற்படுத்த முன்வர வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன்.

அதைப்போன்று இன்றைக்கு நாடுமுழுதும் இருக்கக்கூடிய பிரச்சினைதான் என்றாலும் விசேடமாக வடக்கு மாகாணத்தில் நெருக்கடிமிக்க காலகட்டங்களில் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து செயற்பட்ட தொண்டராசிரியர்கள் தொடர்பாக ஒரு சாதகமான நிலை இன்று ஏற்பட்டு இருக்கிறதென நாம் அறிகிறோம். எனினும் இவர்களின் நியமனங்களை இன்னும் விரைவுபடுத்தி உதவுமாறும் கேட்டுக்கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார் (இ-89)

## இசைப்பேரரங்கு இன்று நிறைவு





அகில இலங்கை கம்பன் கழகம் நடத்தும் ஸ்ரீராம நாம கானாமிர்தம் இசை வேள்வி-2016 இசைப்பேரரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறும்.

இதில் பாட்டு -ஸ்ரீமதி பம்பாய் ஜெயஸ்ரீ, வயலின்- விட் டல் ராமமூர்த்தி, மிருதங்கம்-நெய்வேலி ஆர்.நாராயணன், கஞ்சிரா -கே.வி. கோபாலகிருஷ்ணனும் வழங்கவுள்ளனர்.

இதில் எம்.பி. பாலகிருஷ்ணன், பி.ரஜீவன் குழுவினரின் நாத அரங்கும் இடம்பெறும்.இதில் யாழ். இந்தியத் துணைத் தூதுவர் ஆர்.நடராஜன் தலைமையுரையை நிகழ்த்தவுள்ளார். (இ)

## இசைக்கருத்தரங்கம்



(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைக் கம்பன் கழகம் நடத்தும் ஸ்ரீராம நாம கானாமிர்தம் இசைக்கருத்தரங்கம் இன்று நல்லூர் கம்பன் கோட்டத்தில் காலை 9.30 மணிக்கு இடம்பெறும். சங்கீத வித்துவான் அமரர் என். சண்முகரட்ணம் நினைவரங்கில் இடம்பெறும் இந்த இசை அரங்கில் லய ஞானம் எனும் பொருளில் மதுரை ரி. என். சேஷகோபாலன் இசை உரையாற்றுவார். (இ)




## நிதியைப் பெற அலைகின்றோம் மக்கள் விசனம்

வடமாகாண சபையினால் ஒதுக்கப்பட்ட நிதிகளை பெறுவதற்கு திணைக்களங்களிலும் சென்று தாம் அலைக்கழிவதாக பொதுமக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வாழ்வாதார உதவிகள் மற்றும் பெறுகைகள் தொடர்பில் பொதுமக்கள் வடமாகாண சபை உறுப்பினர்களிடம் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இவ்வாறான கோரிக்கைகளுக்கு வடமாகாண சபை அங்கீகாரம் வழங்கியுள்ள போதிலும் திணைக்களங்களில் அவ்வாறு எதுவும் வரவில்லை என தெரிவிக்கப்படுவதாகவும் இதனால் பொதுமக்கள் திணைக்களங்களுக்கு செல்வதும் திரும்பிவருவதுமாக உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனவே வடமாகாண சபையினால் அங்கீகாரம் வழங்கப்பட்ட பெறுகைகள் தொடர்பில் காலதாமதம் ஏற்படுவது யாரால் என்ற கேள்வியினை பொதுமக்கள் எழுப்புகின்றனர்.

இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என கோரிக்கை விடப்பட்டுள்ளது. (இ-60)

## கூட்டுறவைப் பலப்படுத்துங்கள்

## கூட்டுறவு அமைச்சர் கோரிக்கை





நாட்டின் பொருளாதாரத்தைத் தாங்கும் பிரதான தூண்களாக அரசதுறையும் தனியார்துறையும் விளங்குகின்றன. அத்தோடு, நாட்டின் குறிப்பாக வடக்கு மாகாணத்தின் பொருளாதாரத்தைத் தாங்கும் மூன்றாவது தூணாகக் கூட்டுறவுத்துறையைப் பலப்படுத்துங்கள் என்று வடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கேட்டுக் கொண்டுள்ளார்.

வலி.கிழக்கு வடபகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் சர்வதேச கூட்டுறவு தினவிழா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கொண்டாடப்பட்டது. புத்தூரில் அமைந்துள்ள சங்க மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் ஐங்கரநேசன் இவ்வாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,


கூட்டுறவுத்துறையின் வெற்றி கூட்டுறவாளர்களின் ஒற்றுமையிலேயே அதிகம் தங்கியிருக்கிறது. கடந்த காலங்களில் கூட்டுறவுத் துறையில் நுழைந்த கட்சி அரசியல் தலையீடுகளால் கூட்டுறவாளர்கள் அணிகளாகப் பிரியவேண்டிய நிலை ஏற்பட்டது. இந்நிலை மாற வேண்டும்.

கூட்டுறவுக் கொடி வானவில்லின் ஏழு வண்ணங்களையும் கொண்டுள்ளது. மிகவும் பொருத்தமாகவே இது தேர்வுசெய்யப்பட்டுள்ளது. இந்த ஏழு நிறங்களும் கூட்டாகச் சேர்ந்துதான் எம் மைச் சூழ உள்ள பிரகாசமான இந்த வெள்ளை ஒளியை உருவாக்கியுள்ளது. இந்த வெள்ளொளியைப் பகுத்துப் பார்த்தால்தான் அதன் பின்னால் ஏழு நிறக்கதிர்களும் கூட்டாகச் சேர்ந்திருப்பது தெரியும்.


வெள்ளொளியைப்போன்றே கூட்டுறவுத் துறையும் பிரகாசிக்க வேண்டும். அதற்கு கூட்டுறவாளர்கள் தங்களுக்கிடையே இருக்கக்கூடிய சாதி, மத, அரசியல் பேதங்கள் எல்லாவற்றையும் மறந்து கூட்டாக உழைக்க வேண்டும். இந்தக் கூட்டு உழைப்பு கூட்டுறவாளர்களின் தனித்தனி அடையாளங்களைப் பின்தள்ளி, கூட்டுறவு என்ற பெரும் சக்தியாக ஒளிரும். அப்போது, கூட்டுறவுத்துறை பொருளாதாரத்தின் மிகப்பலமான தூண்களில் ஒன்றாக நிமிரும் என அவர் தெரிவித்துள்ளார்.

சங்கத்தின் தலைவர் தி.தாமரைச்செல்வனின் தலைமையில் நடைபெற்ற கூட்டுறவு தினவிழாவில் கூட்டுறவுத் தினத்தையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களும், தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களும் பரிசுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். மேலும், சங்கத்தின் சிறந்த பணியாளர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. (இ-10)

# நெல்லியடி கிழக்கு புதுத்தோட்டம் ஸ்ரீ விநாயகப் பெருமானின் தீர்த்தோற்சவமும் தீர்த்தக்கேணி நாள் மண் அகழ்வும் 10.07.2016 (ஆனி உத்தரம்)



## பிரதம குருவின் ஆசியுரை




வடமராட்சியில் நெல்லியடி கிழக்கு புதுத்தோட்டம் ஸ்ரீவிநாயகப் பெருமானுக்கு இன்று தீர்த்தோற்சவம். எமது சைவசமயத்தில் முதற் பூசைக்கு உரிய இறைவன் விநாயகப் பெருமான். அவர் புதுத்தோட்டத்தில் திருவருள் புரிகின்றார். அடியார்களுக்கு நல்லருள் புரியும் பெருமான் தீர்த்தத் திருவிழாவில் எல்லோருடைய வாழ்விலும் குளிர்ச்சியும் சிறப்பும் நல்குவாராக .அவரின் திருவருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

புதிய திருக்குளம் அமைக்கும் பணி இன்று ஆரம்பமாகிறது. அப் பணியும் சிறப்புடன் அமையப் பிரார்த்தித்து நல்லாசிகள் வழங்குகிறேன். எல்லோருக்கும் திருவருள் கிடைப்பதாக.

**சா.சோமதேவக் குருக்கள் (பிரதம குரு)**
**அரச கேசரிப் பிள்ளையார் நீர்வேலி.**

## அன்பர்க்கு அருள்பாலிக்கும் ஐங்கரன்



புதுத்தோட்டம் ஸ்ரீவிநாயகர் ஆலயத்திலே இன்று இடம்பெறும் 'தீர்த்தக்கேணி நாள் மண் அகழ்வு நிகழ்வு' வரலாற்றுச் சிறப்பு மிக்கது.

ஓர் ஆலயத்தின் சிறப்புக்கு மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் சிறந்து விளங்கவேண்டும் என்பர். கீர்த்தி மிக்க மூர்த்தியாய், புதுத்தோட்டத்தில் தலச் சிறப்பு மிக்க இடத்தில் கோயில் கொண்டமர்ந்து அடியவர்களுக்கு அருள்பாலித்து வரும் ஸ்ரீவிநாயகருக்கு தீர்த்தக்கேணியும் அமையப் பெறுவது அடியவர்களின் பூர்வ புண்ணிய பலனே ஆகும்.புதுத்தோட்டம் ஸ்ரீவிநாயகர், அடியவர்கள் தம் உள்ளங்களில் ஆவாகனம்செய்துகொண்ட ஆதிமூர்த்தியின் அம் சமாய் திருவுருக் கொண்டவர்; விவசாயம் செய்யும் மக்களுக்கு வேண் டியவற்றை அருளிவரும் அற்புதத்தினால் நேர்த்தி செய்தும் அன்னதானம் வழங்கியும் அடியவர்களால் கொண்டாடப் பெறும் கீர்த்தி மிக்கவர். இந்த ஆலயத்தைக் கடந்து செல்லும் மக்கள் அனைவருமே ஸ்ரீவிநாயகரை வழிப்பிள்ளையாராகக் கொண்டு துதிக்கப்பெறும் வகையில் எல்லோருக்கும் அருளும் எளிமை கொண்டவர்.

ஸ்ரீவிநாயகர் கோயில் கொண்ட தலம் அற்புதமான இட அமைவு கொண்டது. வயல்களும் தோட்டங்களும் நிறைந்த சூழலில் வானுயர்ந்த அரசமரத்துக்கும் வேம்பமரத்துக்கும் இடையே அமைந்த வெளியில் கோயில் கொண்டமர்ந்த ஸ்ரீவிநாயகர், தருக்களின் நடுவே வீற்றிருந்து அடியவர்களைத் திருநோக்குச் செய்துவரும் தலச்சிறப்பு அனைவராலும் விதந்து போற்றப்படுவதாகும்.புதுத்தோட்டம் ஸ்ரீவிநாயகர் ஆலயத்தில் அலங்கார உற்சவமானது, சிறப்புமிக்க ஆனி உத்தர நடேசர் அபிஷேக தினத்தில் தீர்த்தத் திருவிழா காணும் வகையில் இடம்பெற்று வருகின்றது. ஆருத்திரா தரிசனம் வழங்கப்பெறும் நாளில் தீர்த்தத் திருவிழா கொண்டாடப்படுவதும் இந்த ஆலயத் தின் தீர்த்தச் சிறப்பை உணர்த்துவதாகும். இவ்வருடம் தீர்த்தத் திருவிழா இடம்பெறும் இன்றைய ஆனி ஆருத்திரா தரிசன நாளில், ஸ்ரீவிநாயகர் ஆலயத்துக்கான தீர்த்தக்கேணியை நிறுவுவதற்கான மண் அகழ்வின் தொடக்க நாள் அமையப் பெற்றமை ஸ்ரீவிநாயகர் அருளே.

அன்பர்கள், அடியார்கள் அனைவருக்கும் அருள்பாலிக்கும் ஐங்கரனாம் புதுத்தோட்டம் ஸ்ரீவிநாயகரின் அருட் சிறப்பு மிக்க இன்றைய நிகழ்வில் கலந்துகொண்டு எம்பெருமானின் அருள் பெற்றுய்யும் பேறு கிடைக்கப்பெறுவது ஸ்ரீவிநாயகர் திருவருளே. இத்திருவருள் நல்கும் எம்பெருமானைப் போற்றுவோமாக!

**கலாநிதி த.கலாமணி,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

## விநாயகப் பெருமானின் அருளாசிகள் எல்லோருக்கும் கிடைக்கட்டும்



நெல்லியடி கிழக்கு புதுத்தோட்டப் பதியில் வீற்றிருக்கின்ற ஸ்ரீவிநாயகப் பெருமானின் தீர்த்தோற்சவம் ஆனி உத்தர தினமான இன்று நடைபெறுகின்றது. பத்து நாட்கள் அலங்கார உற்சவம் நடைபெறுகின்ற எமது ஆலயத்தில் இறுதி நாளிலே (10 ஆம் நாள்) தீர்த்தோற்சவம் நடைபெறுவது வழக்கம்.மருத நிலத்தருகே மரநிழலில் அமர்ந்திருந்து அருள்பாலிக்கின்ற எம்பெருமானுக்கு இன்றைய தினம் தீர்த்தக் கேணிக்கான நாள் மண் அகழ்வு நடைபெறவுள்ளது. தீராத வினைகளை தீர்க்கின்ற விநாயகப் பெருமானுக்கு தீர்த்தக் கேணி அமையவிருப்பது நாம் பெற்ற பெரும் பேறாகும். விவசாயத்தைப் பிரதான தொழிலாகக் கொண்ட எமது மக்களின் மூலாதாரமே ஸ்ரீவிநாயகப் பெருமான் தான். ஆலய மணி நாதத்தோடு துயிலெழுகின்ற அடியவர்கள் ஐங்கரனை வணங்கிய பின்னர் தமது வேலைகளை ஆரம்பிக்கின்றனர். ஒரு சிறிய மடாலயமாகக் காணப்பட்ட ஆலயம் எமது கிராம மக்களினதும் புலம் பெயர் உறவுகளினதும் பங்களிப்பினால் புதுக் கோலம் பூண்டிருப்பது நாம் செய்த பாக்கியமே.

எமது ஆலய வளாகத்திலேயே அரசும் வேம்பும் இணைந்து காணப்படுகின்றன. இவ்வாறு காணப்படுவது தோஷ நிவர்த்திக்கான அம்சம் என்று ஒரு கருத்து நிலவுகிறது. ஒவ்வொரு வருடமும் எம்பெருமானின் அலங்கார உற்சவத்தின் போதும் ஆலயம் ஏதோ ஒரு வகையில் வளர்ச்சி கண்டு வருவது குறிப்பிடத்தக்கது. இவ்வருடமும் எம்பெருமான் மீது பாடப்பட்ட பத்து இறை இசைப் பாடல்கள் கொண்ட தொகுப்பாகிய 'புதுத்தோட்ட நாயகனே' 02.07.2016 அன்று வெளியிடப்பட்டது. 'மூர்த்தி சிறிதெனினும் கீர்த்தி பெரிதென்பார்கள்' எம் பெரியோர். எமது ஆலயத்தின் பிரதமகுரு சிவசிறீ சா.சோமதேவக்குருக்கள் அவர்களுடைய வழிநடத்தலிலே நித்திய கிரியைகளும் விசேட தினங்களும் சிறப்பாக அனுஷ்டிக்கப்படுகின்றன. எமது கிராம மக்கள் கல்வியிலும் பொருளாதாரத்திலும் கலாசார பண்பாடுகளிலும் வளர்ந்து வருகின்றமைக்குக் காரணம் எம்பெருமானின் அருட்கடாட்சம் என நாம் கருதுகின்றோம்.

ஆலய பரிபாலன சபைத் தலைவர் என்ற வகையிலே ஆலயத்தை வழிநடத்துவதற்கும், எம்பெருமானுக்கு சரியைத் தொண்டுகள் செய்வதற்கும் சந்தர்ப்பம் கிடைத்தது நான் செய்த புண்ணியமே. எல்லோரும் இன்புற்றிருக்க ஸ்ரீ விநாயகப் பெருமானின் அருளாசிகள் கிடைக்கட்டும்.

**வே.கமலநாதன்**
**தலைவர்**
**ஆலய பரிபாலன சபை.**



தொந்திவயிற்றோனே தும்பிக்கைநாயகனே
வந்தமர்ந்தாய் வாசலிலே வரமருளும்
பேரருளே
குந்தி நீயமர்ந்த கொட்டகையின்
கோலமின்று
நந்தியொடு கோபுரங்கள் ஆகமத்து
வேதங்கள்
வளர்பிறையாய் உன்னுயர்வுஊரெல்லாம்உன்
பேச்சு
உன் வளவில் நீயாட திருக்குளமும்
ஆவதற்கு
இளம்பிறையே வரம் தந்தாய் மண் அகழ் வோம் இன்று
பாலகணபதியே தொழுவோம் போற்றி போற்றி

கி.பிரகலாதன்

## வாழ்த்துச் செய்தி



நெல்லியடி கிழக்கு புதுத்தோட்ட ஸ்ரீவிநாயகர் ஆலயத்தின் தீர்த்தத்திருவிழா இடம்பெறும் ஆனி உத்தர நன்னாளில் (10.07.2016) இவ்வாலயத்திற்கான தீர்த்தக்கேணி ஒன்றின் புத்தமைப்பிற்கான கால்கோளாய் நாள் மண் அகழ்வு இடம்பெறும். இந்த அரிய சந்தர்ப்பத்தில் இதற்காய் ஈடுபட்டுழைக்கும் யாவருக்கும் விநாயகப் பெருமானின் திருவருள் சித்திக்க வேண்டுவதிலும் வாழ்த்துவதிலும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

புதுத்தோட்டம் என்ற கிராமத்தின் மத்தியில் நின்று அருள்பாலிக்கும் விநாயகரின் ஆலயமானது இக் கிராம மக்களின் ஒருங்கிணைப்பு மையமாகவும் சமூகத்தை நோக்கிய சேவைகளின் நிலையமாகவும் இருப்பது முக்கியமானது. மக்களின் உள்ளத்தை கோயிலாக்கிடும் ஆன்மீகப் பணிக்கு இவ்வாலயத்தின் பெரும்பணி போற்றப்பட வேண்டியதாகும். திருப்பணிக்கான நிதியம் ஒன்றினையும் இன்றையநாளில் ஆரம்பிக்கும் இவ்வாலயத்தின் சமூகப் பணிகள் பல்கிப் பெருகவும் துயர் தீர்த்தோம் என்று தீர்த்தத்தின் பயனை மக்கள் எல்லோரும் அனுபவிக்கவும் இறையாசி இவர்கள் யாவருக்கும் தொடர்ந்திருக்கவும் விநாயகப் பெருமானை வேண்டி நிற்கின்றேன்.

**திரு.ச.சிவஸ்ரீ, பிரதேச செயலாளர்,**
**பிரதேச செயலகம், கரவெட்டி.**

## ஸ்ரீ விநாயக அருட் சுடரே!



புதுத் தோட்ட மண்
'முதலே'!
புதுமை காட்டும் வேம்பரச
'விருட்சனே'!
விளை நிலத்து
'வித்தகனே'–எங்கள்
விழி பார்த்து அருள் தரும்
'ஸ்ரீ விநாயகனே'!
தீர்த்தோற்சவ திருநாளாம் ஆனி உத்தரத்தில்
தீர்த்தக் கேணிக்கும் 'திருவடி' வைத்திட்டாய்
தித்திக்கும் நாளும் நின்மதியின் 'நிறைகணமே'
எத்திக்கும் பரவட்டும் ஸ்ரீ விநாயக அருட்சுடரே!

**கி.கலைச்செல்வன் ஆசிரியர்.**

## அனுசரணை


**நெல்லியடி மெடிக்கல்ஸ்**
மத்திய மகா
வித்தியாலய வீதி,
நெல்லியடி

**நெல்லியடி கிளினிக்**
மத்திய மகா
வித்தியாலய வீதி,
நெல்லியடி

**சாதனா ஸ்ரோர்ஸ்**
நெல்லியடி,
புதுத்தோட்டம்.

**தீபன் கேபிள் இணைப்பகம்**
முடக்காடு,
நெல்லியடி.

**நல்லையா அகிலன் குடும்பம்**
முடக்காடு,
நெல்லியடி.

# மின்சார சபை ஊழியர்களின் நிதி மோசடி விசாரணையைத் துரிதப்படுத்த பணிப்பு!

இலங்கை மின்சார சபை ஊழியர்களின் ஊழியர் சேமலாப நிதி, நிதியத்தின் 300 கோடி ரூபாய் நிதியானது தனியார் நிறுவனம் ஒன்றினால் முதலீடு செய்யப்பட்டு காணாமற்போயுள்ள சம்பவம் தொடர்பான விசாரணைகளை துரிதமாக முன்னெடுக்குமாறு அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய அதிகாரிகளை பணித்துள்ளார்.

மின்சார சபையின் அனைத்து தொழிற்சங்க பிரதிநிதிகளுடனும் நேற்று இடம் பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் குறித்த விசாரணையுடன தொடர்புடைய கோவைகள் சில காணாமற்போயிருப்பதாகவும், அது குறித்து தனியான விசாரணைகளை முன்னெடுக்குமாறும் உத்தரவு பிறப்பித்துள்ளதோடு, தற்போது பொலிஸ் நிதி மோசடி பிரிவினர் இந்த விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் அமைச்சர் தொரிவித்தார்.

இதேவேளை இதனுடன் தொடரபுடையவர்கள் மிக விரைவில் அடையாளம் காணப்படவுள்ளதாகவும், அவ்வாறானவர்களுக்கு எதிராக பக்கச்சார்பின்றி சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் எதிர்காலத்தில் மின்சாரசபை ஊழியர் சேமலாப நிதியத்துக்கான பொறுப்பான சபை ஒன்று அமைக்கப்படவுள்ளதாகவும் அவர் தொரிவித்தார். (இ-10)

# தெஹிவளை கடற்பரப்பில் புதிய கல்வெளி ஜனவரியில்

மீனவர்கள் பலரது உயிரிழப்புக்கு காரணமாக அமைந்த தெஹிவளை கல்கிஸ்ஸ கடற்பரப்பில் உள்ள கற்பாறையினை அகற்றுவதற்கு மீன்பிடி அமைச்சு தீர்மானித்துள்ளது.

குறித்த கற்பாறையினை அகற்றும் நடவடிக்கையானது ஜனவரி மாதம் ஆரம்பிக்கவுள்ளதோடு, இதனையடுத்து புதிய கல்வேலி அமைக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மீன்பிடி அமைச்சில் இடம் பெற்ற கலந்துரையாடலிலே அமைச்சர் மகிந்த அமரவீர இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை குறித்த கடற்பரப்பில் அமைந்துள்ள கற்பாறையினால் மீனவர்கள் பலியாவதாகவும் மீன்பிடி படகுகளும் சேதமடைவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கடந்த 4ஆம் திகதி அப்பகுதி மீனவர்கள் சிலர் புகையிரத பாதையை மறித்து போக்குவரத்திற்கு தடை ஏற்படுத்தும் வகையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

# ஆயுர்வேதம், சுதேச மருத்துவம் வலுப்படுத்தப்படும்- ஜனாதிபதி

ஆயுர்வேதம் மற்றும் சுதேச மருத்துவ முறையை வலுப்படுத்துவதற்காக தற்போதைய அரசாங்கம் அரச கொள்கைக்கு அமைய அர்ப்பணிப்புடன் இருப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஆயுர்வேதம் மற்றும் சுதேச மருத்துவ முறையை முன்னெடுத்துச் செல்வதற்காக தேவையான வளங்கள் தொடர்ந்தும் வழங்கப்படும் எனவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பமான ஆயுர்வேத எக்ஸ்போ 2016 கண்காட்சியை திறந்து வைத்து பேசும் போதே ஜனாதிபதி இதனை தெரிவித்தார்.

இந்தியா, சீனா ஆகிய நாடுகளின் பேச்சாளர்கள் மற்றும் புத்திஜீவிகள் கலந்து கொள்ளும் சுதேச மருத்துவ கருத்தரங்கும் இங்கு நடைபெறவுள்ளது.

இதன்மூலம் இலங்கையின் சுதேச மருத்துவர்கள் அவர்களின் அறிவையும் அனுபவத்தையும் பரிமாறிக்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

# ஜனாதிபதியின் பாதுகாப்பு பிரிவு வாகன விபத்துக்களில் சிக்கி 6 பேர் உயிரிழப்பு

ஜனாதிபதியின் பாதுகாப்பு பிரிவு வாகன விபத்துக்களால் இது வரை 6 பேர் உயிரிழந்துள்ளதாக அரசா ங்கம் அறிவித்துள்ளது.

2015ம் ஆண்டு ஜனவரி மாதம 9ம் திகதி முதல் 2016ம் ஆண்டு மார்ச் 31ம் திகதி வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்துக்களிலேயே இந்த உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த காலப்பகுதியில் ஜனாதிபதியின் பாதுகாப்பு பிரிவு வாகனங்கள் 10 தடவைகள் விபத்துக்களுக்குள்ளாகயுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற வாய்மூல கேள்விக்கான நேரத்தில் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில இது குறித்து கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்கு தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார பிரதியமைச்சர் நிரோஷன் பெரேராவினால் சமர்ப்பிக்கப்பட்ட பதி வேட்டில் இவ்வாறு குறிப்பிடப்ப ட்டுள்ளது.

குறித்த காலப்பகுதியில் 10 விபத்துகள் ஏற்பட்டுள்ளன. இதில் 11 பேர் காயமடைந்துள்ளதாகவும் 6 பேர் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் விபத்துக்களை குறைப்பதற்கு வினைத்திறன் வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-10)




- 988 - டப்ளின் நகரம் அமைக்கப்பட்டது.
- 1212 - லண்டன் நகரின் பெரும் பகுதியை தீ அழித்தது.
- 1460 - வோர்விக் துணைநிலை மன்னர் ரிச்சார்ட் நெவில் இங்கிலாந்தின் ஆறாம் ஹென்றி மன்னரின் படைகளை நோர்ததாம்ப்டன் நகரில் இடம்பெற்ற சமரில் தோறகடித்து மன்னரைச் சிறைப்பிடித்தான்.
- 1553 - லேடி ஜேன் கிறே இங்கிலாந்தின் அரசியாக முடி சூடினாள்.
- 1778 - அமெரிக்கப் புரட்சி: பிரான்சின் பதினாறாம் லூயி பிரித்தானியா மீது போரை அறிவித்தான்.
- 1796 - ஒவ்வொரு நேர் முழு எண்ணும் அதிகபட்சம் மூன்று முக்கோண எண்களின் கூட்டுத்தொகையாகக் கொடுக்கலாம் என்பதை கார்ல் ஃப்ரெடெரிக் காஸ் கண்டுபிடித்தார்.
- 1800 - உருது, இந்தி மற்றும் உள்ளூர் மொழிகளை ஊக்கப்படுத்தவென கல்கத்தாவில் போர்ட் வில்லியம் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.
- 1806 - வேலூர் சிப்பாய் எழுச்சி: தமிழ்நாட்டில் வேலூர்க் கோட்டையில் நிகழ்ந்த எழுச்சியில் நூற்றுக்கணக்கான ஆங்கிலப் படையினர் கொல்லப்பட்டனர்.
- 1890 - வயோமிங் ஐக்கிய அமெரிக்காவின் 44வது மாநிலமாக சேர்க்கப்பட்டது.
- 1909 - ஜெர்மனியின் எம்டன் நாசகாரிக் கப்பல் சேவைக்கு விடப்பட்டது.
- 1925 - சோவியத் ஒன்றியத்தின் செய்தி நிறுவனம் டாஸ் ஆரம்பிக்கப்பட்டது.
- 1925 - இந்திய ஆன்மிகத் தலைவர் மெஹெர் பாபா இறக்கும் வரையான (44-ஆண்டுகள்) மௌன விரதத்தை ஆரம்பித்தார். இந்நாள் அமைதி நாளாக அவாரின் பக்தர்களால் கொண்டாடப்படுகிறது.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: போலந்தின் ஜெட்வாப்னி நகரில் நூற்றுக்கணக்கான யூதர்கள் நாசி ஜெர்மனியரினால் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1951 - கொரியப் போர்: அமைதிப் பேச்சுக்கள் ஆரம்பமாயின.
- 1956 - இலங்கை, யாழ்ப்பாணத்தில் நல்லூர் கந்தசுவாமி கோயில், வண்ணார்பண்ணை சிவன் கோவில், வரதராசப்பெருமாள் கோயில் ஆகியவற்றின் உள்ளே முதற்தடவையாக குறைந்த சாதியினர் சென்று வழிபட அனுமதிக்கப்பட்டனர்.
- 1958 - அலாஸ்காவில் மிகப் பெரும் சுனாமி அலை (524 மீட்டர் உயரம்) பதியபபட்டது.
- 1962 - உலகின் முதல் தொலைத் தொடர்பு விண்கலமான டெல்ஸ்டார் விண்ணில் ஏவப்பட்டது.
- 1973 - வங்காள தேசத்தை அங்கீகரிக்கும் தீர்மானம் பாகிஸ்தான் சட்டசபையில் நிறைவேற்றப்பட்டது.
- 1973 - பஹாமாஸ் பொதுநலவாயத்தின் கீழ் முழுமையான விடுதலை அடைந்தது.
- 1978 - மௌரித்தானியாவில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியை அடுத்து அதிபர் மொக்தார் டாடா பதவியிழந்தார்.
- 1991 - தென்னாபிரிக்கத் துடுப்பாட்ட அணி பன்னாட்டுத் துடுப்பாட்ட வாரியத்தில் மீண்டும் சேர்க்கப்பட்டது.
- 1991 - யாழ்ப்பாணம் ஆனையிறவு இராணுவத் தளத்தின் மீது விடுதலைப்புலிகள் போர் தொடுத்தனர்.
- 1992 - போதைப்பொருள் கடத்தல் மற்றும் பல குற்றங்களுக்காக முன்னாள் பனாமாத் தலைவர் மனுவேல் நொரியேகா புளோரிடாவில் 40 ஆண்டு கால சிறைத் தண்டனை பெற்றார்.
- 2006 - இந்தியாவில் ஸ்ரீஹறிகோட்டாவில் இருந்து இன்சாட்-4 செயற்கைக் கோளை ஏற்றிச் சென்ற ஜி.எஸ்.எல்.வி. விண்கலம் இயந்திரக் கோளாறினால் கடலில் வீழ்நதது.

**பிறப்புகள**

- 1925 - மகத்திர் மொகமட், மலேசியப் பிரதமர்.
- 1944 - கே. எஸ். பாலச்சந்திரன், ஈழத்து எழுத்தாளர், நாடகக் கலைஞர். (இ. 2014)
- 1949 - சுனில் கவாஸ்கர், இந்தியத் துடுப்பாட்ட வீரர்.

**இறப்புகள**

- 1990 - காந்தரூபன், விடுதலைப் புலிகளின் கரும்புலிகளில் ஒருவர். (பி. 1971)
- 2000 - நாவேந்தன், ஈழத்து எழுத்தாளர் .(பி. 1932)
- 2014 - சோரா சேகல், இந்தியத் திரைப்பட நடிகை. (பி. 1912)


**சிறப்பு நாள்**

- பஹாமாஸ் - விடுதலை நாள். (1973)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 150 | 90 | 160 | 120 | 150 |
| உருளைக்கிழங்கு | 110 | 100 | 80 | 100 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 700 | 800 | 600 | 600 | 600 | 200 |
| தக்காளி | 260 | 300 | 110 | 240 | 240 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 80 | 100 | 80 | 120 |
| கோவா | 160 | 200 | 100 | 160 | 160 | 180 |
| கரட் | 250 | 400 | 150 | 160-250 | 250 | 250 |
| பூசணி | 140 | 200 | 130 | 180 | 160 | 100 |
| புடோல் | 120 | 100 | 150 | 150 | 80 | 80 |
| வாழைக்காய் | 120 | 150 | 90 | 100 | 160 | 120 |
| சின்ன வெங்காயம் | 120 | 180 | 120 | 120 | 160 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 70 | 80 | 80 | 90 |
| பாகற்காய் | 250 | 400 | 160 | 280 | 160 ; | 200 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 60 | 120 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 140 | 200 | 100 | 160 | 140 | 120 |
| பயற்றங்காய் | 200 | 200 | 120 | 200 | 80 | 200 |
| லீக்ஸ் | 160 | 200 | 120 | 120 | 200 | 200 |
| பீற்றூட் | 150 | 150 | 100 | 100 | 160 | 150 |
| கறிமிளகாய் | 400 | 400 | 300 | 400 | 240 | 200 |
| முருங்கைக்காய் | 350 | 400 | 350 | 350 | 300 | 500 |
| போஞ்சி | 200 | 200 | 150 | 200 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 180 | 50 | 50 | 120 | 100 | –. |
| கீரை - 1பிடி | 30 | 20 | 15 | 30 | 30 | 15 |
| தேசிக்காய் | 200 | 200 | 220 | 160 | 200 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 50 | 15-25 | 40 | 20-30 | 40 |
| இராசவள்ளி | 180 | 300 | – | – | – | 160 |
| வெங்காயப்பூ | 200 | 300 | 200 | 250 | 200 | 250 |
| முள்ளங்கி | 50 | 100 | 60 | 80 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 30 | 50 | 15 | 30 | 40 | 25 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 10 | 20 | 15 |
| ஈரப்பலா | 60 | 100 | 40 | 60 | 60 | 60 |

# கே.எஸ்.பாலச்சந்திரன்



கே. எஸ். பாலச்சந்திரன் என்று அறியப்படும் கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் பாலச்சந்திரன் ஈழத்தின் அறியப்பெற்ற பல்துறைக் கலைஞர். நகைச்சுவை, வானொலி, நாடகம், நடிப்பு, திரைப்படம், தொலைக்காட்சி, எழுத்து எனப் பல துறை களில் தன் முத்திரையினைப் பதித்தவர். ஈழத்து கலைத் துறைகளில் நெடுங்காலம் செயற்பட்ட இவர், பின்னர் கனடாவிற்கு குடிபெயர்ந்து தொடர்ந்து இயங்கி வந்தார். யாழ்ப்பாண மாவட்டம், கரவெட்டியில் பாலச்சந்திரன் பிறந்தார். இவர கரவெட்டி விக்னேசுவராக் கல்லூரியிலும், யாழ் மத்திய கல்லூரியிலும் கல்வி கற்றார். இளமைக் காலத்தில் உதைப்பந்தாட்டம், துடுப்பாட்டம், இறகுப்பந்தாட்டம் உட்பட்ட பல்வேறு விளையாட்டுக்களில் ஈடுபட்டார். பாலச்சந்திரன் பல ஆண்டுகள் இலங்கை உள்நாட்டு வருமான வரித்திணைகளத்தில் பணி புரிந்தவர்.


# இலங்கை - சீனா இடையே சுதந்திர வர்த்தக உடன்பாடு

## கொழும்பில் சீன வெளிவிவகார அமைச்சர் தகவல்

(கொழும்பு)

**இலங்கையில் பெரியளவிலான உட்கட்டமைப்பு மற்றும் தனியார் முதலீடுகளை சீனா தொடர்ந்து மேற்கொள்ளும் என்றும், இலங்கையுடன் விரைவில் சுதந்திர வர்த்தக உடன்பாடு கையெழுத்திடப்படும் என்றும் சீன வெளிவிவகார அமைச்சர் வாங் ஜி தெரிவித்துள்ளார்.**





மூன்று நாட்கள் பயணமாக நேற்று முன்தினம் கொழும்பு வந்த, சீன வெளிவிவகார அமைச்சர் வாங் ஜி, நேற்று முன்தினம் மாலை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவைச் சந்தித்துப் பேச்சு நடத்திய பின்னர் நடத்திய கூட்டு செய்தியாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

'வரலாற்று ரீதியாக எமக்கிடையில் உள்ள உறவு, எமது ஆழமான தொடர்புகளையும் வலுவான அரசியல் அடித்தளத்தையும் பரஸ்பர நலன்கள் மற்றும் சமூக ஆதரவையும் உறுதிப்படுத்துகிறது. அனைத்துலக நிலைமைகளிலோ, எமது உள்நாட்டு நிலைமைகளிலோ எத்தகைய மாற்றங்கள் ஏற்பட்டாலும் பரஸ்பர உதவிகளும் எமது மூலோபாய ஒத்துழைப்பும் எப்போதும் நீடித்து நிற்கும்.

இந்தியப் பெருங்கடலின் கப்பல் போக்குவரத்து கேந்திரமாக இலங்கையை அபிவிருத்தி செய்ய எம்மால் உதவ முடியும். துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள், தொடரூந்து, விமான நிலையங்களின் அபிவிருத்திக்கு, சீனாவின் ஒத்துழைப்புகள் தொடர்ந்து கிடைக்கும்.

சீனாவில் இருந்து இலங்கைக்கு அதிகளவு சுற்றுலாப் பயணிகள் செல்வதற்கு சீனா ஊக்கமளிக்கும். நீலக் கடல் பொருளாதாரம், கடல் பாதுகாப்பு மற்றும் கடல்சார் நிலையம் என்பனவற்றில் தொடர்ந்து இணைந்து செயற்பட இணக்கம் காணப்பட்டுள்ளது. அனைத்துலக விவகாரங்கள் தொடர்பாகவும் இருதரப்பிலும் கலந்துரையாடப்பட்டதுடன், உறுதியான நிலையைக் கடைப்பிடிக்கவும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான ஒத்துழைப்பு எந்தவொரு மூன்றாவது நாட்டையும் இலக்காகக் கொண்டதல்ல. எமக்கிடையிலான மதிப்புமிக்க உறவுகள் ஏனைய நாடுகளைப் பாதிக்காது.

அபிவிருத்தி இலக்கை எட்டுவதற்கு ஏனைய தெற்காசிய நாடுகளுடன் நெருக்கமாகப் பணியாற்றுவதற்கு நாம் தயாராக இருக்கிறோம்" என்றும் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பிற்பகல் கொழும்பு வந்த சீன வெளிவிவகார அமைச்சர் வாங் ஜி, நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க, மூலோபாய அபிவிருத்தி மற்றும் அனைத்துலக வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரம ஆகியோரையும் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார். (இ-10)

## கண்டியில் தலாய்லாமா குறித்த கண்காட்சி
## சீனா ஆழ்ந்த அதிருப்தி



சீன வெளிவிவகார அமைச்சரின் இலங்கை பயணத்துக்கு முன்னதாக, கடந்த புதன்கிழமை தலாய்லாமா தொடர்பான ஒளிப்படக் கண்காட்சி ஒன்று கண்டியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளது.

சீன வெளிவிவகார அமைச்சர் வாங் ஜி யின் இலங்கை பயணத்துக்கு இரண்டு நாட்கள் முன்னதாக கண்டியில் தலாய்லாமா தொடர்பான ஒளிப்படக் கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டமை தொடர்பாக சீனா ஆழ்ந்த அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக இலங்கை வெளிவிவகார அமைச்சுக்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளதாக சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் கொழும்பு ஆங்கில நாளிதழிடம் தெரிவித்துள்ளார்.

எனினும்இதுதொடர்பாகதாம்எதையும் அறியவில்லை என்று இலங்கை வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மஹிஷினி கொலன்னே இந்திய ஊடகம் ஒன்றிடம் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, சீனா உறுதியாக எதிர்த்து வரும் தலாய்லாமாவுக்கு இலங்கை பல்வேறு சந்தர்ப்பங்களில் நுழைவிசைவு மறுத்து வரும் நிலையில், தலாய்லாமா தொடர்பான ஒளிப்படக் காட்சி நடத்தப்பட்டமை சீனாவுடனான உறவுகளுக்கு மறைமுக பாதிப்புகளை ஏற்படுத்தும் என்று இலங்கை - சீன சமூக கலாசார அமைப்பு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக இலங்கை வெளிவிவகார அமைச்சுக்கு அந்த அமைப்பு கடிதம் ஒன்றையும் அனுப்பியுள்ளது. (இ-10)

## வாரம் ஒரு தகவல்
### ஆசிரியரும் மாணவரும்

*மௌலானா அபுல்கலாம் ஆஸாத் சிறந்த தேச பக்தர். நிறைந்த புலமையாளர். இளம் பருவத்திலேயே இவர் தம் மேலோங்கிய கல்வியாலும், வியத்தகு திறனாலும் புகழ் பெற்றிருந்தார். கவிஞர்களே பாராட்டும் அளவுக்கு கவிதை பாடும் வல்லமையும் இவரிடம் அமைந்திருந்தது.*

*ஆஸாத்திடம் பல மாணவர்கள் கல்வி பயின்று வந்தனர். முதிர்ந்த வயதுடைய ஒருவரும் கல்வியின் மீது கொண்டுள்ள ஆர்வத்தால் இவரிடம் கல்வி கற்று வந்தார்.*

*ஆஸாத் இம் முதியவருக்குச் சில பாடங்களைச் சொல்லிக் கொடுத்தார். மறுநாள் அவற்றைக் குறித்து ஆஸாத் இவரிடம் கேட்ட போது, இவர் தப்பும் தவறுமாகச் சொன்னார். ஆஸாத்துக்குக் கோபம் வந்து விட்டது. எரிச்சலும் வெறுப்பும் கொண்ட அவர் அம் முதிய மாணவரைப் பார்த்து , எவ்வளவு சொல்லித்தந்தாலும் உமக்குக் கல்வி வராது. அமைதியாக வீட்டுக்குப் போய் புல்லைத் தின்னும் என்று சொல்லிவிட்டார்.*

*இம் மொழிகளைக் கேட்ட அம் முதியவர் துன்பத்தால் வாடினார். தமது திறமைக் குறைவுக்கு வருந்திய அவர், அன்று எதுவுமே சாப்பிடவில்லை.*


*இச் செய்தியை ஆஸாத்தின் தந்தையார் அறிந்தார். அவர் தனது மகனிடம் என்னப்பா, உனக்கு வெட்கம் இல்லையா? உன் தந்தையின் வயதைக் கொண்ட அவரை இவ்வாறு வசைமாரி பொழிந்து விட்டாயே ! இதற்காக நீ அவரிடம் போய் மன்னிப்புக் கேட்டு அவரைச் சாப்பிடச் சொல் எனக் கூறினார்.*

*ஆஸாத் அம் முதியவரிடம் சென்று தாம் நடந்து கொண்ட முறைமைக்கு மன்னிப்புக் கோரினார். அவர் தம் ஆசிரியரிடம் நான் தங்கள் மாணவன். என்னைத் தண்டிக்கின்ற உரிமை தங்களுக்குண்டே என மொழிந்தார்.*

*இதைக் கேட்ட ஆஸாத்தின் உள்ளம் கரைந்து விட்டது. அப்பெரியவரின் பண்பை நினைந்து நினைந்து வியப்புற்றார். அவர் உணவுண்டு முடியும் வரை ஆஸாத் அவர் அருகிலேயே இருந்தார்.*

**கவிஞர் தே.ப.பெருமாள்**

## பதவியில் இருந்த காலத்தில் இனவாதத்தை போதித்த விமல்



தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச, பதவியில் இருந்த காலத்தில் சிங்கள பௌத்த இனவாதத்தை போதித்தார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் விமல் வீரவன்ச வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சராக கடமையாற்றியிருந்தார்.

ராவணா பலய அமைப்பிற்கு விமல் வீரவன்ச பதவி வகித்த காலத்தில் ஏழு வாகனங்களை வழங்கியுள்ளார் என பாரிய நிதி மோசடிகள் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

ராவணா பலய அமைப்பின் அமைப்பாளர் இத்தேகந்தே சத்தாதிஸ்ஸ தேரரை போலியான முறையில் அமைச்சின் பணியாளர் பட்டியலில் இணைத்து, மோசடியான முறையில் ஏழு வாகனங்களை அவரது பெயரில் வழங்கியுள்ளார்.

அரச பொறியியல் திணைக்களத்தின் பயன்பாட்டுக்குரிய வாகனங்கள் ஏழே இவ்வாறு வழங்கப்பட்டுள்ளன.

இந்த விடயம் குறித்து விசாரணை நடத்தும் நோக்கில் இத்தேகந்தே சத்தாதிஸ்ஸ தேரருக்கு எதிர்வரும் 13 ஆம் திகதி ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

அரசியல் பொறியியல் திணைக்களத்தின் பிரிவு ஒன்றுக்கு வாடகை அடிப்படையில் ராஜகிரிய பிரதேசத்தில் வாகனம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளும் வாகனங்கள் வெளி நபர்களுக்கு வழங்கப்பட முடியாது.

திணைக்களத்தின் வாகனங்களை குறித்த பௌத்த பிக்கு பயன்படுத்த அனுமதியில்லை என விசாரணைகளின் ஊடாக தெரிய வந்துள்ளது.

ராவணா பலய அமைப்பு சிங்கள பௌத்த இனவாதத்தை தூண்டும் அமைப்பாக செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

# இணுவையம்பதி ஞானலிங்கேச்சுரர் திருக்கோவில்
# தெய்வத் தமிழ் திருக்குடமுழுக்கு



## அறப்பணி மையமாக இணுவையம் பதியிலே செந்தமிழ் சிவாலயம்



அன்பே சிவம் எனும் உயரிய கோட்பாட்டை தன் தாரக மந்திரமாகக் கொண்டு தமிழர்களின் பழம்பெரும் நாகரிகமான சிந்துவெளியில் இற்றைக்கு 5000 ஆண்டுகளுக்கு முன்பு தோற்றம் பெற்ற சிவவழிபாடு பக்தியையும், தொண்டையும் போதிக்கின்ற வாழ்நெறியாக அன்புவழிச் சைவமாக தொன்று தொட்டு பழந் தமிழகத்திலும் சிவபூமி என்கின்ற ஈழமணித் திருநாட்டிலும் வழங்கி வருகின்றது.

கொடிய யுத்தத்தினாலும் அதன் விளைவுகளாலும் சின்னா பின்னமாக்கப்பட்டுள்ள ஈழத் தமிழினத்தின் நலிவுற்ற தன்மையைப் பயன்படுத்தி மதமாற்றமும் பண்பாட்டுச் சிதைவுகளும் இன்று தொடர்கதையாகிவிட்டது. இந் நிலையில் புலம்பெயர்ந்து சுவிஸ் நாட்டிற்கு காலச் சூழ்நிலையால் குடியேற நேரிட்டாலும் சைவத் தமிழுணர்வில் சிறிதும் வழுவாது உடல், பொருள், ஆவியை அர்ப்பணித்து செயற்பட்டு வரும் சிவருசி சசிகுமார் ஐயா தலைமையிலான சைவநெறிக் கூடத்தினர் அங்கு போன்று இங்கும் எம் ஈழமணித் திருநாட்டிலும் செந்தமிழ் சிவாலயமாக ஞானலிங்கேச்சரத்தை உருவாக்கி எம் தாய்த்திரு நாட்டிற்கு அர்ப்பணித்திருப்பது வார்த்தைகளால் வடிக்கமுடியாத மகோன்னதமான பணியாகும்.

மறைமலை அடிகளாராலும், குன்றக்குடி அடிகளாராலும் 19 ஆம், 20 ஆம் நூற்றாண்டுகளில் பிரசார இயக்கங்களாக முன்னெடுக்கப்பட்ட தெய்வத்தமிழ் வழிபாடு, திருமுருக கிருபானந்தவாரியாரின் பேரனார் மு.பெ.சத்தியவேல் முருகனாரால் 21 ஆம் நூற்றாண்டிற்கு ஏற்றவகையில் தெய்வத் திருமுறை மந்திரங்களோடு இலக்கணம் வகுக்கப்பட்டிருக்கின்றது.

இடைக்காலத்தில் பல நூறு ஆண்டுகள் ஏட்டு வடிவிலேயே இருந்துவிட்ட தெய்வத்தமிழை மீண்டும் வெற்றிகரமாகக் கருவறையில் வழிபாட்டு அசைவியக்கமாகக் கொண்டு வந்த பெருமை சைவநெறிக் கூடத்தையே சாரும். அந்த ரீதியில் தங்கள் சக்தியையும் மீறி அர்ப்பணிப்பை வெளிக்காட்டி தமிழ்கூறும் நல்லுலகிற்கு தொண்டாற்றிவரும் சைவநெறிக் கூடத்தினரோடு சைவ மகா சபையினராகிய நாங்களும் கரம் கோர்த்து முன் நகர்கின்றோம்.

அந்த வகையில் சைவநெறிக் கூடம், சைவ மகா சபை எனும் சைவத்தமிழ் இணையர்களாகிய நாம் தெய்வத்தமிழ் அறக்கட்டளையின் ஆதரவோடு கடந்த காலங்களில் தமிழ் அருட்சுனைஞர்களை உருவாக்கியது போல எம் ஈழமணித் திருநாட்டில் எதிர்காலத்தில் பல நூற்றுக்கணக்கான அருட்சுனைஞர்களை உருவாக்க சைவத்தமிழுலகின் ஆதரவை நாடி நிற்கின்றோம்.

தோன்றாத்துணையாக எம்மை வழி நடத்துகின்ற அம்மையப்பனுடைய திருவடிகளைப் பணிந்து எல்லாவுயிர்களுக்கும் ஞானலிங்கேசுவரப் பெருமானின் அருள் கிடைக்கப் பிரார்த்தித்து சைவ மகா சபையினுடைய செய்தியை நிறைவு செய்கின்றோம்.

திரு.சி.சோதிமூர்த்தி
தலைவர்
அகில இலங்கை சைவ மகா சபை.


**செந்தமிழ் திருக்குடமுழுக்கு சிறப்புற வாழ்த்துவோர்**

சுவிஸ் செல்வா சுக் நிறுவனத்தினர்

☆ க.சண்முகநாதன் ஜெயசண்யன் நிறுவனம்
☆ தமிழ் உலகம் ஊடகமையம்
☆ சிவன் தொலைக்காட்சி நிறுவனத்தினர்
☆ சிற்பக்கலாவித்தகர் க.புருஷோத்தமன்


## ஆசிச்செய்தி




"எள்ளகத்து எண்ணெய்
இருந்தெனை ஒக்குமே
உள்ளகத்து ஈசன் ஒளி"

சிவபூமியில் வாழ்கின்ற அனைத்து இந்துத் தமிழ் மக்களும் பெருமை கொள்ளக் கூடிய வகையிலே இயற்கை எழில் சூழ்ந்த இணுவில் பிரதேசத்திலே ஞானலிங்கேசுவரர் திருக்கோயில் அமையப் பெறுகின்றது. இது அனைத்து சைவ அடியார்களையும் அகமகிழ்வடையச் செய்கின்றது. தொண்டுதொட்டு ஆலயங்களில் ஆகமவிதிப்படியே பூசைகள் இடம்பெற்று வருகின்றன. ஆனால் இவ் ஆலயத்தின் சிறப்பாக பூசைகள், சடங்குகள், சம்பிரதாயங்கள் தமிழ் மொழி மூலமாக இடம்பெறுகின்றமையாகும். அத்துடன் இங்குவரும் அடியவர்கள் அனைவரும் தாமே பூசைகளைச்செய்து வழிபடும் வகையிலே இவ் ஆலயத்தின் சிறப்புக்கள் அமைந்திருக்கின்றன.

தமிழர் பண்பாட்டின் வாழ்க்கைநெறியாக அமைந்த சமயத்தைத் தாய் மொழியான தமிழுடன் இணைத்து வளர்த்தெடுக்குப் பலர் உறுதுணையாக உள்ளனர். குறிப்பாக சமயத்துடன் தமிழை இணைப்பதில் தளராது பாடுபட்ட சைவநெறிக்கூடத் தன்னார்வலர்களுக்கும், அதன் இலங்கைக் கான சமூகநலப் பணிகளில் பங்காளராகச் செயற்பட்டு வரும் சைவமகாசபையினருக்கும் மனம்நிறைந்த பாராட் டுக்களை வழங்குவதுடன் இணுவில் பதியில் ஞானலிங் கேசுவரர் எழுந்தருளுவதற்கு இறைபணியாற்றியஅனைத்துச் சிவத்தொண்டர் களுக்கும் அன்பு நிறைந்த பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் பொழிகின்றோம். ஞானலிங்கேசுவரப் பெருமானின் அருளும் ஆசியும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

தவத்திரு அகத்தியர் அடிகளார்
தென் கையிலை ஆதீனம்.

## ஈழமணித் திருநாட்டில் ஞானாம்பிகை உடனாய ஞானலிங்கேசுவரர் பெருமானிற்குத் தெய்வத் தமிழில் திருக்குடமுழுக்குப் பெருவிழா - திருக்குடமுழுக்குப் பெருவிழா மலர். வாழ்த்து மற்றும் படைப்பு.



ஞானலிங்கப்பெருமான் பொன்னம் பலவன் உள்ளத்திற்கி னிய சைவத்தமிழ்ப் பெருந்தகை அன்பர்களே.

"ஆரியம் நன்று தமிழ் தீதெனவுரைத்த, காரியத்தாற் காலக்கோட் பட்டானைச் -சீரிய, அந்தண் பொதியி

லகத்தியனா ராணையாற், செந்தமிழே தீர்க்க சிவா" எனத் தமிழைப் பழித்த வடநாட்டுக் குடிமகனை

தனதொரு தமிழ்ப் பாவால் ஒறுத்துப் பின்னர் சினம் ஆறிய நக்கீரர் அவனுக்கு மீண்டும் உயிர் தந்தார்

என்பது நம் தமிழ் வரலாறு. இந்த வரலாற்று உண்மையின் வாயிலாக வடமொழியை விட ஒருவனை

வாழவும் சாகவும் செய்யவல்ல தெய்வ ஆற்றல் தெய்வத் தமிழுக்கு உண்டென்பதை நக்கீரர் மெய்ப்பித்தார்.

தமிழ்மொழியைப் போற்றிக் கற்குமாறு அவனை நக்கீரர் மாற்றினார் என்பதும் எம்மைக் கடந்து சென்ற

தமிழ் வரலாறு. தமிழைப் பழித்த இன்னொரு ஆரியவரசன் தமிழ் நாடுகள் மீது படையெடுத்து வந்த பிரகத்தனாவான். இவனுக்குத் தமிழின் உயர்வையும் சிறப்பையும் எடுத்துச் சொல்ல சங்கப் புலவர் கபிலர்

பத்துப் பாட்டுக்களில் ஒன்றான குறிஞ்சிப்பாட்டைப் பாடினார் என்பதும் வரலாறு.

இப்படியான வரலாறு மீள்மீட்ட வேண்டிய காலமாகவே 21ம் நூற்றாண்டு அமைந்துள்ளது. இந்நோக்கில்

1994ம் ஆண்டு முதல் நிறுவப்பட்ட எமது சைவத்தமிழ் மன்றமாகிய சைவநெறிக்கூடம், செந்தமிழ் வழிபாட்டுத்

திருக்கோவிலை முழுமுதற்கடவுள் சிவபெருமான் திருவருளால் 2007ஆம் ஆண்டு முதல் ஒழுகி வருகின்றோம்.

2012ஆம் ஆண்டு திருவருள் நிறைகூடி சைவத்தமிழ் அறிஞர்கள் பலர் முன்னிலையில் செந்தமிழ் வேள்விச்

சதுரர் மு. பெ. சத்தியவேல் முருகனார் ஐயா தலைமையில் "சென்றதுபோக இனிக் கருவறையில்

செந்தமிழ்த் திருமறை வழிபாடு" எனும் உலகவரலாற்றுத் தீர்மானத்தை சுவிட்சர்லாந்தின் தலைநகர் பேர்ன்

மாநிலத்தில் அருள்ஞானமிகு ஞானாம்பிகை உடனாய ஞானலிங்கேசுவரர் திருக்கோவில் முன்றலில் இயற்றி நாம் நிறைந்திருந்தோம். எல்லாம் வல்ல இன்பத் தமிழ் கேட்ட சிவபெருமான் திருச்செவிகள் குளிரும் வண்ணம், தமிழொலி ஓங்கி ஒலிக்கட்டும், உலகில் சைவமும் தமிழும் ஓங்கி விளங்கட்டும்!

சிவருசி. தர்மலிங்கம் சசிக்குமார்
ஞானலிங்கேசுவரர் திருக்கோவில் அருட்சுனையர்
இணைப்பாளர் சைவநெறிக்கூடம்
பேர்ன், சுவிட்சர்லாந்து

## ஆசியுரை



யாழ். இணுவையம் பதியில் ஞானலிங்கேசுவரர் ஆலயம் எழுந்தருளுவது என்பது இன்றைய காலத்தின் கட்டாய தேவையாகவே அமைகின்றது. கருவறைப்பூசையில் தமிழ் மொழி ஒலிக்கவேண்டும் என்கின்ற தமிழ் மக்களின் நீண்ட நாள் அவா இன்று இணுவையம்பதியில் எழுந்தருளுகின்ற ஞானலிங்கேசுவரர் ஆலயத்தின் மூலமாக சாத்தியமாகின்றது. இச்செயலை முழு மூச்சாக தாயகத் தில் செயற்படுத்தி வருகின்ற சைவநெறிக்கூடம் அதனுடன் இணைந்து செயலாற்றி வருகின்ற சைவமகாசபையினருக்கும் பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் இவ் ஆலயம் அமைவதில் பெரும் பங்காற்றிய சிவத்தொண்டர்கள் அனைவருக்கும் எமது வாழ்த்துக்களையும்,ஆசிகளையும் வழங்குவதில் நல்லை ஆதீனம் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றது. இவ் ஆலயம் மென்மேலும் பல மனிதநேயப் பணிகளையும் ஆற்றி சிறந்த ஒரு தொண்டு நிறுவனமாகவும் அமையும் என எல்லாம்வல்ல எம்பெருமான் முருகனைவேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த
பரமாச்சாரிய சுவாமிகள் நல்லை ஆதீனம்.

## வாழ்த்துரை



ஓயாது நகர்ந்து கொண்டிருக்கும் மனிதவாழ்விலே மனிதனால் ஆற்றப்படும் மகத்தான காரியங்களே வரலாறாகி தொடர்ந்துவரும் தலைமுறைக்கு வழிகாட்டி நிற்கின்றது. அதிலும் குறிப்பாக பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தோற்றம் பெற்ற உயர் நாகரிகத்தைக் கொண்ட தமிழர்களின் மொழி, பண்பாடு, கலை, இலக்கியங்கள் தனிச்சிறப்பு வாய்ந் தவை. இத்தகைய சிறப்பம்சங்களைக் கொண்ட தமிழை தாய்மொழியாகவும், ஆதியும் அந்தமுமில்லாத அரும்பெ ரும் சோதியாகப் பார்க்கும் இடமெங்கும் நீக்கமற நிறைந் திருக்கும் இறை சிவனை வழிபடும் சிவத்தை தாய்மத மாகவும் கொண்ட நாம் பாக்கியசாலிகள்.

ஆனால் இந்த அருமை பெருமைகளை எல்லாம் மேடைகளில் முழுங்கிவிட்டு செயலாக்கத்தில் ஒதுங்கி நிற்கும் பலருக்கும்,பல அமைப்புக்களுக்கும் மத்தியில் சொல்லும் செயலும் ஒன்றாகி நிற்கும் சைவத்தமிழ் மன்றமாக சைவநெறிக்கூடம் திகழ்கின்றது. எமது சமய நடைமுறைகளை நடைமுறை வாழ்வில் கடைப்பிடிப்பதற்கும் அவற்றைச் செயற்படுத்தி சைவத்தமிழர்களை தனித்துவம் மிக்கவர்களாகவும், பண்பாட்டையும் பாரம்பரியத்தையும் கட்டிக்காப்பவர்களாகவும் வைத்திருப்பதற்கு இவர்கள் எடுக்கும் முயற்சி அளப்பரியது.

இந்த ஆன்மீக, மனிதநேயப் பயணத்தில் சிவஞான சித்தர் பீடமும் இணைந்து பயணிப்பதில் பெருமகிழ்வும்,நிறைவும் அடைகின்றோம்.

அமைதியும்,ஆனந்தமும் எங்கும் பெருகட்டும்.

சிவத்திரு. சிவயோகன் ஐயா
சிவஞானசித்தர் பீடம்.

## அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



உடுவில் பிரதேச செயலர் பிரிவில் இணுவில் பதியில் சைவநெறிக்கூடம் அருள் ஞானமிகு ஞானலிங்கேசுவரர் திருக்கோயில் திருக்குடமுழுக்கு நன்னீராட்டுப் பெருவிழாவிற்கு வாழ்த்தி வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வ டைகின்றேன்.

"தென்னாடுடையசிவனேபோற்றி என்னாட்டவர்க்கும் இறைவாபோற்றி" என விழிக்கப்படும் சிவ்பரம் பொரு ளுக்கு சிவபூமியில் எழில்மிகு ஞானலிங்கேசுவரர் உடனுறை ஞானம்பிகை அம்மன் ஆலயத்திற்கு திருக்குடமுழுக்கு பெருவிழா அடியவர்களின் ஆன்மீக ஈடேற்றத்திற்கு அடிப்படையாக அமையும் எனலாம். தமிழ் வழிபாட்டுப் பயிற்சிக்கூடத்தில் தமிழ் அருட்சுனை யாளாகப் பயிற்சி பெற்றுவரும் தமிழ் அருட்சு னையர்கள் இத்திருக்குடமுழுக்கு வழிபாடுகளில் கலந்து சிறப்பிப்பதும் சிறப்புக்குரியது.

இக்குடமுழுக்குப் பெருவேள்வி நடைபெற்று இறைதிருவுருவங்களுக்கு திருவுயிரூட்டுவதற்கு பங்கெடுக்கும் சிவனடியவர்கள் பாக்கியசாலிகள். ஆலயத்தை சிறப்புற அமைத்து வழிபாடு இயற்ற நல்கிய இறைபரம் பொருளை வணங்கி இறைவனின் அருட்பிரவாகம் அடியவர்களுக்குக் கிடைக்க வேண்டித்திருக்குடமுழுக்கு சிறப்புற அமைய என் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நா.வேதநாயகன், அரசாங்க அதிபர்
யாழ்ப்பாண மாவட்டம்.

# ஈழ அகதிகளுக்கு அந்தஸ்து வழங்க நிபந்தனைகளை கடுமையாக்கும் சுவிஸ்

## 1613 நாடு கடத்தப்படும் ஆபத்தில்

இலங்கையர்களுக்கு அகதி அந்தஸ்து வழங்கப்படுவதற்கான நிபந்தனைகளை மேலும் கடுமையாக்க சுவிட்சர்லாந்து அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்த பின்னர் இலங்கையின் நிலைமை மேம்பட்டுள்ளதை அடுத்தே இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக சுவிஸ் அரசாங்கம் கூறியுள்ளது.

இலங்கையில் கருத்து சுதந்திரம் மற்றும் ஒன்றுகூடும் சுதந்திரம் உள்ளிட்ட மனித உரிமை நிலைமைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்வதாக சுவிட்சர்லாந்தின் குடியேற்றத்திற்கான செயலகம் கூறியுள்ளது.

அதன்காரணத்தால் ஊடகவியளாளர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மற்றும் எதிர்க்கட்சி அரசியல்வாதிகளுக்கான அகதி அந்தஸ்து வழங்கப்படும் போது மேலும் கடுமையான நிபந்தனைகளை கடைப்பிடிக்க சுவிஸ் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

2009 ஆம் ஆண்டு முடிவுக்கு வந்த கசப்பான யுத்தத்தின் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்களை பாதுகாப்பதற்கான தேவை குறைவடைந்துள்ளதாக சுவிஸ் அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

எவ்வாறாயினும் சில விடயங்களில் தொடர்ந்தும் இடைவெளிகள் உள்ளதை ஏற்றுக்கொண்ட சுவிஸ் அரச அதிகாரிகள், குறிப்பாக புகலிடக் கோரிக்கைகளை ஆய்வு செய்யும் போது மனித உரிமை விடயங்கள் மற்றும் பிரத்தியேக சூழ்நிலைகள் கருத்தில் எடுக்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

2016 ஆம் ஆண்டு மே மாதம் வரை ஆயிரத்து 316 இலங்கையர்களின் புகலிட விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளதாக சுவிட்சர்லாந்து குடியேற்ற செயலகம் கூறியுள்ளது.

இதுவரை 5 ஆயிரத்திற்கும் அதிகமான இலங்கையர்களை சுவிட்சர்லாந்து உள்வாங்கியுள்ளதுடன், அவர்களில் 3 ஆயிரத்து 674 பேருக்கு அகதி அந்தஸ்து வழங்கியுள்ளது.

இவர்களில் ஆயிரத்து 613 பேர் நாடு கடத்தப்படும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளதாக சுவிஸ் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

எவ்வாறாயினும் நாடு கடத்தப்படுவோர் தமிழீழ விடுதலைப்புலிகளின் அனுதாபிகளாக கருதப்படும் ஆபத்து உள்ளதாக சுவிஸ் ஈழத் தமிழர் பேரவையின் உப தலைவர் அனா அனுார் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைக்கு நாடு கடத்தப்படுவோர் விமான நிலையங்களில் வைத்தே விசாரணைக்கு உட்படுத்தப்படுவதாகவும் அவர்கள் துன்புறுத்தப்பட்டு, சிறைவைக்கப்படும் நிலைமை காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

2009 ஆம் ஆண்டு நடைபெற்ற யுத்தத்தின் போது கைதுசெய்யப்பட்ட பலர் தற்போதும் சிறைகளில் உள்ளதாக சுவிஸ் ஈழத் தமிழர் பேரவையின் உப தலைவர் அனா அனுார் மேலும் சுட்டிக்காட்டினார். (இ-10)

# செய்தித்துளிகள்

## பரமேஸ்வரன் ஆலய மகாகும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள பரமேஸ்வரன் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை 11 ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெறும்.

இதேவேளை இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணி முதல் கிரியைகள் இடம்பெற்று நாளை திங்கட்கிழமை முற்பகல் 11 மணிமுதல் 12 மணிவரை பாலஸ்தான கும்பாபிஷேக இடம்பெறும்.

இக் கும்பாபிஷேகத்தில் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் கலந்து கொள்ளவுள்ளார். (இ

## போதைப்பொருள் குற்றச்சாட்டில் இரு மாலைதீவு பிரஜைகள் கைது

போதைப்பொருள் கடத்திய குற்றச்சாட்டில் இரண்டு மாலைதீவு பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர். தெஹிவளையில் குறித்த இரு மாலைதீவு பிரஜைகளும் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடல் வழியாக பாகிஸ்தானுக்கு போதைப்பொருள் கடத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (இ-10)

## விபத்தில் இளைஞன் பலி

திருகோணமலை - குச்சவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சலப்பையாற்று பிரதேசத்தில் இடம்பெற்ற வீதி விபத்தில் இளைஞன் ஒருவன் உயிரிழந்ததுடன், மேலும் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

இவர்கள் திருகோணமலை பொது வைத்தியசாலையின் அவசர கிசிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக குச்சவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலை நடந்த இந்த சம்பவத்தில் திருகோணமலை, நாச்சிக்குடா பிரதேசத்தைச் சேர்ந்த 21 வயதான ஒருவரே பலியாகியுள்ளார் எனத் தெரியவந்துள்ளது. (இ-10)

# நிழல் அமைச்சரவை தொடர்பில் அச்சம் கொள்ளத்தேவையில்லை

## விஜித் விஜயமுனி தெரிவிப்பு



நிழல் அமைச்சரவை தொடர்பில் அச்சம் கொள்ளத் தேவையில்லை என அமைச்சர் விஜித் விஜயமுனி டி சொய்சா தெரிவித்துள்ளார்.

கூட்டு எதிர்க்கட்சியின் நிழல் அமைச்சரவை குறித்து கொழும்பு பத்திரிகைக்கு அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கூட்டு எதிர்க்கட்சியின் நிழல் அமைச்சரவை அவர்களின் திருப்திக்காக உருவாக்கப்பட்ட ஒன்றாகும்.

இந்த விடயம் குறித்து அரசாங்கமோ அல்லது தாமோ அதிகம் பதற்றமடையப் போவதில்லை.

இதில் அங்கம் வகிக்கும் பலர் எனது நல்ல நண்பர்கள் என்பதனால் அவர்கள் பற்றி அதிகம் பேசுவதற்கு நான் விரும்பவில்லை.

மேலும் சாலாவ வெடிப்புச் சம்பவம், மழை வெள்ளம், மண்சரிவு போன்றவற்றில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதில் சிறு தாமதம் இருப்பதனை நான் ஒப்புக்கொள்கின்றேன்.

அதற்காக வருந்துவதுடன் விரைவில் நலன்கள் உரிய முறையில் வழங்கப்படும் என அமைச்சர் தெரிவித்துள்ளார். (இ-10)

## வீதியில் கிடந்த வெடிக்காத இரு கைக்குண்டுகள் மீட்பு

(கொழும்பு)

கண்டி மாவட்டம், ரங்கலை கலபொடவத்தை பிரதேசத்தில் வீதியில் வெடிக்காத நிலையில் கிடந்த இரண்டு கைக்குண்டுகளை பொலிஸார் நேற்று மீட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்தே இந்த கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

கைக்குண்டுகளை செயலிழக்க செய்யுமாறு குண்டு செயலிழக்க செய்யும் பிரிவினருக்கு அறிவித்துள்ளதாக ரங்கல பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-10)

# அத்தியாவசிய பொருட்களின் விலைகளை அமைச்சரவை தீர்மானிக்குமாம் - றிசாத்



(கொழும்பு)

அடுத்த வாரம் கூடும் அமைச்சரவை கூட்டத்தின் போது அத்தியாவசிய பொருட்களுக்கான விலைகள் குறித்து தீர்மானிக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்தப்பொருட்களுக்கு வற் என்ற பெறுமதிசேர் வரி விதிக்கப்படாது என்று கைத்தொழில் மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் றிசாத் பதியுதீன் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அண்மைக்காலமாக அத்தியாவசிய பொருட்களின் விலைகள் மாவட்டத்துக்கு மாவட்டம் மாறியுள்ள நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தநிலையில் தமது அமைச்சு, அத்தியாவசிய பொருட்களுக்கான ஆகக்கூடிய விலைகளை மீள் வர்த்தமானிப்படுத்தவுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். (இ-10)

## 'ஆறிப்போன காயங்களின் வலி' நூல் அறிமுக விழா யாழில்

முன்னாள் போராளியான வெற்றிச்செல்வியின் "*ஆறிப்போன காயங்களின் வலி*" நூல் யாழ்ப்பாணத்தில் அறிமுகம் செய்யப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் ச.ராதேயன் தலைமையில் இன்று 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இந்த நூல் அறிமுக நிகழ்வு நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சமூகவியற்றுறை விரிவுரையாளர் எஸ்.ஜீவசுதன் மற்றும் உரும்பிராய் இந்துக் கல்லூரி ஆசிரியர் தி.செல்வமனோகரன் ஆகியோர் நூல் பற்றிய கருத்துரையாற்றுவர். ஏற்புரையை நூலாசிரியர் வெற்றிச்செல்வி வழங்குவார். யுத்தம் முடிவடைந்ததன் பின்னரான பெண் போராளிகளின் பம்பைமடு தடுப்பு முகாம் வாழ்க்கை பற்றிய வரலாற்றுப் பதிவாக இந்த நூல் வெளிவந்துள்ளது.

இந்த நூல் அண்மையில் மன்னார் அடம்பன் மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் ஆசிரியை தனலெட்சுமி கிறிஸ்துராஜன் தலைமையில் வெளியிடப்பட்டது.

"*எழுத்து அனைவருக்கும் பொதுவானது எனினும் பெண்ணின் பார்வையில் பிறக்கும் எழுத்து தனித்துவமானது*" என்ற மகுட வாசகத்துடன் நான்கு பெண்களின் எழுத்துக்களை முன்வைத்து பெண்களால் நடத்தப்படும் அறிமுகக் கலந்துரையாடலில் வெற்றிச்செல்வியின் ஆறிப்போன காயங்களின் வலி என்ற நூலும் இடம்பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)

## ஊக்குவிப்புக் கொடுப்பனவுடனான குழாய் பொருத்துநர் தொழிற்பயிற்சி

யாழ்ப்பாணத்தில் முதன் முறையாக தேசிய தொழில் தகைமை (NVQ) முறைக்கமைய நீர்க்குழாய் பொருத்துநர் கற்கை நெறி இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையில் ஆரம்பிக்கவுள்ளதால் விண்ணப்பங்கள் கோரப்படுவதோடு இவற்றுக்கான பதிவுகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இக்கற்கைநெறி ஆனைக்கோட்டை தொழிற்பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது. இக் கற்கை நெறி பயிலும் மாணவர்களுக்கு மாதாந்த ஊக்குவிப்புத் தொகை வழங்கப்படும்.

இக்கற்கைநெறிகள் கற்க விரும்புவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம், 1 ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல. 12 கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் எதிர்வரும் 25.07.2016 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ


## பரிசளிப்பு விழா நாளை


யாழ்.மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் பரிசளிப்பு விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சபாரட்ணம் அரங்கில் அதிபர் ஆ.பேரின்பநாயகம் தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபனும் சிறப்பு விருந்தினர்களாக Trustee mac accountancy director, U.K ஏ.எப். மரியதாஸ், சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். சிவானந்தராசா, கௌரவ விருந்தினராக தொழிலதிபர் இரா. ஜெகதீஸ்வரன் ஆகியோரும் நினைவுப் பேருரையை சிரேஷ்ட ஆங்கில மொழி விரிவுரையாளர் மற்றும் யாழ். பல்கலைக்கழக மொழி பெயர்ப்பு கற்கை நெறி இணைப்பாளர் கந்தையா சிறிகணேசனும் ஆசியுரையை யாழ். பல்கலைக்கழக சமஸ்கிருத துறை விரிவுரையாளர் ம.பாலகைலாசநாத சர்மா, மானிப்பாய் அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையின் அருட்திரு. தே.தேவநேசன் அடிகளார் ஆகியோரும் வழங்கவுள்ளனர். (இ

## பரவிப்பாஞ்சான் மக்கள்

# காணிகள் விடுவிக்கப்படும் வரை தொடர் கவனயீர்ப்பு போராட்டம்





கிளிநொச்சி கரைச்சி பிரதேச கிளிநகர் கிராம அலுவலர் பிரிவுக் குட்பட்ட பரவிப்பாஞ்சான் மக்கள் இராணுவ வசமுள்ள தமது காணிகள் விடுவிக்கப்படும் வரை தொடர் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

நேற்று மு.ப. 10 மணியளவில் பரவிப்பாஞ்சான் பிரதான வீதியின் ஆரம்பத்தில் இந்த தொடர் கவனயீர்ப்புப் போராட்டம் காணி உரிமையாளர்களினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மீள்குடியேற்றம் செய்யப்பட்டு 6 ஆண்டுகள் கடந்த நிலையிலும் தாங்கள் இன்றும் சொந்த மாவட்டத்திற்குள்ளேயே இடம்பெயர்ந்தவர்களாக அகதி வாழ்வு வாழ்ந்து வருவதாகவும், நண்பர்கள், உறவினர்கள் மற்றும் வாடகை வீடுகளில் தங்களது வாழ்க்கை பெரும் நெருக்கடிகளுக்கு மத்தியில் காணப்படுகின்றது. இவ்வாறு கவலை தெரிவிக்கும் பரவிப்பாஞ்சான் மக்கள், தங்களுடைய உறுதிக் காணிகள் மீளவும் கிடைக்க வேண்டும். அதுவரைக் கும் இந்தக் கவனயீர்ப்புப் போராட்டம் தொடரும் எனவும் குறிப்பிட்டனர்.

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள தங்களின் சொந்தக் காணிகளை விடுவிக்குமாறு பல தடவைகள் அரசியல்வாதிகள், உயரதிகாரிகள் என பலரிடமும் முறையிட்டும் எந்தப் பயனும் கிடைக்கவில்லை எனத் தெரிவித்த அம் மக்கள் இறுதியாக காணிகளை பிடித்து வைத்திருக்கின்ற இராணுவத் தட்டமும் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்திருந்தும் எங்களுக்கு எந்த தீர்வும் கிடைக்கவில்லை. எனவே தான் ஏற்கனவே தீர்மானித்ததன்படி உறுதியான நல்ல தீர்வு கிடைக்கும் வரை எங்களுடைய கவனயீர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்திருக்கின்றோம் எனவும் உறுதியாகத் தெரிவித்தார்கள்.

இந்தப் போராட்டத்தை தாங்கள் இரவு- பகலாக தொடர்ந்தும் மேற்கொள்ள இருப்பதாகவும் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

பரவிப்பாஞ்சான் காணிகளில் சில பகுதிகள் விடுவிக்கப்பட்ட போதும் இன்னும் ஐம்பதுக்கு மேற்பட்டவர்களின் காணிகள் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கடந்த மாதம் 27 ஆம் திகதி குறித்த பகுதிக்குச் சென்ற காணி உரிமையாளர்கள் இராணுவ அதிகாரியிடம் கடிதம், மகஜர் ஆகியவற்றை கையளித்திருந்தனர்.

இதன்போது ஒரு வார காலத்தினுள் தமக்கு பதில் ஒன்றை பெற்றுத் தருமாறு இராணுவ அதிகாரியிடம் அம் மக்கள் கேட்டிருந்தனர்.

குறித்த கடிதத்தையும் மகஜரையும் பார்வையிட்ட இராணுவ முகாம் மேஜர், இக் கடிதத்தை தமது உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்து ஒரு வார காலத்தினுள் அவர்கள் பதில் தந்தால் உங்களுக்கு அறியத் தருவேன் எனக் கூறினார்.

அத்தோடு தாம் இவ்விடத்தில் தற்காலிகமாக இருப்பதாகவும் தமக்கும் உங்களுக்கும் எவ்வித பிரச்சினைகளும் இல்லை எனவும் தமது இராணுவ உயர் அதிகாரிகள் இன்று இக் காணியில் இருந்து வெளியேறுங்கள் எனக் கூறினால் இன்றே இக் காணிகளை நாம் உங்களிடம் கையளிப்போம் என தெரிவித்தனர்.

எவ்வாறாயினும் இதற்கான நல்ல பதிலை ஒரு வார காலத்



தினுள் பெற்றுத் தருவீர்கள் என்ற நம்பிக்கையில் செல்வதாகக் கூறி திரும்பிய நிலையில் நேற்றைய தனம் அம் மக்கள் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (2-312)



மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு உட்பட்ட தாய்சேய் நல மருத்துவ மையங்களில் போதிய தளபாட பற்றாக்குறை நிலவுவதாக மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி வடக்கு மாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரனிடம்முன்வைத்த வேண்டுகோளுக் கிணங்க, அங்கு பயன்பெற வருகின்ற தாய்மார் மற்றும் குழந்தைகளின் நலனை கருத்தில் கொண்ட அமைச்சர், தனது 2016 ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியில் இருந்து 50ஆயிரம் ரூபா பெறுமதியான கதிரைகளை தமது மன்னார் உப அலுவலகத்தில் வைத்து மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர்.ரூபன் லெம்பேர்ட்டிடம் அண்மையில் கையளித்ததைப் படத்தில் காணலாம்.

(படம்-பனிக்கன் குளம் செய்தியாளர்)

# யுத்தத்தினால் மாற்றுவலுவுள்ளோராக்கப்பட்டோர் தொடர்ச்சியாகப் புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர்

## சாந்தி எம்.பி.தெரிவிப்பு

(பனிக்கன்குளம்)

நாட்டின் கடந்த 30 ஆண்டு கால போர் மற்றும் ஏனைய காரணிகள் ஆகியவற்றினால் மாற்றுவலுவுள்ளோராக காணப்படும் நபர்கள் பல்வேறு வகையான புறக்கணிப்பிற்குள்ளாகி வருகின்ற செயறபாடானது தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்காந்தராசா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் சபை ஒத்திவைப்பு வேளையின் போது உரையாற்றுகையில் சாந்தி எம்.பி.மேற்கண்டவாறு கூறினார்.

இந்நிலைமைகளால் குறிப்பாக யுத்தத்தினால் அதிகளவு மாற்றுத்திறனாளிகளைக் கொண்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் பல்வேறுபட்ட வகையிலும் தமது வாழ்வாதாரம் மற்றும் ஏனைய சமூக கருமங்களை ஆற்றமுடியாத நிலைமைகளுக்கு உள்ளாகியுள்ளனர். நீண்டகாலமாக இருந்து வருகின்ற இப்பிரச்சினைக்கு துரித நடவடிக்கை எடுப்பதற்காக பிரேரணை ஒன்று பிரேரிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டுள்ளது.

இதன்போது உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில், யுத்த சூழ்நிலைகளால் அதிகமான மாற்றுத் திறனாளிகளைக் கொண்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இவர்களுக்கான சேவை நிலையம் அமைக்கப்படாமை மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும கொடுப்பனவுகளை அனைத்து மாற்றுத்திறனாளிகளுக்கும்வழங்கப்படுவதுடன் அக் கொடுப்பனவு தொகை [illegible]தி கரிக்கப்பட்டு வழங்கப்படவேணடும்.

அத்துடன் பொதுமக்களுக்கு சேவை வழங்கும் அனைத்து கட்டங்களிலும் மாற்றுத்திறனாளிகள் அணுகுவசதிகள் செய்து கொடுக்கப் பட வேண்டும். அவர்கள் பற்றிய விபரங்களை முழுமையாக அரசு திரட்ட வேண்டும் அத்துடன் 2009 ஆம்ஆணடுக்கு பின்னரான காலப் பகுதியில் மாற்றுத்திறனாளின் வாழ்வாதாரம் மற்றும் ஏனைய வசதிகளை ஏற்படுததுவதில் அரசு உரிய சேவைகளை வழங்க தவறிவிட்டது.

எனினும் எமது புலம்பெயர் தமிழ் மக்களின் உதவிகளைக் கொண்டே இன்றும்கூட பாதிக்கப்பட்ட மக்களின் அபிவிருத்திகளை முன்னெடுத்து வருகின்றோம் எனவும் அவர் தெரிவித்தார். (2-281)

# காந்தி கிராமத்தில் தொடரும் சட்டவிரோத மண் அகழ்வு

காந்தி கிராமத்தில் தொடரும் சட்டவிரோத மண் அகழ்வு பொலிஸாருக்கு அறிவித்தும் நடவடிக்கை எதுவும் எடுக்கப் படவில்லையென பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர். கோணாவில் காந்தி கிராமத்தில் மக்களின்குடியிருப்புக்காணிகள்,வயல் காணிகள் என்பனவற்றில் அப் பகுதியைச சேர்ந்த சிலரால் சட்டவிரோத மண் அகழ்வு வியாபாரம் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாக மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இச்சட்டவிரோதமண்அகழ்வு குறித்து காந்திகிராம மக்கள், காந்தி கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் ஆகியோரினால் கிளிநொச்சிப் பொலிஸ் நிலையம் மற்றும் அக்கராயன் பொலிஸ நிலையம் ஆகியவற்றில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்ட போதும் இப்பகுதியில் இடம்பெறும் சட்டவிரோத மண் அகழ்வைத் தடுத்து நிறுத்துவதற்கான எந்தவித நடவடிக்கைகளும்எடுக்கப்படவில்லை. அத்துடன் சட்டவிரோத மண் அகழ்பவர் களிடம் இவ்விடயம் பற்றி எடுத்துக் கூறிய போது சட்ட விரோதமானது என கதைப்பவர்களை தமக்கு



உயர்மட்டச் செல்வாக்கு இருப்பதாகக் கூறி அச்சுறுத்தி வருவதாகவும் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விடயம் குறித்து காந்தி கிராமம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரால் அப்பகுதி கிராம சேவையாளர், கரைச்சிப் பிரதேச செயலாளர் ஆகியோருக்கும் கடிதம் மூலம் முறையிடப்பட்டுள்ளது.

மேற்படி சட்டவிரோத மண் அகழ்வாளர்களிடம் அப் பகுதியில் மண் அகழ வேண்டாம் என்று மக்களாலும் பொது அமைப்புக்களாலும் கூறப்பட்ட போது நாம் இப்பகுதியில் மண் அகழ்ந்து வியாபாரம் செய்வோம்! நாம் பயப்பட மாட்டோம்! எம்மை எதுவும் செய்யமுடியாது! எனவும் மிரட்டி அச்சுறுதி வருவதாகக் கவலை தெரிவிக்கப்படுகின்றது. இவ்விடயத்தில் பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்காது பாராமுகமாக இருககின்றமை தொடர்பில் மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத் தில் பன்னங்கண்டி,கோர மோட்டை, கோரக்கன்கட்டு, உமையாள்புரம், அக்கராயன், உருத்திரபுரம் என பல பகுதிகளிலும் சட்டவிரோத மண் அகழ்வுகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றமையும் இவ்விடயத்தில் பொலிஸாரும் பொறுப்பு வாய்ந் தவர்களும் உரிய நடவடிக்கை எடுக்காமல் இருக்கின்றமையானது மக்கள் மத்தியில் பலத்த சந்தேகத்தையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (2)

ஆர் குத்தினாலும் அரிசியானால் சரி
– தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## காணி பார்க்கப்போற மக்காள் இடமாறிப் போயிராதீங்கோ!

வட மாகாணத்துக்கான பொருளாதார மத்திய நிலையத்தை ஓமந்தையில் அமைப்பதா? தாண்டிக் குளத்தில் நிர்மாணிப்பதா? என்ற வாதப் பிரதிவாதங் களின் மத்தியில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர், ஓமந்தைக்கும் தாண்டிக்குளத் திற்கும்சென்று காணி பார்க்கப் போவதாக ஒரு தகவல்.

இத் தகவலை அறிந்த மூத்த தமிழ் மகன் ஒருவர் காணி பார்க்கப் போகின்றவர்களுக்கு சில ஆலோ சனைகள் கூறுவதாக இருந்தால், அவரின் பேச்சு மொழியில் எத்தகைய ஆலோசனைகளைக் கூறு வார் என்றொரு சிந்தனை. மகனின் அந்த சிந்தனை வடிவம் இங்கே தரப்படுகிறது.

என்ர ராசாக்கள் எங்க மக்காள் போறியள். பொரு ளாதார மத்திய நிலையத்தை எங்க அமைப்பதென்று நிலம் பார்க்கப் போறியளோ?

கவனம் மக்காள். மனம் பேதலித்த நேரம், காணி பார்க்கப் போகின்ற வேளை புல்லுச் செடிகள் தடுத்து விழுத்தப் பார்க்கும். பிறகு அதுவும் வடக்கு முதல மைச்சருக்குப் பழியாக்கிப் போடும்.

அது சரி, மக்கள் இவ்வளவு காலமா காணி பார்க் காமலே இருந்தனியள். ஓமந்தையா? தாண்டிக் குளமா? என்று வாக்கெடுப்பு நடத்துமாறு தம்பி இரா.சம்பந்தர் கூறியதாகக் கேள்வி.

எனக்கு இரண்டு வயதுக்கு இளையவர்தான் சம்பந்தர். அதால அவர எல்லாரும் அண்ணே! என்று அழைத்தாலும் எனக்கு அவர் தம்பிதானே!

அது சரி மக்காள் ஓமந்தையிலா? தாண்டிக் குளத் திலா? பொருளாதார மத்திய நிலையத்தை அமைப்ப தென்று மாகாண சபை உறுப்பினர்களிடையே வாக் கெடுப்பு நடத்த வேணும் என்று தம்பி சம்பந்தர் சொன்ன வரல்லோ!

நான் எண்டால் திருகோணமலைக் காளி கோயி லிலை பூக்கட்டிப் பார் தம்பி என்று சொல்லியிருப்பன்.

அங்க போறது கடினம் அண்ணே! என்று சம்பந் தர் பதில் அளித்தால், அப்ப மைபோட்டுப் பாரன். குரங் குக்கு எது விருப்பமோ அது தனக்கு விருப்பமான இடத்தைக் காட்டும் என்று பதில் சொல்லுவன்.

வயது போன நேரத்தில பொறுப்பற்றுக் கதைக் கிறது அவ்வளவு நல்லதல்லத்தானே.

அது சரி தம்பியவை, காணி பார்க்கப் போற நீங்கள் புவியியல், பொருளியல், மண்ணியல் தெரிந்த பேராசிரியர் மாரையும் கூட்டிக்கொண்டு போங்க.

இதில உங்களுக்கு உடன்பாடில்லை எண்டால் வாஸ்து சாத்திரம் நல்லாத் தெரிந்த ஒரு சாத்திரியை ஆவது கூட்டிக்கொண்டு போவது நல்லது.

அது சரி மக்காள், யாழ்ப்பாணத்தில ஒரு பல் கலைக் கழகம் கட்டி வைத்திருக்கினமல்லோ? அங்க இருக்கற புத்திஜீவிகளை அழைத்து பொருளாதார மத்திய நிலையம் எங்க அமைக்கிறது நல்லது என்று கேட்கலாம்.

பல்கலைக்கழக புத்திஜீவிகள் அடங்கிய ஒரு நிபுணர் குழுவை அமைத்து அவர்கள் நிலத்தை தெரிவுசெய்கிறது என்றொரு முயற்சியை செய்தால், எங்கட இனத்தின்ர அபிவிருத்திப் பணியில அவை களையும் ஈடுபடுத்துவதாகவும் இருக்குமல்லோ!

அட! வயது போன நேரத்தில நானும் கனக்கக் கதைத்துப் போட்டன். உங்களுக்கு எல்லாம் தெரியும் தானே! நீங்கள் போய் காணியை பார்த்து தெரிவு செய்யுங்கள். ஆனால் பத்துப் பதினைந்து ஏக்கர் நடக்க வேண்டியிருக்கும். நீங்கள் கண் புருவத்தில கையை வைத்து பார்வை எட்டின தூரத்துக்கு நிலத்தைப் பாருங்க. ஆனால் ஒன்று தமிழினம் வாழ வேண்டும் எண்ட சிந்தனையோட உங்கட பார்வை இருந்தால் நிலத்தெரிவு பெரிய கஷ்டமான விடய மல்ல.

தம்பியவ! உங்கட முயற்சிக்கு இறைவன் துணை நிப்பான்.

## பொதுமக்களுக்காகத் தான் உண்ணாவிரதம் இருந்தேன்

### பாலித தெவரப்பெரும தெரிவிப்பு

பொதுமக்களின் பிரச்சி னைகளை தீர்ப்பதற்காகவே தான் உண்ணாவிரதம் இரு ந்ததாக பிரதி அமைச்சர் பாலித தெவரப்பெரும தெரி வித்துள் ளார். அத்துடன், சிறுவர்களின் பாடசாலை கல்வியைப் பெற் றுக்கொடுக்க வேண்டிய அனை த்து ஏற்பாடுகளையும் செய்து, வேறு வழியின்றியே இவ்வா றான நடவடிக்கைகளில் ஈடுப ட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

இது குறித்து தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், தான் குறித்த பாடசாலை விட யத்தில் உண்ணாவிரதத்தை ஆரம் பிப் பதற்கு முதல் பொறுப்புக் கூற வேண்டிய அனைவரிட மும் கொண்டு சென்றேன்.

மேலும் குறித்த விடயம் தொடர்பில், மனித உரிமை கள் ஆணைக்குழுவிடம் 9 முறைப்பாடுகள் செய்திருப் பதாகவும் அவர் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் தான மத்துகம பொலிஸ் நிலையத் திலும் முறைப்பாடு செய்திரு ந்ததாகவும், உண்ணாவிர தம் ஆரம்பித்த போது 5 பெற் றோர்களையும், அவர்களது குழந்தைகள் ஐவரையும் ஜனா திபதி செயலகத்திற்கு அனுப்பி யிருந்தேன்.

இதேவேளை தன்னை நடிகனாகவும் உடலை கொண்டு அரசியல் நடத்துவதாகவும் ஒரு சிலர் கூறுகின்றனர்.

எனினும், பொது மக்க ளுக காகவே அரசியல் நடத்துகிறேன என்பதை அவர்களிடம் வலி யுறுத்துவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)

## நிழல் அமைச்சரவை பற்றி எனக்கு எதுவும் தெரியாது

### சமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

கூட்டு எதிர்க்கட்சி நியமித் துள்ள நிழல் அமைச்சரவை பற்றிய விபரங்கள் எதுவும் தனக்கு தெரியாது என நாடா ளுமன்ற உறுப்பினர் சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நிழல் அமைச்சரவையில் சமல் ராஜபக்ஷ போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சராக பெயரிடப்பட் டிருந்தார்.

நிழல் அமைச்சரவை என பது விசேடமான ஒன்றோ, புதிதான ஒன்றோ அல்ல என வும் அவர் தெரிவித்தார். எவ்வா றாயினும் தனது அனுமதியி ன்றியே நிழல் அமைச்சரவை யின் பிரதமராக தன்னை பெய ரிட்டிருந்ததாக முன்னாள் ஜனா திபதி மகிந்த ராஜபக்ஷ கூறியி ருந்ததுடன் அதில் இருந்து விலகு வதாகவும் அறிவித்தார் என் பது குறிப்பிடத்தக்கது. (இ-10)

## வயாவிளான் உத்தரிய மாதாகோவில் திருவிழா

வயாவிளான் உத்தரிய மாதா கோவிலின் திருவிழா எதிர்வ ரும் 16ஆம் திகதி சனிக்கிழமை காலை கோவிலின் பங்குத் தந்தை ஜெயக்குமார் தலை மையில் இடம்பெறும் முற்ப கல் 10 மணிக்கு திருப்பலி ஒப் புக் கொடுக்கப்படும். திருப் பலிப் பவனி காலை 7 மணிக்கு இள வாலை பிலிப்பு நேரியார் கோவி லில் இருந்து புறப்பட்டு கதிரை மாதா ஊடாக 8.15 மணிக்கு சுன்னாகம் நாகம்ஸ் சினிமா ஊடாக யாழ் ப்பாணம் ஆச்சிர மத்துக்கு 9 மணிக்குப் பின்பு ஆவரங்கால் ஊடாக வயாவி ளான் உத்தரிய மாதா கோவி லைச் சென்றடையும். திருப் பலியில் பங்குபற்றுவதற்கு பிர யாண வசதிகளும் செய்யப் பட்டுள்ளன. (இ

## மின் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க் கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலை களுக்காக நாளை திங்கட் கிழமை காலை 8 மணியி லிருந்து 5.30 மணி வரை வவுனியா பிரதேசத்தில் ஆதி விநாயகர் கோவில் பிரதேசத் திலும் மின் விநியோகம் தடைப்படும். (இ-9)

## கணவனைக் காப்பாற்றச் சென்ற மனைவி பரிதாபமாக உயிரிழப்பு

(கொழும்பு)

இரண்டு குடும்பத்தின ருக்கு இடையே ஏற்பட்ட கைக லப்பை விலக்கச்சென்ற பெண் ணொருவர், தாக்குதலுக்கு உள் ளான நிலையில் உயிரிழந்த சம்பவம் நோட்டன் பிரதேசத்தில் நேற்று முன்தினம வெள்ளிக் கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

நோட்டன் பிரிட்ஜ் லொனக் தோட்டத்தைச் சேர்ந்த 42 வயதுடைய எஸ்.வள்ளியம மா என்பவரே இவ்வாறு உயிரி ழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நோட்டன் லொனக் தோட் டத்திலுள்ள லயன் குடியிருப் பில, நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் இரண்டு குடும்பத்தினருக்கு இடையே கைகலப்பு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், தனது கணவரை சண்டையிலிருந்து விலக்கச் சென்ற மனைவி அங்கிருந்த இளைஞன் ஒருவனது தாக்கு தலுக்கு இலக்காகி படுகாய மடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளார். எனினும் சிகிச்சை பலனளிக்காத நிலையில் அவர் உயிரிழந்துள்ளார். மேலும் இந்தக் கைகலப்பின் மூலம் காயமடைந்த கணவன், மகன் ஆகியோர் வட்டவளை வைத் தியசாலையில் அனுமதிக் கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக நாவலபிட்டி வைத்தியசாலைக்கு மாற்றப் பட்டுள்ளனர்.

இந்தச்சம்பவத்துடன் தொடர புடைய சந்தேக நபரை ஹற்றன பொலிஸார் கைது செய்துள் ளதுடன் இது தொடர்புடைய மேல திக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (இ-10)

## "அயலான் யார்? அடுத்திருப்பவர் யார்? என்பது பற்றி தெளிவடைவோம்!"

இன்று எமக்கு தரப்படும் பைபிள் பகுதியில் "நல்ல சமாரியன்" உவமைக்கதையை இயேசு எமக்கு விளக்குகி றார்: யூதன் ஒருவன் எருச லேமிலிருந்து எரிகோவுக்குப் போகும்போது கள்வர் கையில் அகப்பட்டார். எருசலேமிலி ருந்து எரிக்கோவிற்கு செல் லும் வழி ஆபத்தானது. ஏறக் குறைய 3300 அடி தாழ் வாகச் செல்லும் இந்த 25 கி.ம.தூரப்பாதை இயேசு வின் காலத்தில் "இரத்தப் பாதை" என்று அழைக்கப்பட்டது. பல உயிர்ப்பலிகளும், இரத் தம் சிந்துதலும் நிகழ்ந்து வந்த அப்பாதையில் கள்வர்கள் பதுங்குவதற்கு ஏற்ற குழிக ளும், புதர்களும் நிறைய வு ண்டு. கள்வர்கள் கைக ளில் சிக்கிய அவன் அடிக்கப்பட்டு குற்று யிராய் விடப்படுகி றான. உடைமையின்றி, மோசமாக உடல்நிலையில் தரையிலே கிடக்கும் அவனுக்கு இப் போது அதிக உதவி தேவைப படுகின்றது. குரு ஒருவர் தற்செயலாய் அவ்வழியே வந்தார். அவர் அவனைக் கண்டதும் மறுபக்கமாக விலகிச் சென்றார். அவ் வாறே சமூகத்தில் மதிக்கப் படுபவரான லேவியன் ஒரு வனும் குற்றுயிராய்க் கிட ந்தவனை கண்டதும் வில கிச் சென்றான். ஆனால் அவ்வழியே பயணம் செய்து கொண்டிருந்தவனும் யூத இனத்தைச் சாராதவனும் சமாரியன் ஒருவன் அருகில் வந்து அவனது நிலையைக் கண்டபோது அவன்மீது பரிவு கொண்டு அந்த அந்நியனு க்கு உதவியதுடன் பணி விடையும் செய்தான். குற்று யிராகக் கிடந்த அந்த யூதனை முதலில் கண்ட இருவரும் ஒரே யூத சமூகத்தைச் சேர் ந்தவர்களும் மதிப்பிற்குரி யவர்களாக கணிக்கப்படு வோருமான அயலவர்கள் இந்த உலகப் புகழ் பெற்ற "நல்ல சமாரியன்" உவமைக கதை பிறந்த பின்னணி லூக்கா நற்செய்தியில் இவ

### பரமபிதா காட்டிய பாதை

வாறு கூறப்பட்டுள்ளது: திருச் சட்டஅறிஞர் ஒருவர் இயே சுவை சோதிக்கும் நோக்கு டன் எழுந்து, "போதகரே, நிலைவாழ்வை உரிமை யாக்கிக் கொள்ள நான் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார். இயேசுவிடம் எவ் வகையிலாவது குறைகாண வேண்டும் என்ற ஆவலில் திருச்சட்ட அறிஞர் கேள்வி யைத தொடுத்தாலும், இயேசு அந்த வாய்ப்பை நழுவ விடா மல், அற்புதமானதொரு உல கப் புகழ்பெற்ற உவமை யைக் கூறினார்.

உனது அயலவன் என் றால் யார்? அந்நியன் யார்? மனித சமுதாயத்தின் மனச் சாட்சியை மீண்டும் மீண்டும் தட்டியெழுப்பும் கேள்வி இது! அடுத்திருப்பவனா? உனக்கு நெருக்கமானவனா? யார் உனது அயலவர்? மனித குடும்பத்தை சுற்றிவரும் இக்கேள்விகளுக்கு உண் மையான விடைகள் என்ன வென்று நாம் தேடவேண் டும். "நல்ல சமாரியன்" உவ மைக்கதையின் இறுதியில் இயேசு எழுப்பிய கேள்வி இந்தத் தேடலை இன்று மீண் டும் எம்மில் ஆரம்பித்து வைக்கட்டும்: "கள்வர் கையில் அகப்பட்டவனுக்கு இம்மூவ ருள் எவன் அயலவன் என உமக்குத் தோன்றுகிறது?"

இயேசுவின் காலத்திலி ருந்து இன்றுவரையிலும் உள்ள பெரிய பிரச்சினையே எம் அயலான் யார் என்ற தெளிவு இல்லாததுதான். அருகில் இருப்பவன் எல் லாம் அயலான் அல்ல. சட் டத்தையும் சம்பிரதாயத்தை யும் கடைப்பிடிப்பதால் அய லானின் அன்பன் ஆகிவிட முடியாது. மனிதாபிமானம் இல்லாத சமயமும் சாரமற்ற வழிபாடும் அயலானை அன் பன் ஆக்க உதவாது. அடித் தள மனிதனின் ஆதங்க த்தை உணராமல் ஆகாய த்தில் சிறகடிக்கும் மனித னால் அயலானைக் காண கண் பார்வை போதாது. மனித சமுதாயத்தின் மனச் சாட்சியை மீண்டும் மீண்டும் தட்டியெழுப்பும் கேள்வி - எனக்கு அடுத்திருப்பவர் யார்? அவரா உன் அயலான்? யாரை நான் நம்பமுடியும்? யாருக்கு நான் உதவி செய்ய வேண் டும்? மனித குடும்பத்தை மீண்டும் மீண்டும் சுற்றி வரும் இக்கேள்விகளுக்கு



எளிதான விடைகள் கிடைக் கப் போவதில்லை. உண் மையான தேவையில் இரு ப்பவனே சமூகத்தில் பொரு ளாதாரத்தால் தாக்குண்டு தவிக்கும் மனிதன் ஓர் அய லான். கொள்ளை, கொலை, வன்முறையால் பாதிக்கப் பட்டவன் அயலான். அநீதி யா

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்


லும் சாதீயத்தாலும் நசுக்கப் பட்ட மனிதன் ஓர் அயலான தனிமையில் வாடுவோர், அநா தைகள், ஆதரவற்றோர் அனைவரும் அயலானே. உண்மையான தேவையில் இருக்கும் நம் அயலானைக் கண்டறிவோம்.

இயேசுவின் இவ்வுவ மைக் கதையானது அய லான் யார் என்பதன் விளக் கமும் நிலை வாழ்வுக்கு வழிகாட்டுதலும் இணை ந்தது. தேவையில் இருக்கும் அயலானை அடையாளம் கண்டு உதவுவோம். நிலை வாழ்வை உரிமையாக்கு வோம்.

# வல்லவன் உதைபந்தாட்டம் சென்.லூசியஸ் வெற்றி







பருத்தித்துறை உதைபந்தாட்ட சங்க அனுமதியுடன் வல்வெட்டித்துறை நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண வல்லவன் உதைபந்தாட்ட போட்டியில் மின் ஒளியில் கடந்த 30 ஆம் திகதி நடைபெற்ற முதலாவது போட்டியில் மன்னார் பலம்வாய்ந்த அணிகளில் ஒன்றான சென். லூசியஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து முல்லைத்தீவு பலம் பொருந்திய அணியான சென்.லூட்ஸ் விளையாட்டுக்கழகம் மோதியது.

பலத்த ரசிகர்களின் ஆதரவுடன் இடம்பெற்ற போட்டியில் முதற்பாதி ஆட்டத்தின் 15 ஆவது நிமிடத்திலேயே சென்.லூட்ஸ் ஸ்ரீ விளையாட்டுக்கழகம் முதலாவது கோலினை அடித்து அசத்தினார்.

தொடர்ந்து பல முயற்சிகளை சென். லூசியஸ் மேற்கொண்ட போதும் முயற்சி வெற்றியளிக்காது முதற்பாதி ஆட்டத்தில் சென்.லூட்ஸ் 1:0 என முன்னிலை பெற்றது.

இரண்டாவது பாதி ஆட்டத்திலும் இந்நிலை தொடர்ந்த போது 83 ஆவது நிமிடத்தில் சென்.லூசியஸ் எடிசன் கோலினை போட ஆட்டம் 1:1 என சமநிலையானது.

போட்டியின் இறுதிக்கட்ட சுவாரஸ்யமான ஆட்டத்தின் 90 ஆவது நிமிடத்தில் சென். லூசியஸ் விளையாட்டுக் கழகம். பிராங்கிளின் மூலம் கோலினை பெற்று ரசிகர்களை ஆரவாரப்படுத்தி போட்டியை வெற்றிகொண்டது.

போட்டியின் ஆட்ட நாயகனாக சென்.லூசியஸ் வீரர் றொபேட் தெரிவு செய்யப்பட்டு பணப்பரிசு மற்றும் பதக்கத்தினை சிவன் அறக்கட்டளை ஸ்தாபகர் கணேஸ்வரன் வேலாயுதம் வழங்கி கௌரவித்தார். (க)

# ஹென்றீசியன் சவால் கிண்ணம் வதிரி டயமன்ஸ் வெற்றி



பிறேம்குமார், துசிகரன் ஆகியோரின் அதிரடியான கோல்களின் மூலம் சென். ஹென்றீஸ் கல்லூரி அணியை அதன் சொந்த மைதானத்தில் வீழ்த்திய வதிரி டயமன்ஸ் அணி ஹென்றீசியன் சவால் கிண்ண இறுதியாட்டத்தில் நுழைந்து வரலாற்று வெற்றியைப் பதிவு செய்தது.

அண்மையில் நடைபெற்ற பரபரப்பான முதல் அரையிறுதிப் போட்டியில் ஆட்டத்தின் 10 ஆவது நிமிடத்திலேயே டயமன்ஸ் அணியின் நட்சத்திர வீரர் பிறேம்குமார் (வீமா) கோலடித்து சென். ஹென்றீஸ் கல்லூரி அணியை அழுத்தத்திற்குட்படுத்தினார்.

கடந்த குருநகர் பாடும்மீன் அணியுடனான காலிறுதிப் போட்டியில் சிறப்பான தாக்குதல் ஆட்டத்தை (attacking play) வெளிப்படுத்திய சென். ஹென்றீஸ் கல்லூரி அணியின் ஆட்டம் இப்போட்டியில் பெரிதாக எடுபடவில்லை.

சென்.ஹென்றீஸ் கல்லூரி அணி வீரர்களால் கொடுக்கப்பட்ட அதிக நீண்ட பந்துப்பரிமாற்றங்களை (long pass) டயமன்ஸ் அணி இலாவகமாகத் தடுத்ததுடன் ஆட்டத்தின் போக்கினையும் தனது ஆட்டப் பாணிக்கு மாற்றி ஆடியது.

சென்.ஹென்றீஸ் கல்லூரி அணி ஆட்டத்தில் அதிக ஆதிக்கம் செலுத்திய போதும் வதிரி டயமன்ஸ் முன்கள வீரர்கள் அவ்வப்போது கோல் வாய்ப்புக்களை ஏற்படுத்தினர்.

தனது அனுபவ ஆட்டத்தின் மூலம் ஆட்டத்தினை தனக்கு சாதகமாக மாற்றி ஆடிய டயமன்ஸ் போட்டியின் இரண்டாவது பாதியில் துசிகரன் அடித்த கோலின் மூலம் மேலும் முன்னிலை பெற்றது.

கோலடித்து ஆட்டத்தின் போக்கினை மாற்ற சென். ஹென்றீஸ் கல்லூரி அணி கடுமையாக முயற்சிசெய்தது. இந்நிலையில் ஆட்டத்தின் 80 நிமிடத்தில் மதுசன் சிறப்பான கோலொன்றை அடிக்க போட்டியில் ஆரவாரம் ஏற்பட்டது.

ஆட்டத்தினை சமன் செய்ய சென்.ஹென்றீஸ் கல்லூரி அணி முயன்றபோதும் வதிரி டயமன்ஸ் அணி இறுதி நேரத்தில் போராட்ட ஆட்டத்தை வெளிப்படுத்தி 2:1 எனும் அடிப்படையில் வெற்றிபெற்று ஹென்றீசியன் சவால் கிண்ண இறுதிப் போட்டியில் நுழைந்து வரலாறு படைத்தது.

போட்டியின் ஆட்ட நாயகனாக சென்.ஹென்றீஸ் கல்லூரி அணியின் வீரர் R.மதுசன் தெரிவுசெய்யப்பட்டதுடன் அவருக்கான கேடயத்தினை சென்.ஹென்றீஸ் கல்லூரி முன்னாள் ஆசிரியரும், new science world (யாழ்ப்பாணம்) கல்விநிலைய இயக்குநருமான குமரன் வழங்கி வைத்தார். (க)

# தீருவில் அணி வெற்றி



அமரர்களான கந்தசாமி குகதாஸ், ஜெயலட்சுமி, பார்த்தீபன் ஞாபகார்த்த சைனிங்ஸ் விளையாட்டுக்கழகம் இருபது-20 கிரிக்கெட் போட்டியின் அண்மையில் நடைபெற்ற போட்டியில் நேதாஜி அணியை எதிர்த்து தீருவில் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தீருவில் 19 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 103 ஓட்டங்கள் பெற்றது. தீருவில் சார்பில் லோசன் 41, மது 17 ஓட்டங்கள்,நேதாஜி சார்பில் நரேன் 3 விக்கெட்டுகள் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நேதாஜி அணி 19 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 86 ஓட்டங்கள், நேதாஜி சார்பில் பிரகாஸ் 20, மயூரன் 13 ஓட்டங்கள்,தீருவில் சார்பில் திருக்குமரன் 3 விக்கெட்டுகள் கைப்பற்றினர்.

தீருவில் அணி 17 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. (க)

# யாழின் கிரிக்கெட் இளவரசனாக முடி சூடியது சங்கானை கிங்ஸ்




சரஸ்வதியின் 97 ஆவது நிறைவு விழாவினை முன்னிட்டு அமரர்கள் சுப்பிரமணியம் கௌசிகன், சுப்பிரமணியம், இதயராஜ் ஞாபகார்த்தமாக யாழின் கிரிக்கெட் இளவரசனாக முடிசூடியது சங்கானை கிங்ஸ் விளையாட்டுக்கழகம்.

(03/07) அரியாலை கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் கரவெட்டி ஞானம்ஸ் அணியினை இரண்டு இலக்குகளினால் வீழ்த்தி முடி சூடியது சங்கானை கிங்ஸ் விளையாட்டுக்கழகம். (க)

## கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குக

நவசக்தி விளையாட்டுக்கழகம் நடத்தும் மென்பந்து கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது..

அணிக்கு 7 வீரர்கள் 5 ஓவர்கள் கொண்டதாக போட்டி அமையும்.

அனுமதிக் கட்டணமாக ஆயிரம் ரூபா அறவிடப்படும்.

வெற்றி பெறும் அணிக்கு வெற்றிக்கேடயமும் பெறுமதியான பணப்பரிசில்களும் வழங்கப்படும்.

விண்ணப்பிக்கும் விளையாட்டுக்கழகங்கள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு போட்டி ஏற்பாட்டு குழுவினர் கேட்டுக் கொள்கின்றனர்.

தொடர்புகளுக்கு:- 077 7393445, 077 238 0220, 076 885 7477, 075 462 6449. (க)

## பரிசளிப்பு விழா

வடமாகாணக்கல்வி அமைச்சின் ஆதரவுடன் Ladder தன்னார்வத் தொண்டு நிறுவனம் நடத்தும் மாவட்ட மட்ட தேசிய மட்டப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா இன்று காலை 9.30 மணிக்கு வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலையில் Ladder நிறுவன வடமாகாண இணைப்பாளர் வீகணேசராசா தலைமையில் நடைபெறவுள்ளது. (க)

## இன்றைய போட்டிகள்

யாழ். பிறீமியர் லீக் வெற்றிக் கிண்ணத்திற்காக யு.ஆர். பவுண்டேசன் நடத்தும் 20 பந்து பரிமாற்றங்களை கொண்ட துடுப்பாட்ட சுற்றுப்போட்டியில் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் போட்டியில் கிறாஸ் கோப்பர்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து யூனியன் விளையாட்டுக்கழகமும் முற்பகல் 11 மணிக்கு நடைபெறும் போட்டியில் யாழ். சென்றல் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பற்றீசியன் விளையாட்டுக்கழகமும் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும் போட்டியில் ஜொனியன்ஸ் விளையாட்டுகழகத்தை எதிர்த்து மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக்கழகமும் மோதவுள் ளது.

★★★★★★★★★★★

புத்தூர் வளர்மதி சனசமூக நிலையம் மற்றும் விளையாட்டுக்கழகம் நடத்தும் மின்னொளியிலான கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு நடைபெறும் போட்டியில் சிறுப்பிட்டி கலையொளி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து புத்தூர் குருநாதர் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (க)

# உரிய நிவாரணங்கள் வழங்கப்படவில்லை

(கொழும்பு)

வெள்ளம் மற்றும் சாலாவ இராணுவ முகாம் ஆயுதக் களஞ்சிய வெடிப்பு காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணங்களை வழங்குவதற்கு அரசாங்கம் தவறியுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணி குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்த சம்பவங்களால் பாதிக்கப்பட்ட மக்கள் வீதியிலிறங்கி ஆர்ப்பாட்டம் செய்யும் அளவிற்கு நிலைமை மாறியுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்தார். வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்ட 10,000 ரூபாயும், சாலாவ ஆயுதக்களஞ்சிய வெடிப்பினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான 50,000 ரூபாய் இழப்பீட்டுத் தொகையும் உரியவாறு வழங்கப்படவில்லை என்று விஜித ஹேரத் கூறினார். (செ-11)

## 50 ஆயிரம் ரூபாய் அபராதம்

(கரணவாய்)

கரவெட்டி காட்டுப்புலம் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி மணல ஏற்றிவந்த உழவு இயந்திர உரிமையாளருக்கு 50 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் பெருமாள் சிவகுமார் தீர்ப்பளித்துள்ளார்.

நெல்லியடிப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட மேற்படி நபர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப் பட்டிருந்தார்.

அவ்வழக்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்ட போதே 50 ஆயிரம் ரூபாய் அபராதம் நீதவானினால் விதிக்கப்பட்டது. (செ-60)

## சர்வதேச பங்களிப்பை...

போர்க்குற்ற விசாரணைகளில் சர்வதேச நீதிபதிகளின் பங்களிப்பை இலங்கை ஜனாதிபதி மற்றும் பிரதமர் நிராகரித்தமை தொடர்பில் பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதில் அளித்த போதே துணை அமைச்சர் ஹியூகோ சுவயர் இந்த கருத்தை தெரிவித்துள்ளார்.

சர்வதேச நீதிபதிகள் உள்ளடக்கப்பட வேண்டும் என்ற விடயத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர மற்றும் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் செய்த் ராத் அல் ஹுசைன் ஊடாக அரசாங்கத்துக்கு பிரித்தானிய அரசாங்கம் தொடர்ந்தும் அழுத்தம் கொடுப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்தக் குற்ற விசாரணைகளில் சர்வதேச நீதிபதிகளின் பங்களிப்பு குறித்து மேலும் கருத்து வெளியிட்ட ஹியூகோ சுவயர், எந்தவொரு பொறுப்புக்கூறல் பொறிமுறையும் நம்பகத்தன்மை வாய்ந்ததாகவும் சர்வதேச தரத்தை பூர்த்தி செய்யும் வகையிலும் அமைய வேண்டும் என்பதில் பிரித்தானிய அரசாங்கம் தெளிவாக உள்ளதாக கூறியுள்ளார்.

இதன்பிரகாரம் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் இணை அனுசரணையுடன் தீர்மானம் நிறைவேறப்பட்டதை வரவேற்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்த தீர்மானத்தில் வழங்கிய உறுதிமொழிகளை முழுமையாக நிறைவேற்றுமாறு ஜெனிவாவில் அண்மையில் நடைபெற்ற ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் அமர்வு உள்ளிட்ட பல்வேறு சந்தர்ப்பங்களில் வலியுறுத்தியதாக பிரித்தானிய துணை அமைச்சர் ஹியூகோ சுவயர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் போர்க்குற்றச்சாட்டுக்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு சர்வதேச பங்களிப்புடன் தீர்வொன்றை பெற்றுக் கொள்ளாமல் நல்லிணக்க முயற்சிகளில் இலங்கை பூரணமாக வெற்றியடைய முடியாது எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (செ-11)

## மகிந்தவுக்கு...

இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் வற்வரி 20 சதவீதமாக அதிகரிக்கப்பட்டிருந்தது. மகந்த ராஜபக்ஷ பெற்ற வரிகளுக் காகவே வற்வரியை அதிகரிக்க நேரிட்டுள்ளது.

எனினும் அடுத்த வருடம் வற்வரி குறைககப்படும் என்றும் நிதியமைச்சர் தெரிவித்தார். மேலும் நாட்டின் பொருளாதாரத்தை விழுங்கிய மகிந்த ராஜபக்ஷவை விவாதத்திற்கு வருமாறும் தாம் அழைப்பு விடுப்பதாக ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

விகாரைகளுக்கு சென்று கருத்துக்களை வெளியிடாது நாடாளுமன்றத்திலோ அல்லது பிறிதொரு இடத்திலோ விவாதத்திற்கு வருமாறும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் நாமல், யோஷித, கோத்தபாய, பஷில் என்னென்ன குற்றங்களை புரிந்திருக்கிறார்கள் என்பதை தாம் சுட்டிக்காட்ட தயார் என்றும் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார். (செ-11)

## வெளி.நீதிபதிகளை வரவழை...

இறுதிப் பத்திரிகை ஒன்றில் வெளியாகிய தலைப்பு தொடர்பாக கவலை வெளியிட்ட ஜனாதிபதி, நாட்டை திசைதிருப்பும் இவ்வாறான பொய்ப் பிரசாரங்களை தான் வனமையாக நிராகரிப்பதாகக் குறிப்பிட்டார்.

ஊடகங்களின் பொறுப்பு, நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் நன்மை செய்வதே தவிர அவர்களை வழிகெடுப்பது அல்ல என வலியுறுத்திய ஜனாதிபதி, இன்று சிலசமயங்களில் நாட்டில் தொழிற்படும் ஊடகங்களின் செயற்பாடுகள் தனக்கு மிகுந்த கவலையளிப்பதாகத் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழு இலங்கை சார்பாக வெளியிட்டுள்ள யோசனைகளில் யுத்த நீதிமன்றம் தொடர்பில் எதுவும் குறிப்பிடப்படவில்லையெனத் தெரிவித்த ஜனாதிபதி, நாட்டின் சுதந்திரம், ஜனநாயகம் மற்றும் மனிதாபிமான உரிமைகள் பற்றிக் கவனம் செலுத்துமாறு மாத்திரம் அதன் மூலம் கோரப்பட்டுள்ளதாகத தெரிவித்தார்.

26 ஆண்டு காலமாக அநீதிக்கு உள்ளாக்கப்பட்ட வடக்கு மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்காக சுதந்திரத்தின் பின்னர் எந்தவொரு அரசாங்கமும் மேற்கொள்ளாத ஒரு பணியினைத தற்போதைய அரசாங்கம் மேற்கொண்டு வருவதாக தெரிவித்த ஜனாதிபதி, நாட்டில் சமத்துவம் மற்றும் சகவாழ்வினை ஏற்படுத்தி நீதியான ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்காக அரசாங்கம் முன்னெடுக்கும் இவ் வேலைத்திட்டத்தினை இன்று ஒருசிலர் விமர்சிப்பதாகத் தெரிவித்தார்.

பௌத்த மதத்தை போசிப்பதற்கும் நாம் உலகமக்களுக்கு வழங்க கூடிய மிகப்பெறுமதி வாய்ந்த தேரவாத பௌத்த சிந்தனையை பரப்புவதற்காகவும் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் தான் அர்ப்பணிப்புடன பணியாற்றுவதாக தெரிவித்த ஜனாதிபதி, சர்வதேச பௌத்த பிரசார நடவடிக்கைகளுக்காக புதியதொரு வேலைத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முப்பீடங்களைச் சேர்ந்த மகாசங்கததினரது அறிவுறுத்தல்கள், ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களின் கீழ் நடவடிக்கை மேற்கொள்வதாகத் தெரிவித்தார். (செ-11)

## பலத்த காற்...

குறிப்பொன்றிலே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கடற்றொழில் மற்றும் கடல்சார் சமூகம் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என அந்த திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

இதேவேளை, இது குறித்து மீனவ மற்றும்கடற்சார்சமூகங்களுக்கு தெளிவுப்படுத்தியுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலைய உதவி பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார். (செ-11)

## பரவிப்பாஞ்சான் மக்களிடம்...

தாக இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் கருணாசேகர உறுதியளித்துள்ளதாக கிளிநொச்சி இராணுவ கேணல் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினரின் வசமுள்ள தமது காணிகளை விடுவிக்கக் கோரி நடைபெற்றுக் கொண்டுள்ள தொடர் கவனயீர்ப்பு போராட்டம் நடைபெறுகின்ற இடத்திற்கு நேற்று இரவு ஒன்பது மணிக்கு விஜயம் செய்த கிளிநொச்சி இராணுவகேணல் கொலம்பகே மேற்படிக்கருத்தை இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் கருணாசேகர தெரிவித்ததாக கூறினார்

அவர் தொடர்ந்து அவ் மக்களுடன் உரையாடுகையில் தாம் கட்டம் கட்டமாக காணிகளை விடுவத்து வருவதாகவும் உங்கள் கருத்துக்களையும் ஏற்றுக் கொண்டு உங்களது காணிகளையும் விடுவிக்க தமது உயர் அதிகாரிகளுடன் பேசி மிக விரைவில் ஏற்பாடு செய்வதாகவும் கூறினார்

இதற்குப் பதிலளித்த மக்கள், நாங்கள் இருப்பதற்கு வீடு இல்லாமல் தான் இப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம். எமது காணிகளை தருகிறோம் என கூறும் வரைக்கும் அமைதியான முறையில் தொடர்நதும் போராட்டத்தை முன்னெடுப்போம். எமக்கு கிளிநொச்சி அரசாங்க அதிபர் திங்கட்கிழமைக்குள் உறுதியான முடிவை வழங்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டனர்

இதற்குப் பதிலளித்த கிளிநொச்சி இராணுவ கேணல் கொலம்பகே நாளை (இன்று) ஞாயிறு என்பதால் திங்கட்கிழமை கிளிநொச்சி அரசாங்க அதிபருடன் பேசி ஒரு நல்ல முடிவை எடுப்பதாக தெரிவித்தார்

இப்போராட்டத்தில்கலந்து கொணடுள்ள மக்களின் பாதுகாப்பு சம்பந்தமாக கிளிநொச்சி பொலிசாரும் தங்களுடன் கலந்துரையாடியதாக தெரிவித்த போராட்டகாரர்கள் மாலை வேளை பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன்தங்களை சந்தித்து பேசியதாகவும் உங்களது காணிகளை பத்து நாட்களுக்குள் விடுவிக்க முடியும் என்று என்னால் பொய் வாக்குறுதிதர முடியாது.

ஆனால் உங்கள் காணிகளை விடுவிக்கும் வரை நானும் விடப் போவது இல்லை எனவும் இவ் விடுவிப்பு சம்பந்தமாக பாராளுமனறம் தொடக்கம் எல்லா இடங்களிலும் பேசி உள்ளேன். விடுவிக்கும் வரை எனது பங்களிப்பு முழுமையாக இருக்கும் என தெரிவித்ததாகவும் மக்கள் தெரிவித்தனர்.

மேலும்தமக்கு நல்ல முடிவு கிடைககும் என எதிர்பார்த்து தமது போராட்டத்தை தொடரவுள்ளதாகவும் அவரகள் குறிப்பிட்டுள்ளனர். (செ-312)

## மீனவர்கள்...

போவதாக அறிவித்துள்ளனர்.

இந்த போராட்டம் நாளை மறுதினம் பன்னிரண்டாம் திகதி கைதடியில் அமைந்துள்ள வடக்கு மாகாண சபை முன்பாக வடக்கு மாகாண கடற்றொழில் கூட்டுறவு இணையத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது.

இந்த போராட்டத்தில் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களை சேர்ந்த மீனவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இலங்கை கடற்பரப்பிற்குள் ஏற்கெனவே இந்திய மீனவர்கள் அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபட்டு வருவதால் வடக்கு மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்ட நிலையில் வடக்கு கடற்பரப்பில் சட்டவிரோத மாகரோலர் மீன்பிடியினால் உள்ளூர் மீனவர்கள்பாதிக் கப்பட்டுள்ள சூழலிலும்,

இந்திய மீனவர்களால் வடக்கு பகுதி மீனவர்களது தொழில் வலைகள் அறுத்தும் நாசம் செய்யும் சம்பவங்கள் அதிகரித்து காணப்படுகின்றது.

இதனால் வடபகுதி மீனவர்களது வாழ் வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், வடக்கு மாகாண மீனவர்களது வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்த கோரியும் இந்திய மீனவர்களை இலங்கை கடற்பரப்பினுள் மீன்பிடிக்க அனுமதிக்கக் கூடாது என வலி யுறுத்தியும் இந்த போராட்டம் நடைபெறவுள்ளது என வடக்கு மாகாண கடற்றொழில் இணைய செயலாளர் என்.வி.சுப்ரமணியம் தெரிவித்துள்ளார். (செ-4)

## 2ஆவது தென்னை முக்கோண...

இலங்கையின் இரண்டாவது தென்னை முக்கோண வலயமாக யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு ஆகிய 3 மாவட்டங்களை பெருந்தோட்ட அமைச்சர் நவீன் திசாநாயக்க பிரகடனப்படுத்தியுள்ளார்.

நேற்றைய தினம் யாழ்பபாணம் வருகை தந்த அமைச்சர் யாழ்ப்பாணம் சாவகச்சேரியில் அமைந்துள்ள கலாசார மண்டபத்தில் தென்னங்கன்றுகளை வழங்கி வைக்கும் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டிருந்தார்.

இதன்போது உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். நாட்டில் கடந்த காலங்களில் நடைபெற்ற யுத்தம் முடிபுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இந்த யுத்தத்தில் பல்லாயிரக் கணக்கானவர்கள் கொல்லப்பட்டார்கள்.

இதன்போது எனது தந்தையாரான காமினி திசாநாயக்கவும் கொல்லப்பட்டிருந்தார். இவ்வாறு பலர் உறவுகள் இல்லாமல் இப்போதும் உள்ளதனை நான் அறிவேன்.

யுத்தத்தினால் மனிதர்கள் மட்டுமல்ல வளம் தரும் மரங்களும்தான் அழிக்கப்பட்டன. குறிப்பாக தென்னை மரங்கள் இங்கு நடைபெற்ற யுத்தத்தினால் பெரிதும் அழிவடைந்துளளது. நாங்கள் இவற்றை எல்லாம் மீள கொண்டுவருவதற்கு முயற்சி செய்து வருகின்றோம்.

இதன்முதற்கட்டமாக தான் இலங்கையின் இரண்டாவது தென்னை முக்கோண வலயமாக யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களை பிரகடனப்படுத்தி உள்ளோம்.

இந்த மூன்று மாவட்டங்களிலும் தேயிலை, இறப்பர் ஆகிய பயிர்கள் பயிரிட முடியாவிட்டாலும், தென்னை பயிர்ச்செய்கையை மேற்கொள்ள முடியும். கடந்த கால அரசாங்கம் இவை தொடர்பில் கவனம் செலுத்தாத போதிலும் தற்போது பொறுப்பேற்றுள்ள அரசாங்கம், இவை தொடர்பில் விசேட கவனம் செலுத்தி செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தியும் வருகின்றது.

நாடு முழுவதும் எண்பதாயிரம் தென்னை மரங்களை நாட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வரும் அதே வேளை, வடக்கு மாகாணத்தில் மாத்திரம் 45 ஆயிரம் மரக்கன்றுகளை நாட்டுவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றோம். யுத்தம் முடிவடைநது விட்டது. அதனால் ஏற்பட்ட இழபபுக்கள் இன்னமும் முடிவடையவில்லை. நான் எனது தந்தையை இழந்தது போன்று,

நீங்களும் உங்கள் உறவுகளை பிரிந்துள்ளீர்கள் என்பது எமக்கு நல்லாகவே தெரியும், அந்த வழிகளில் இருந்து மீள்வதற்கு நாம் பல தியாகங்களை செய்ய வேண்டியுள்ளது. இந்த வேலைத் திட்டமும் அதனோடு ஒன்றிணைந்த ஒன்று தான்.

எதிர்வரும் காலங்களில் இந்த திட்டங்களில் மூலம் அனைத்து நாட்டு மக்களும் ஒன்றிணைந்து சமாதானம்நிறைந்த அபிவிருத்தியை நோக்கி பயணிக்க முடியும் என அமைச்சர் நவீன் திசாநாயக்க தெரிவித்தார். (செ-4)

## பொருளாதார...

கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில்கூடி பொருளாதார மத்திய நிலையத்தை ஓமந்தையில் அமைப்பதே பொருத்தம் என தீர்மானித்ததுடன் ஒதுக்கப்பட்ட காணிகளை பார்வையிட்டு இறுதி முடிவெடுபபது எனவும் தீர்மானித்திருந்தனர்.

இந் நிலையில் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக்கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராஜா, வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வவுனியா சட்டத்தரணிகள் சங்க தலைவர் அன்ரன் புனிதநாயகம், வவுனியா விவசாயிகள் சம்மேளனத்தலைவர் ரங்கன் ஆகியோர் கொண்ட குழு ஓமந்தை பகுதியில் 2010 ஆம் ஆண்டு அபிவிருத்தி குழு கூட்டத்தில் பொருளாதார மத்திய நிலையத்திற்கு என ஒதுக்கப்பட்ட 18 ஏக்கர் காணி மற்றும் மாணிக்க வளவு காணி உட்பட தாண்டிக்குளம காணியையும் பார்வையிட்டிருந்தனர்.

இதன் நிமித்தம் மாவை சேனாதிராஜா எம்.பி இன்று வட மாகாண முதலமைச்சரை நேரில் சந்தித்து காணி விடயங்களை எடுத்துக்கூறவுள்ளதுடன் இரு நாட்களுக்குள் முடிவினை அறிவிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (செ-2,4,250)

## சீன வெளிவிவகார...

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யீ நேற்று சனிக்கிழமை காலை சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

இதன்போது தென்சீனக் கடற்பரப்பில் மேலெழுந்திருக்கும் சர்ச்சை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் முக்கியமாக கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், இலங்கையின் உட்கட்டமைப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பிலும் இவர்கள் இருவரும் பேச்சு நடத்தியதாகவும் தெரியவருகின்றது.

இலங்கைக்கு மூன்று நாள் அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொண்டு சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யீ நேற்று கொழும்பை வந்தடைந்தார்.

இதையடுத்து வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்திய சீன வெளிவிவகார அமைச்சர் வாங்யீ, பின்னர் செய்தியாளர்களையும் சந்தித்திருந்தார்.

அத்துடன், இலங்கையின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க, மூலோபாய அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரம ஆகியோரையும் சீன வெளிவிவகார அமைச்சர் வாங்யீ நேற்றுமுன்தினம் மாலை சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார்.

தென்சீனக் கடல் பகுதிகளில் சீனாவின் உரிமைக் கோரல் தொடர்பான சட்டப்பூர்வ தன்மை குறித்து அடுத்த வாரமளவில் சர்வதேச நீதிமன்றத்தின் தீர்ப்பு வழங்கப்படவுள்ள நிலையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினை சீன வெளிவிவாகர அமைச்சர் வாங்யீ சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார். (செ-11)

## நாடாளு...

எடுத்துக்கொள்ளப்பட்டது.

உள்ளகப் பொறிமுறையில் வெளிநாட்டு தரப்பினரின் பங்குபற்றுதல் தொடர்பில் திருத்தங்களை மேற்கொள்வதாக அரசாங்கம் கூறியிருந்ததாக குறிப்பிட்ட வாசுதேவ நாணயக்கார, இந்த விடயத்தில் தற்போது திருத்தம் செய்யப்பட்டுள்ளதா என வினவிய போதே நீதியமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (செ-11)




Sanjeya உணவகத்தால்
யாழ் மக்களுக்கு ஓர் அரிய செய்தி

நாளை முதல் - (11 July 2016) காலை 11 மணிமுதல் இரவு 10 மணி வரை ... முக்கியமாக யாழ் முறைப்படி தயாரிக்கப்பட்ட சைவ, அசைவ உணவுகளான

✓ சுறா பிட்டு ✓ இறால் பிட்டு

அத்துடன் ஏனைய இந்தி, சைனிஸ் உணவுகளுடன் ஒடியல் கூல் (Coole) (புதன் மற்றும் சனி, ஞாயிறு) தினங்களில் வழங்கப்படும்.

யாழ் மாநகர சபைக்குள் 1000/- க்கும் மேற்பட்ட ஓடர்கள் குறுகிய நேரத்துக்குள் **Door Delivery** செய்யப்படும்.

Sanjeya Foodland
No, 713, Hospital Road, Jaffna
Contact No - 021 221 7070
- 077 222 1379

ஹோட்டல் வேலைக்கு சகல விதமான வேலையாட்களும் தேவை. AD லைசன்ஸ் உள்ள சாரதி தேவை. 077 7474111 (சி-5151)





LONDON METROPOLITAN COLLEGE

புதிய பிரிவுகள் ஆரம்பம்

IELTS LIFE SKILLS (A1)

Speaking & listening
**Duration : 48 hours** (week & week ends)
UKBA இன் புதிய நடைமுறைக்கேற்ப settlement விசாக்களுக்கான **IELTS A1** புதிய பாடத்திட்டம் தற்போது கற்பிக்கப்படும்.
- ஒவ்வொரு மாணவர் மீதும் தனிப்பட்ட கவனம்
- இதுவரை பயின்ற அனைத்து மாணவர்களுமே சித்தி அடைந்துள்ளனர்.

IELTS
Academic & General
**Duration : 48 hours** (week & week ends)
மாணவர்களின் ஆங்கில அறிவுக்கேற்ப ஒவ்வொருவருக்கும் விசேட கவனிப்பு முற்றிலும் நவீன மயப்படுத்தப்பட்ட கற்பித்தல் வசதி
**IELTS 5.5 - 6.5 Band** பெறுவதற்கான உத்தரவாதம் ஒரே தரத்திலேயே தேவையான Band இனை பெற்றுக்கொள்ளலாம்.
லண்டனில் உயர்கல்வி கற்பது தொடர்பான இலவச ஆலோசனைகள் வழங்கப்படும்.

அனைத்து கற்கை நெறிகளிலும் புதிய பிரிவுகள் ஆரம்பம்.தவணை அடிப்படையிலான மிகக் குறைந்த கட்டணம்.

LONDON METROPOLITAN COLLEGE
No 136, palali road, parameswara junction, Jaffna.
HOTLINE : 021 753 8395
(சி-5142)



யாழ் மதர் கெயார்
Dental Unit
Reg.No.#PV85754



நவீன உபகரணங்களின் உதவியுடன் விசேட வைத்திய நிபுணர்களினால் பல்லுக்கு கிளிப் (Clip) போடுதல், நிரந்தர பல்கட்டுதல் உட்பட மற்றும் பல உயர்தர சேவைகள் தற்போது யாழ் நகரில்




- பல், வாய், வைத்திய சேவை (விசேடமாக வேரடைப்பு,பல் வெண்மையாக்கல்)
- பல், வாய், முகம் அறுவைச் சிகிச்சை (அண்ணப்பிளவு மற்றும் வாய், முக சீரமைப்பு)
- பல், வாய், முகம் சீரமைப்பு (ஒழுங்கற்ற, மிதப்புப் பற்கள் சீராக்கல்)

514/18, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாக)
(சி-5130) Tel : 021 221 9595, 021 221 9797, Mob : 077 220 2769



வேலையாட்கள் தேவை

செட்டியார் தெருவில் இயங்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரின் கம்பனியில் **Machine operators** (உதவியாளர்கள்) ஆண்கள் தேவை. வயது எல்லை 16 - 35 வரை. வேலை நேரம் 8.30 am to 5.00 pm சனிக்கிழமை 8.30 am to 1.00 pm சம்பளம் ரூபா 14000.00 வழங்கப்படும். வரவுக் கொடுப்பனவு ரூ 1500.00 மாதாந்தம் மேலதிக வேலை நேரக் கொடுப்பனவு. (OT) உண்டு. 1 மணித்தியால (OT) ரூ. 87.00 மற்றும் EPF & ETF வழங்கப்படும்.

நேரில் வரவும். இல 196, செட்டியார் தெரு, கொழும்பு 11 - 0777 386 392

தங்குமிட வசதி உண்டு
(5159)



வேலைவாய்ப்பு

இலங்கையின் முன்னணி நிறுவனமான பியூச்சர் கிறீன் வேல்ட் நிறுவனத்திற்கு வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு,

- வலய இணைப்பாளர்
- பிரதேச இணைப்பாளர்
- மாவட்ட இணைப்பாளர்
- விவசாய போதனாசிரியர் (ஓய்வுபெற்றவர்கள் அல்லது பகுதிநேர பணி புரியக் கூடியவர்கள்)
- வரவேற்பாளர்கள் (பெண்-கணனி அறிவு கட்டாயம் தேவை)
- வெளிக்கள உத்தியோகத்தர்,
- பண்ணை முகாமையாளர் தேவை.

தகுதியுடையவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு சுயவிபரக் கோவைகளை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பியூச்சர் கிறீன் வேல்ட்
பணிப்பாளர், மனிதவளப் பிரிவு,
இல.133 கண்டி வீதி, யாழ்ப்பாணம். (5165)



Dutch, Deutsch, French

தூதரக பரீட்சைக்கான ஜேர்மன் - Deutsch (டொச்) மற்றும் நெதர்லாந்து - Dutch (டச்) உட்பட அனைத்து புதிய பிரிவுகளும் ஆரம்பமாகின்றது.

- French, Italian, English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.
- வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழி கல்வி நிறுவனம் எங்களுடையதே.
- Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.
- Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.

அனைத்து புதிய வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன

Vivekananda Academy
221/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
0213216928, 077 4842 464
(Gov. Reg: W/A 76795) (C-5143)



CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை



உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

அழையுங்கள் - 077 29 31 062

CNR World wide Express
No.401 Clock tower road, Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)
(C-5131)



வேலைவாய்ப்பு

வவுனியாவில் உள்ள எமது நிறுவனத்துக்கு A/L வணிகப்பிரிவில் கல்வி கற்ற பெண்கள் தேவை. சகல ஆவணங்களுடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.
வயதெல்லை 18 தொடக்கம் 30 வரை
வெளியிட பிள்ளைகளுக்கு தங்குமிட வசதி செய்து தரப்படும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
G H A De Silva & Company
இல.64, பசார் வீதி, வவுனியா.
024 222 2319 (5141)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532



முதலீட்டாளர்கள் தேவை

விவசாயத் துறையில் முன்னணி வகிக்கும் பியூச்சர் கிறீன் வேல்ட் நிறுவனத்திற்கு முதலீட்டாளர்கள் தேவை.

தொடர்புகளுக்கு:-
0775470701 (5165)



வீட்டுப்பணிப் பெண் தேவை

தங்கி நின்று வேலை செய்யக்கூடிய வீட்டுப்பணிப் பெண் தேவை. சாப்பாடு, தங்குமிடம் இலவசம்

இடம்
வல்வெட்டித்துறை

தொடர்புகளுக்கு -
0775995659
0773916047



G.C.E. A/L - 2016
இலங்கையின் முதற்தர வணிக ஆசிரியர் யாழ் மண்ணில் !!!
Business Studies
Final Seminar
S.Mayuran (BBA,Hons,PGDE,MBS,MED SLPS)
(இலங்கையின் பிரபல வணிக நூல், வணிக ஆசிரியர்)
காலம் :- July 11th நேரம் :- 8.30 A.m - 5.30 Pm
முதலீடு :- Rs 500/- (Tutes Refreshment உட்பட)
Veerasingam Hall
No.12, KKS Road, Jaffna.
Tel : 077 8446254 / 077 6027167


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.07.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரி
சங்குநாதம்
Sankunatham

வள்ளுவர் ஆண்டு 2047 10.07.2016 தொலைபேசி : 021 222

நாதம் 73




# பொருளாதார மத்திய நிலையம் ஓமந்தையிலா? தாண்டிக்குளத்திலா?





# இனப்படுகொலை குற்றமில்லை!

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

பண்டிதர் பரமலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு ஆரம்பமாகியது. இறை வணக்கத்துடன் மாநாட்டை ஆரம்பிப்பம் என்று பண்டிதர் சொன்னதும் சாத்திரியார் சதாசிவம் நத்தார் படை ஞானன் பசு வேறின்... என்ற திருக்கேதீச்சரத்துத் தேவாரத்தை இசையோடு பாடினார்.

தொடர்ந்து மூப்பர் கிறிஸ்தவ கீதத்தை இசைக்க இறைவணக்கம் நிறைவுற்று அனைவரும் ஆலடி மாநாட்டில் அமர்ந்து கொண்டனர்.

வாத்தியார் வைத்திலிங்கம் தன் தோளில் கிடந்த உத்தரியத்தை எடுத்து தன் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

சாத்திரியார் நத்தார் படை ஞானன் பசு என்று இசையோடு பாடிய போது வாத்தியாரின் கன்னத்து ஓரங்கள் நனைந்து கொண்டதை விதானையார் விசுவலிங்கம் கவனித்திருந்தார். தேவார இசையின் இன்பமாக அவரின் கண்கள் துளிர்த்துக்கொண்டனவோ என்று தான் விதானையார் நினைத்திருந்தாலும் பின்னர் வாத்தியார் கண்ணீர் விட்டதற்குள் அவரின் ஆழ்மனத்தில் ஏதோவொரு கவலையுள்ளது என்பது தெரிந்தது.

**விதானையார்:** என்ன வாத்தியார் ஐயா? உங்களுக்கு ஒரு குறையுமில்லைதானே!.

**வாத்தியார்:** எனக்கு ஒரு குறையும் இல்லைதான். ஆனால் பாடல் பெற்ற எங்கட திருக்கேதீச்சரத்தின்ர புனித தீர்த்தமாகிய பாலாவியில் பிற மதங்களின்ர ஆக்கிரமிப்பைக் கண்டு தான் உள்ளம் வெதும்புது.

இலங்கையின்ர வரலாற்றில சைவசமயம் எந்தச் சமயத்தின் நலத்தையும் ஆக்கிரமித்ததாக வரலாறில்லை. எல்லாச் சமயங்களையும் மதிக்கவேணும் என்பதில சைவசமயம் மிகவும் நிதானமாக இருக்கிறது.

**கங்காணி:** விதானையார் அதுதானே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் அண்மையில இந்து சமயப் பிரதிநிதிகளைச் சந்தித்தபோது இந்து சமயத்தை நான் மதிக்கிறேன். அவர்களின்ர அஹிம்சையைப் பாராட்டுகிறேன் என்று சொன்னவர்.



## கீரிமலைக் கடலில் என்ன நடக்குதாம்?

**வாத்தியார்:** அவர் அப்படிச் சொன்னாலும் இன்றைக்கு இந்த மண்ணில எல்லாச் சமயங்களும் சைவசமயத்தைத்தானே ஆக்கிரமிக்கின்றன. இது எந்த வகையில நியாயம்.

**சாத்திரியார்:** வாத்தியார் நீங்கள் சொல்லுறது உண்மைதான். கதிர்காமத்து கந்தப்பெருமான் இன்றைக்கு புத்தபிரானாக மாறிக் கொண்டு வாறார். கதிர்காமப் பெருமானின்ர திரு வீதியுலாக்களின் போதெல்லாத் பௌத்த தர்மக் கொடிகள்தான் கொண்டு செல்லப்படுகின்றன.

வேற்படை, சேவல் கொடி எதுவும் கிடையாது. ஒட்டுமொத்தத்தில் சைவத் தமிழ்மக்களுக்கு எந்தவிதத் தொடர்பும் இல்லாத கடவுளாக கதிர்காமக் கந்தனை மாற்றிப்போட்டினம்.

**பண்டிதர்:** சாத்திரியார் நீங்கள் நினைக்கிற மாதிரி இல்லை. சமயவாதம் யாரிட்ட இருக்குதோ அவர்கள் நிச்சயம் இறைவனால் தண்டிக்கப்படுவினம். அவரவர் தத்தம் சமயத்தில நின்று நல்லொழுக்கத்தின் படி மனிதர்களாக வாழ வேணும். இதைவிடுத்து சமயம் பரப்புகிறம், சமய மாற்றம் செய்கிறம் என்று வெளிக்கிட்டவியள் கந்தறுந்து காவடி எடுப்பினம் பாருங்களன். முந்தி இலங்கைக்கு வந்த அந்நியர் சைவக் கோயில்களை இடிச்சுத் தள்ளிச்சினம்- இப்ப அவையளின்ர நாடுகளில் சிவனுக்கும் முருகனுக்கும் விநாயகனுக்கும் தேர் ஓடுது எண்டால் கடவுள் என்ன செய்யிறான் என்பது தெரியும் தானே! அதாலதான் சொல்லுறன் மதவாதம் பிடித்து சைவ சமயத்தின்ர நில புலன்களை ஆக்கிரமிக்கிறதும் தத்தம் மதம்சார் கடவுள் களின்ர சிலையளை ஸ்தாபிக்கிறது இதெல்லாம் கொடும் பாவச்செயல்.

இந்தப் பாவச் செயல்களைச் செய்பவர்கள் தங்கள் இறுதிக்காலத்தில வேதனைப் பட்டுத்தான் இறப்பினம் இது நிச்சயம். இந்தமத வாதத்தை சைவசமயத்தில இருக்கிறவியள் செய்தால் அவையளுக்கும் அதேகதிதான். கடவுளுக்கு சமயம் ஒரு பொருட்டல்ல. மனிதம், ஜீவராசிகள் பாவம், புண்ணியம் இவைதான் கடவுள் கணக்கில எடுக்கிற விடயங்கள் என்பதை அனைவரும் அறிந்து கொள்ள வேணும்.

(பண்டிதர் பரமலிங்கம் கடுந்தொனியில் வேகமாகச் சொல்லிமுடித்தார். பண்டிதர் உணர்ச்சிவசப்பட்டுக் கூறியதும் ஆலடி மாநாட்டில் சில நிமிடங்கள் மௌனம் நிலவியது. மௌனத்தைக் கலைக்கும் பொருட்டு மூப்பர் குரல் கொடுத்தார்.)

**மூப்பர்:** பண்டிதர் ஐயா சொன்னது முழுக்க முழுக்க உண்மை. திருவாசகத்தின் பெருமை பற்றி தவத்திரு தனிநாயகம் அடிகள் வியந்து போற்றினார். சைவசித்தாந்தம் பற்றி எங்கள் மதிப்புக்குரிய மரியசேவியர் அடிகளார் ஆய்வு செய்தார். போப் என்ற பாதிரியார் திருவாசகத்தை ஆங்கிலத்தில மொழி பெயர்த்தார்.

இப்படியாக கத்தோலிக்க மதத் தலைவர்கள், மதம் என்ற எல்லை கடந்து ஆன்ம ஈடேற்றத்திற்கு எந்தத் தத்துவங்கள் வழிசெய்கின்றனவோ அவற்றை வெளிப்படுத்தினர்.

இப்படி எல்லாரும் இந்த மண் இறைவன் வாழும் பதியல்லோ. இருந்தும் இப்ப மதவாதம் தலைக்கேறி இருப்பது கவலைக்குரியதுதான்.

**சாத்திரியார்:** என்னைப் பொறுத்தவரை இலங்கையில சைவசமயத்தில இருந்து மதம் மாறியவர்களை மீளவும் தாய்ச் சமயத்திற்குத் திரும்புதல் என்றொரு இயக்கத்தை ஆரம்பிக்கவேணும். தாய்ச் சமயத்திற்குத் திரும்புதல் அல்லது மதம் மாறிய சமயத்தில் அப்படியே இருந்து கொண்டு தாய்ச் சமயத்தின் எழுச்சிக்கு உதவுதல் என்றொரு திட்டத்தின் கீழ் சைவத் தமிழ்ப் பக்தி இயக்கமொன்றை உருவாக்கினால் மட்டுமே இந்த மண்ணில, கதிர்காமத்தில, நயினாதீவில, கீரிமலையில நடக்கிற மதவாத அநியாயங்களைத் தடுக்க முடியும்.

**விதானையார்:** அது சரி சாத்திரியார். கீரிமலையில என்று சொன்ன மாதிரி இருந்தது. அங்க என்ன நடக்குதாம்.

**சாத்திரியார்:** என்ன? விதானையார் நான் வெளிநாட்டில இருந்து வந்து கீரிமலையில நடக்கிறதை அறிஞ்சிருக்கிறன். நீங்கள் இஞ்ச இருந்தும் அது பற்றி அறியாமல் இருக்கிறியள்.

**விதானையார்:** சாத்திரியார் உண்மையாச் சொல்லுறன். கீரிமலையில நடக்கிறது என்ன என்று எனக்குத் தெரியாது.

**சாத்திரியார்:** கீரிமலைக் கடலை ஆழமாக்குகிற பணி நடக்குதாம். துறைமுகம் அமைத்தல் என்ற பெயரில கீரிமலைக் கடலை ஆழமாக்குகிற வேலை நடப்பதாகக் கேள்வி. ஆனால் உள்நோக்கம் என்ன? என்பது தெரியாமல் தான் இருக்குது.

**கங்காணி:** அப்ப கீரிமலைத் தீர்த்தக் கரை என்ன மாதிரி?

**சாத்திரியார்:** அதுக்குத் தான் சொல்லுறன். கீரிமலை தீர்த்தக் கரையை ஆழமாக்கினால் பிறகெங்க பிதிர்க்கடன் செய்யிறது, தீர்த்தமாடுகிறது. என்ன செய்வம் எங்கட கீரிமலை தீர்த்தத்தின் கரையும் பறிபோகப்போகுது போல.

**வாத்தியார்:** அப்ப எங்கட சாம்பலை காக்கை தீவுக் கடலிலதான் கொட்ட வேணும் ஆக்கும்.

(மாநாட்டில்சிரிப்பு)

பண்டிதர்:ஏன்? இது தொடர்பில எங்கட பிரதேச செயலர் மற்றும் யாழ். மாவட்ட அரச அதிபரோட தொடர்பு கொண்டு கீரிமலையில என்ன நடக்குது என்று கேட்டால் என்ன?

**கங்காணி:** உண்மைதான் பண்டிதர். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கீரிமலையில என்ன நடக்குது? என்பதை வெளிப்படுத்த வேணும்.

இப்படி கங்காணியார் கூற அதை ஆமோதிப்பது போல ஆலடிப்பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# பொருளாதார மத்திய நிலையம் ஓமந்தையிலா? தாண்டிக்குளத்திலா?

## வாக்கெடுப்பு என்ற பாசுபதம் ஏவப்படுமா?

வடபகுதிக்கான பொருளாதார மத்திய நிலையத்தை தாண்டிக் குளத்தில் அமைப்பதா? அல்லது ஓமந்தையில் நிர்மாணிப்பதா? என்ற வாதப் பிரதிவாதங்கள் இப்போது தமிழ் அரசியல் பக்கத்தில் சூடு பிடித்துள்ளது.

பொருளாதார மத்திய நிலையம் வடபகுதிக்கானது என்பதால் அதன் நன்மைகள் வடபுலத்து மக்கள் அனைவருக்கும் கிடைக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும் என்பது நியாயமான கருத்தாகும்.

எனினும் வடமாகாணத்திற்கான பொருளாதார மத்திய நிலையம் என்று அரசு கூறிக்கொண்டாலும் அதனை வடமாகாணத்தின் எல்லைப் பகுதியில்- பெரும்பான்மையின மக்கள் வாழுகின்ற பிரதேசத்தை அண்மித்ததாக அமைப்பதே அரசின் நோக்கமாக உள்ளது.

தமிழர்களுக்கு எதைக் கொடுத்தாலும் அதில் எம் இனத்திற்கு இருக்கக்கூடிய நன்மை என்ன? என்ற கேள்வி பெரும்பான்மை இனத்திடம் முதலில் எழுவதுதான் இப்போது இருக்கக்கூடிய மிகப்பெரும் துரதிர்ஷ்டம்.


வடபகுதிக்கான பொருளாதார மத்திய நிலையத்தை மதவாச்சியில் அமையுங்கள் என்று வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனிடம் சம்பந்தப்பட்ட மத்திய அமைச்சர் ஒருவர் கேட்டதாகவும்,


அப்படியானால் பொருளாதார மத்திய நிலையத்தை எங்க்ளுக்குத் தருவதாக ஏன்? கூறுகிறீர்கள் என்று வடக்கின் முதலமைச்சர் மறுத்தான் போட்டதாகவும் ஒரு தகவல்.

எது எப்படியாயினும் இலங்கைத் தீவில் தமிழர் தாயகம் என்றொரு இடம் இனிமேல் இருத்தலாகாது என்பதில் இலங்கை அரசும் தென்பகுதி புத்திஜீவிகளும் மிகவும் உறுதியாக உள்ளாணர்.

இதன் ஒரு நடவடிக்கையாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் கிழக்குப் பல்கலைக் கழகத்திலும் சிங்கள மாணவர்களின் செறிவு அதிகரிக்கப்படுவதைக் காணமுடியும்.

மேற்குறித்த இரண்டு பல்கலைக்கழகங்களும் தமிழ்ப் பல்கலைக்கழகங்களாக இருப்பது தொடர்ந்தும் தமிழர் உரிமை என்ற விடயத்தைப் பேசு படுபொருளாக்கும் என்பதால்- சிங்கள மாணவர்களுக்கு எந்தளவு தூரம் குறித்த இரண்டு பல்கலைக்கழகங்களிலும் அனுமதி கொடுக்க முடியுமோ அந்தளவுக்கு அனுமதி கொடுப்பதைக் காண முடிகின்றது.







இந்த அனுமதிகள் எப்படி நடக்கின்றன. இதற்குள்ளும் குளறுபடிகள் இருக்கின்றனவா? என்பதைக் கண்டறிய எங்களால் ஒருபோதும் முடியாது.

ஏனெனில் எங்கள் அரசியல் தலைமை என்பது தமிழினப் பற்றொழித்த- இலங்கை அரசுக்கு எவ்வளவு தூரம் விசுவாசமாக இருக்கமுடியுமோ அந்தளவிற்கு விசுவாசமாக இருத்தல் என்ற நிலைப்பாட்டில் உள்ளது.

ஆகையால் சிங்கள ஆட்சியாளர்கள் எப்படியெல்லாம் தமிழர்களை நசுக்க முடியுமோ அந்தளவுக்கு திட்டம் தீட்டி காரியத்தைச் செயற்படுத்துவதில் மிகத் தீவிரமாக உள்ளனர்.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் சிங்களப் புத்திஜீவிகள் அணி அணியாகக் கூடி தமிழர்களின் வலிமையை எப்படிக் குறைப்பது, அவர்களின் கலை கலாசாரத்தை எப்படி நசுக்குவது, தமிழினம் தனியினம் என்பதை எப்படி வேரறுப்பது என்று கூடி ஆராய்ந்து எடுத்த முடிவுகளையெல்லாம் அமுல்படுத்தினர். இன்று எம் இனம் தொடர்பில் நாம் அழுகின்ற கண்ணீருக்கு தென்பகுதிப் புத்திஜீவிகள் தீட்டிய சதித் திட்டங்களே காரணம் என்பது அறிதற்குரியது.

இவை நடந்து கொண்டிருந்த அதேவேளை விடுதலைப்புலிகளின் தோல்விக்குப் பின்னர் தமிழினத்தின் தலைமையில் தமிழின வெறுப்பாளர்கள் இடம் பெற வேண்டும் என்பதிலும் தென்பகுதி ஆட்சிப்பீடம் மிகவும் உறுதியாக இருந்தது.

தனது உறுதிப்பாட்டைச் செய்வதிலும் அரசு வெற்றி கண்டது. அந்த வெற்றிதான் யுத்தத்தின் இழப்புகளுக்கான நிவாரணங்கள் எதுவும் தமிழர்களுக்குக் கிடைக்காமல் போவதற்குக் காரணமாயிற்று.

அதேநேரம் யுத்தத்தின் தோல்வியால் துவண்டு போயிருந்த தமிழ்மக்களும் தமது அரசியல் தலைமையின் தூய்மை பற்றி இம்மியும் கருத்தில் கொள்ள மறுத்தனர்.

அவர்கள் செய்தால் சரியாக இருக்கும் என்ற எங்களின் தவறான எடுகோள் ஜெனிவாவில் வைத்து எங்களின் தலையில் மண்ணைக் கொட்டியது.

விடுதலைப்போராட்டம் மண் மீட்பைத் தந்திருக்க வேண்டும். இருந்தும் அது சாத்தியமற்றுப்போக, இறுதிப்போரின் இழப்புகள் தமிழர்களுக்கு அவர்கள் கேட்பதைக் கொடுக்கப் போதுமானது என்றிருந்த சர்வதேச முடிவை எங்களைக் கொண்டே அவர்கள் உடைப்பித்து எதுவும் கிடையாது என்ற நிலைக்குக் கொண்டு வந்து விட்டனர்.

இவைதான் போகட்டும் என்றால், தமிழர்களுக்கு எனக் கிடைத்த வடக்கு மாகாண அரசிலும் குழப்பங்களை ஏற்படுத்த ஒரு கூட்டம் கடுமையாகப் பாடுபடுகிறது.

மக்கள் வாக்களித்தால்தான் அடுத்த முறையும் பதவி கிடைக்கும் என்பதை அடியோடு மறந்து வீட்டுச் சின்னத்தில் இடம் கிடைத்தால் பதவி நிச்சயம் என்று நினைக்கும் அளவில் தமிழ் மக்களின் அரசியல் பலவீனம் உச்சமடைந்துள்ளது.

இத்தகைய சந்தர்ப்பத்தில்தான் வடபகுதிக்கான பொருளாதார மத்திய நிலையத்தை தாண்டிக்குளத்தில் அமைப்பதா? ஓமந்தையில் உருவாக்குவதா? என்ற வாதப்பிரதிவாதம் எழுந்தபோது ஓமந்தையில் அமைப்பது தான் பொருத்தம் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்கள் அறிவித்தார்.

எனினும் இந்த அறிவிப்புக்கு மாறாக மேற்குறித்த இடத்தெரிவு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தரின் மாளிகைக்குச் செல்கிறது.

காலமும் நேரமும் காத்திருந்தது போல சம்பந்தர் ஐயாவும் தாண்டிக்குளமா? ஓமந்தையா? என்பது குறித்து வடக்கு மாகாண சபையில் வாக்கெடுப்பு நடத்துங்கள் என்றார்.

வடக்கின் முதலமைச்சரைப் பழி தீர்ப்பதற்கு பொருளாதார மத்திய நிலையத்தைப் பயன்படுத்திக் கொள்வதுதான் மிகப்பெரும் அபத்தம்.

தமிழர்கள் இப்படியான இடங்களிலாவது தங்களின் ஒற்றுமையைக் காட்ட வேண்டும். ஆனால் அரசியல் பழி தீர்க்கும் பாசுபதங்களாகவே இந்தச் சம்பவங்கள் கையாளப்படுகின்றன.

எது எப்படியாயினும் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் ஒருமித்து முதலமைச்சரோடு சேர்ந்து ஒரு தீர்மானத்திற்கு வருவதே அவர்கள் செய்யக் கூடிய உதவியாகும்.

இருந்தும் பார் முதலமைச்சருக்குச் செய்து காட்டுகிறேன் என்ற கோசத்தோடு ஒரு சிலர் பிரசாரம் செய்வதாகவும் தாண்டிக்குளத்தை ஆதரித்து வாக்களிக்குமாறு கோருவதாகவும் அறிந்தபோது தலை சுற்றியது.

கடவுளே! அரசியல் இந்தளவுக்குக் கீழ்த்தரமானதா? அறிவியல் ரீதியில் சிந்தித்து செய்யவேண்டிய ஒரு விடயத்திற்கு வாக்கெடுப்பு நடத்துகின்ற அளவில் நம் நிலைமை ஆயிற்றே என்று வேதனைப்பட்டாலும் தமிழ் மக்களின் நலன்கருதி வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் செயற்படுவர் என்ற நம்பிக்கை நம் வேதனைக்கு இன்னமும் ஒத்தடம் கொடுத்துக் கொண்டிருக்கிறது என்ற செய்தியைச் சொல்லித்தானாக வேண்டும்.

விதுரன்




# குயில் வைத்தியர்

கர்ப்பூரவள்ளி என்ற காட்டில் ஆந்தைக் குடும்பம் ஒன்று வாழ்ந்து வந்தது. ஆந்தைக்கு இரண்டு ஆந்தை குஞ்சுகள் இருந்தன. தன் குஞ்சுகளை பேணிப் பராமரித்து வளர்த்தது தாய் ஆந்தை. குஞ்சுகள் வளர வளர அம்மாவிடம் பல கேள்வி கள் கேட்க ஆரம்பித்தன.

ஒரு நாள், "அம்மா எல்லாரும் பகலில்தான் சுறுசுறுப்பாக உலாவிக் கொண்டிருக்கின்றனர். நாம் மட்டும் பகலில் தூங்கிவிட்டு இரவில் இரை தேடுகிறோம். நாம் சென்று இரை தேடும் வேளையில் ஊரே உறங்கிக் கொண்டிருக்கிறது. இது ஏன்?" என்றது.

"நமக்கு பகலில் கண் தெரியாது. இரவில்தான் கண் தெரியும். அதனால் தான் நாம் பகலெல்லாம் தூங்கிவிட்டு இரவில் சென்று இரை தேடுகிறோம்" என்றது தாய் ஆந்தை."ஏனம்மா கடவுள் நம்மை மட்டும் இப்படி படைத்துவிட்டார்?" என்று கேட்டது மற்றைய ஆந்தைக் குஞ்சு.

"கடவுள் நம்மையெல்லாம் ஒரே மாதிரித்தான் படைத்தார். முன்னொரு காலத்தில் நம்முடைய முன்னோர்களில் ஒருவர் செய்த தவறைத்தான் நாம் இன்றும் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்" என்றது தாய் ஆந்தை.

"அப்படி என்ன தவறு செய்தார்?" என்று கேட்டன குஞ்சுகள்.

"ஒரு முறை நம் முன்னோர் ஒருவர் காகம் ஒன்றிடம் மிகவும் நட்பாக இருந்தார். ஒரு நாள் அந்த காகத்திற்கு உடல்நிலை மிகவும் சரியில்லை. எனவே, அதை அழைத்துக் கொண்டு காட்டில் வைத்தியராக இருந்த குயிலிடம் சென்றார்.

"குயில் வைத்தியரோ நன்றாக வைத்தியம் பார்த்து காக்காவை குணமாக்கிவிட்டது. அதன் பிறகு வைத்தியருக்கு பணம் கொடுக்கணும் இல்லையா? ஆனால், அவர்கள் இருவரும்



கொடுக்கவில்லை. எனவே, குயில் வைத்தியர் எனக்கு கொடுக்க வேண்டிய பணத்தைக் கொடுங்கள் என்று கேட்டது.

"இவர்கள் இருவரும் எங்களிடம் பணம் இல்லை என்று சொல்லிவிட்டு ஓடி வந்துவிட்டனர். அதன் பிறகு இவர்கள் இருவரையும் பார்க்கும் பொழுதெல்லாம் பணம் கேட்க ஆரம்பித்தது குயில் வைத்தியர். தொல்லையாப்போச்சு என்று நினைத்த நம்முடைய பாட்டனாரான ஆந்தையார், பகலில் தலைகாட்டுவதே இல்லை. இரவில் மட்டுமே வெளியே வருவதும் இரையை பிடித்து உண்பதுமாக இருந்திருக்கிறார்.

"பகல் முழுவதும் மரப் பொந்துகளில் படுத்து நன்கு தூங்குவது. இரவில் எழுந்து வெளியே செல்வது. இப்படியே இருந்ததால் ஆந்தையாரை கண்டுபிடிக்க முடியவில்லை குயிலால். அதனால் ஆத்திரமடைந்த குயில் வைத்தியர், காக்காவை பிடித்து நன்கு திட்டியிருக்கிறது.

"அந்த திருட்டுக் காக்கா கடுமையாக வேலை செய்தா வது பணத்தை கொடுத்திருக்க வேண்டியதுதானே. அப்படி கொடுக்கவில்லை. இதனால் கோபம் கொண்ட குயில் வைத்தியர் , இனிமேல் எங்கள் இனத்தார் இடும் முட்டைகளை எல்லாம் உன் இனத்தார் தான் காவல்காக்க வேண்டும் என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டது.

"அன்றிலிருந்து குயில் இனத்தார் அனைவரும் காக்கையின் கூட்டில் தங்கள் முட்டைகளை இட்டுவிட்டு சென்று விடுவர். அது குயிலின் முட்டை என்பது தெரியாமலே காக்கை இனம் வளர்த்துக் கொண்டு வருகிறது.

"நம்முடைய இனத்தார் பகலில் தூங்கி தூங்கியே நமக்கு பகலில் கண் தெரியாமல் போய்விட்டது. இதுதான் கதை" என்றது தாய் ஆந்தை. "அம்மா பிறரை ஏமாற்றுவதால் ஏற்படும் கஷ்டம் காலம் காலமாக பலரை பாதிப்பதை புரிந்து கொண்டோம். இனிமேல் நாங்கள் ஒருகாலும் இப்படிப்பட்ட காரியத்தை செய்யவே மாட்டோம்" என்றனர். செல்லமாக தன் குஞ்சுகளை அணைத்து முத்தமிட்டது தாய் ஆந்தை.

**குட்டீஸ்!**

மற்றவர்களை நாம் ஏமாற்றுவதனால் எமக்கு மட்டுமன்றி எம் சந்ததியினருக்கே தீங்கு நேரக்கூடும் !








## வியாசர் பதில்கள்

அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்

வியாசர் பதில்கள்,
இல.3,2 ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்)
021 567 1532



தற்போதைய இலங்கை அணி பற்றி?

வடக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் அமர்வு தவிர்ந்த ...

கபாலி வெற்றி பெறுமா?

**காந்தரூபன் — அல்வாய்**

**சினிமாவின் இன்றைய நிலை?**

இளம் சமூகத்தைக் கெடுத்துக் குட்டிச் சுவராக்கும் அத்தனை அம்சங்களும் அதில் இருக்கிறது. இருந்தாலும் சமூகத்திற்கு தேவையான நல்ல கருத்துக்களைச் சொல்லும் படங்களும் அவ்வப்போது வந்து கொண்டுதான் இருக்கின்றன.

**தர்சினி — உடுப்பிட்டி**

**காதலிக்கும் போது இருக்கும் அன்பு ஏன் திருமணத்தின் பின் இருப்பதில்லை?**

எத்தனை நாளைக்குத்தான் கத்தரிக்காய் கறியை சாப்பிட முடியும். ஆரம்பத்தில் அமிர்தமாய் இனிக்கும். ஒவ்வொரு நாளும் சாப்பிட அலுத்துப்போய் ஒரு கட்டத்தில் அதன் மேல் வெறுப்பு வந்துவிடுகிறது. இந்த காதல் – கல்யாணமும் கத்தரிக்காய் போலத்தான்.

**நிஜன் — பொலிகண்டி**

**வடக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் அமர்வு தவிர்ந்த நாட்களில் கொழும்பில் என்ன செய்கிறார்கள்?**

ஓட்டுக்கேட்டு வெல்லும்வரைதானையா எங்கள் ஊர், எங்கள் நிலம். வென்றுவிட்டால் அதன்பின் அதன் விளைவே வேறு. சண் அதிகம்ஸ். வேர்த்திங்ஸ். பொட்டிங்ஸ் கொழும்பில் நின்றால் சம்திங்... சம்திங்...

**நேசன் — பொலிகண்டி**

**சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம் என்பது போல் மக்கள் நல்லபடி இருந்தால் தானே ஆட்சி செய்யலாம். இதை கூட்டமைப்பு எப்போது விளங்கிக் கொள்ளும்?**

ஒரு படத்தில் கோவில் யானைக்கு பட்டை போடுவதா நாமம் போடுவதா என்று சைவ, வைஸ்ணவர்களுக்குள் சண்டைவர இன்னும் கொஞ்ச நேரத்தில யானை விட்டை போடப் போது. அதை யார் அள்ளுறதெண்டு முடிவெடுங்க என்று விவேக் சொல்லுவார். பொருளாதார மத்திய நிலையம் ஓமந்தையிலா? தாண்டிக்குளத்திலா? இதிலிருந்து தெரிவிக்கிறதா எம் அரசியல்வாதிகளின் புலிகேசி தந்திரம்.

**கரன் — மூளாய்**

**இன்றைய கால கட்டத்தைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

சுவாசிக்கும் காற்றைக்கூட காசு கொடுத்து வாங்கும் நிலை வந்துவிட்டதென்பதுடன் இந்த பூமியின் அத்தியாயம் முடிவுக்கு வரப் போகிறது என்பதை நினைவுபடுத்துகிறது.

**புருசோத் — நவிண்டில்**

**காதலித்த பெண் ஏமாற்றினால் தற்கொலை செய்யலாமா?**

நீ தற்கொலை செய்வதானால் அந்தப் பெண் இன்னொரு ஆணை திருமணம் செய்யாமல் இருப்பாளா? இல்லையே. அப்படியென்றால் நீ ஏன் இன்னொரு பெண்ணைத் திருமணம் செய்யக் கூடாது.

**ரூபகரன் — மட்டுவில்**

**கபாலி வெற்றி பெறுமா?**

ரஜினி என்கின்ற No 1 குதிரையில் நல்ல இயக்குநர் என்று பெயர் எடுத்த ரஞ்சித் கட்டியிருக்கும் பந்தயம் வெற்றி பெறும் என்ற நம்பிக்கை அடி மனதில் இருக்கிறது.



"புகழ்ந்து பாடிய என்னை வெறும் கையுடன் அனுப்புகிறீர்களே... மன்னா..."
"யாரங்கே... இவரது கைக்கு மருதாணி போட்டு அனுப்பி வையுங்கள்...."

**சௌமியா — யாழ்ப்பாணம்**

**உங்கள் வாழ்வில் எதையாவது சாதிக்க விருப்பப்பட்டதுண்டா?**

என் மனைவியின் புடைவையைத் துவைக்கும் போது அடித்துக் கிழிக்க வேண்டும் என.

**தரன் — வட்டுக்கோட்டை**

**மாணவர் சமுதாயத்திற்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டிய ஆசிரியர்களே...?**

தந்தை மகனை துஷ்பிரயோகம் செய்வது, தமயன் தங்கையை துஷ்பிரயோகம் செய்வது என்பதெல்லாம் ஆயிரத்தில் ஒன்று.

அதற்காய் எல்லாத் தந்தையரும், தமயனும் தவறானவர்கள் என்ற முடிவுக்கு வரமுடியுமா? ஒரு ஆசிரியர் விட்ட தவறுக்காக எமக்கு உண்மையாய் தம்மை அர்ப்பணித்து கல்விக் கண்திறந்த அத்தனை ஆசிரியர்களையும் தூற்றுவது எந்த வகையில் நியாயம்.

**வேந்து — மட்டுவில்**

**தற்போதைய இலங்கை அணி பற்றி?**

துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு, வீரர்களுக்கிடையிலான ஒற்றுமை இவை நான்கையும் ஒரே நேரத்தில் கட்டியெழுப்ப வேண்டிய தேவை இருக்கிறது. இல்லையேல் பங்களாதேஷ் வந்து கும்மி விட்டுப்போகும் என்பதில் ஐயம் இல்லை.

**கலைச்செல்வி — மட்டுவில்**

**மதங்களில் சிறந்த மதம்?**

உனது மதம் எதுவோ அதுவே சிறந்தது. மதங்கள் எல்லாம் மனிதனை நெறி தவறாமல் வாழவைக்கவே உருவாக்கப்பட்டது. போதனை செய்.மனிதனை மனிதனாக வாழவைக்கவே தவிர மத மாற்றம் செய்வதற்காய் அல்ல. மதமாற்றத்துக்காய் நீ பிரசாரம் செய்வாயாயின் உனது மத போதனைகளை நீ புரிந்து கொள்ளவில்லை என்பதே பொருள்.

**அபி — நெல்லியடி**

**பரீட்சைக்கு முதல் நாள் இருந்த தங்கள் அனுபவம்?**

பரீட்சை நடக்கும் நேரத்தில் பொம்மரோ, கிபிரோ, கெலிகொப்டரோ எதுவும் வந்துவிடக் கூடாது என்ற கடவுளிடத்திலான வேண்டுதல்.

**சிவா — திருநெல்வேலி**

**காதலில் தோல்வியடைந்தவர்களுக்கு தங்களின் உபதேசம்?**

அன்பார்ந்த என் காதல் தோல்வி சகோதரர்களே! உங்களுக்கு காதல் தோல்வி என்று அறிந்த போது என் நெஞ்சு வெடித்தது. அன்பர்களே! ஒன்றை மட்டும் புரிந்து கொள்ளுங்கள். பல வருடங்களுக்கு முன்னால் செவ்வாய்க் கிரகத்தை சீமேக்கர் லெபி என்ற வால்வெள்ளி தாக்கியது.


முதலாவது அடி. செவ்வாயில் பூமியளவு பாரிய ஓட்டை. அடுத்து மூன்று தடை வைகள் அடி விழுந்தது. அதன் பின் ஓட்டை ஏதும் விழ!! வில்லை. செவ்வாய்க்கிரகம்தான் உம் இதயமும். முதல் முறை சுதாரித்துக் கொண்டால் எல்லாம் சரி.


**மதீசன் — நல்லூர்**

**இளம் சமூகத்திற்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

கருத்துச் சொல்வதற்கு நான் தயார். அதைக் கேட்பதற்கு அவர்கள் தயாரா? அதை முதல் தெரிந்து கொள்ள வேண்டும். இல்லையென்றால் ஆணி பிடுங்கிய கதை ஆகிவிடும்.

# இனப்படுகொலை நடந்தாலும் இலங்கையில் குற்றமில்லை!





இலங்கையில் இடம்பெற்ற 30 ஆண்டுகால உள்நாட்டுப் போரில் இலட்சக்கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர் என்று அரசதரப்பு மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் போர்க்குற்றங்கள் இழைத்த அரசபடைத்தரப்புமீது விசாரணை நடத்தி குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்ற நியாயமான கோரிக்கையை பாதிக்கப்பட்ட இனமான தமிழினம் கோரிநிற்கிறது.

போரில் பாதிக்கப்பட்ட தமிழினத்திற்கு நீதியைப் பெற்றுக்கொடுக்கும் பொறிமுறை இலங்கையில் இல்லை என்ற விரக்தியில் இனப்படுகொலைக்குள்ளான இனத்தின் சார்பில் சர்வதேச விசாரணையைக் கோரியபோதும் அதுவும் சாத்தியமற்றதாகவே உள்ளது.

சர்வதேச விசாரணைதான் சாத்தியமற்றுப் போய்விடும் என்ற சூழ்நிலையில் உள்நாட்டு விசாரணையில் வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்குமாறு கோரிக்கை விடப்பட்டது. ஆனால் அந்தக் கோரிக்கைக்கும் அரசு செவிசாய்க்கவில்லை.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்கிய உள்ளக விசாரணைக்கு தான் பதவியிலிருக்கும் வரை இடமளிக்க மாட்டேன் என்று மீண்டுமொருமுறை திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

ஜனாதிபதியாக மைத்திரி பதவியேற்ற பின்னர் சர்வதேச விசாரணைப் பொறிமுறையை ஐ.நா. உள்ளிட்ட சர்வதேச அமைப்புக்களும், அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா போன்றநாடுகளும்கைவிட்ட நிலையில் உள்ளக விசாரணைக்கு உடன்பட்டதால் வெளிநாட்டு நீதிபதிகளை இலங்கை ஏற்க மறுக்கிறது.

ஜனாதிபதி மைத்திரி மற்றும் பிரதமர் ரணில் ஆகியோர் வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளக விசாரணையில்கூட பங்குகொள்ள இடமளிக்கமாட்டோம் என்று கூறியுள்ளதை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் போர்க்குற்ற விசாரணைக்கு பன்னாட்டு நீதிபதிகள் தேவையில்லை என்ற அவர்களின் கருத்துக்கள் இறுதி முடிவல்ல என்றும் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச நீதிபதிகள் உள்ளக விசாரணையில் இடம்பெறுவதில் தவறில்லை என்றும் ஐ.நா. அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டதன் பிரகாரம் 40 ஆயிரம் தமிழ் மக்கள் இறுதிக்கட்டப் போரில் மட்டும் கொன்றொழிக்கப்பட்டதை சாதாரண விடயமாக பார்க்கமுடியாது என்றும் மங்கள சமரவீர வலியுறுத்தியுள்ளார்.

அதேவேளை யுத்த காலத்தில் காணாமற்போனவர்களைக் கண்டறியவென மகிந்த ஆட்சிக்காலத்தில் உருவாக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவரான மக்ஸ்வெல் பரணகமவின் சமீபத்திய சர்ச்சைக்குரிய கருத்துக்கள் குறித்தும் கண்டித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலகட்டத்தில் காலத்தைக் கடத்தவென உருவாக்கிய ஆணைக்குழு ஒன்றின் தலைவரான பரணகம, தனது அதிகார வரம்பை மீறி அதிமேதாவித் தனமாக கருத்தை வெளியிட்டுள்ளார் என்று குற்றம்சாட்டியுள்ளார்.

இறுதிப் போரில் கொத்துக் குண்டுகள் வீசப்பட்டிருந்தால் அதுதவறில்லை என்றும் 2010 ஆம் ஆண்டு ஓகஸ்ட் முதலாம் திகதிதான் கொத்துக்குண்டு தடை வெளிப்படுத்தல் நடைமுறைக்கு வந்தது என்றும் போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அது கட்டாயம் நடைமுறைப்படுத்த வேண்டியதில்லை எனவும் பரணகம கூறியதே மங்கள சமரவீரவின் கோபத்தைத் தூண்டியது எனலாம்.

இதேவேளை பரணகமவின் இந்தக் கருத்தை அடிப்படை ஆதாரமாகக் கொண்டு இறுதிப் போரில் நடந்த உண்மைகளை அறிய சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் பாராளுமன்றத்தில் முன்வைத்தார்.

இறுதிக் கட்டப்போரில் சர்வதேச போர்நியமங்களை மீறி இலங்கை அரசாங்கம் செயற்பட்டது என்ற குற்றச்சாட்டை மறைப்பதற்காக அரசு பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்டுள்ள நிலையில் பரணகமவின் இந்தக் கருத்து அரசதரப்புக்கு பாரிய நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது உண்மையே.

ஆனால், கொத்துக்குண்டுகள் வீசப்பட்டது போர்க் குற்றமாகாது என்று அவர் கூறியுள்ளதைத் தான் எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாததாகவுள்ளது.

பல இலட்சம் மக்களை ஒரு குறிப்பிட்ட பகுதிக்குள்



அதுவும் போர் தவிர்ப்பு வலயம் என்று அறிவித்து அழைத்து கொத்துக் குண்டுகளை வீசி அழித்த படுபாதகச் செயலை போர்க்குற்றங்களுக்குள்ளடக்க முடியாது என்று பரணகம் கூறியுள்ளார்.

2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்னர் பல ஆதாரங்கள் வெளியிடப்பட்ட போதெல்லாம் அவற்றை இல்லை என்று மறுத்து வந்த இலங்கை அரசு கொத்துக் குண்டுகள் வீசப்பட்டதை சட்டரீதியானது என்று கூறித் தப்பிக்கப் பார்க்கிறது.

காணாமற் போனவர்களைக் கண்டறிய உருவாக்கப்பட்ட மகிந்தவின் ஜனாதிபதி ஆணைக்குழு போர்க் குற்றங்களை மூடிமறைக்க முற்படுவதோடு காணாமற்போனவர்களுக்கு என்ன நடந்தது என்பதை கண்டறியவே மாட்டாதா? என்ற கேள்விக்குப் பதலளிக்காமல் காணாமற்போய்விடும் நிலைக்குச் சென்றுள்ளது.


காலநீடிப்பைப் பெற்று விசாரணைகளை முன்னெடுத்துவரும் பரணகம தலைமையிலான ஆணைக்குழு இனியாவது தனது பணியைச் செய்யவேண்டும். உறவுகளை இழந்த நிலையில் மனநிலை பாதிக்கப்பட்டவர்களாக அலைந்து திரியும் உறவினர்களுக்கு கருணை காட்ட வேண்டும்.

இராணுவம், புலனாய்வுப் பிரிவின் அச்சுறுத்தல்களையும் பொருட்படுத்தாது தமது உயிரைப் பணயம் வைத்து உறவுகளை உயிருடன் மீட்க வேண்டும் என்பதற்காக துணிந்து சாட்சியமளித்தவர்களைக் காப்பாற்றுவதோடு அவர்களின் உறவினர்களையும் மீட்டுக் கொடுக்க வேண்டும்.

போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களுடன் கூட்டாக இருந்து அமைச்சர்களாக சுகபோகங்களை அனுபவித்துவிட்டு மகிந்த வீழ்ந்தால் மைத்திரி என்று அதிகாரத்தரப்பை அரவணைக்கும் அமைச்சர் டிலான் பெரேரா போன்றவர்கள் சர்வதேச விசாரணையைக் கோரினால் உள்நாட்டு விசாரணையும் நடக்காது என்று அச்சுறுத்தல் விடுவார்கள். ஏனென்றால் சர்வதேச விசாரணை நடந்தால் தமக்கும் ஆபத்து என்றஅச்சம் அவர்களைத் தொற்றுவதைத் தடுக்கமுடியாது.


இறுதிக்கட்டப்போரில் கொத்துக்குண்டுகள் வீசப்பட்டதை நியாயப்படுத்தவும் சட்டரீதியான அணுகுமுறை என்று கூறித் தப்பிக்கவும் அரச தரப்பு எடுத்துவரும் முயற்சிகளைக் கண்டும் காணாமலும் இருந்தால் எதிர்காலத்தில் அரசாங்கம் முன்னெடுக்கவுள்ளதாகக் கூறப்படும் உள்ளக விசாரணையில் இனப்படுகொலை இடம்பெற்றது உண்மைதான். ஆனால் இலங்கையில் அதையொரு குற்றமாகக் கருத முடியாது என்று கூறப்படவும் வாய்ப்புள்ளது.

எனவே தமிழர் நலன் சார்ந்துசெயற்படுவதாக தம்மைவெளியுலகிற்கு அடையாளப்படுத்துபவர்கள் அழிக்கப்பட்ட இனத்திற்கு நீதியைப் பெற்றுக் கொடுக்கவும் தமிழினத்திற்கு இழைக்கப்பட்டு வரும் அநீதிகளைத் தடுக்கவும் ஆக்கபூர்வமான நடவடிக்கையில் ஈடுபட வேண்டும்.


எஸ்.ஆர்.கரன்

# கவிதைக் கலசம்



## காதல்

என் இமைகளை கடந்து
கண்ணீராய் வழிந்தோடும்
உன் நினைவுகளை
உயிருக்குள் அடக்கி வைத்து
ஊமையாக அழுகிறேன்
என் இதயத்தை கிழித்துக் கொண்டு
வலிகளாய் கசிந்தோடும்–என்
காதல் குருதியை
நெஞ்சோடு மறைத்து வைத்து
செந்தீயில் வேகின்றேன்
உன் ஞாபகங்களை சுவாசித்து
உறங்காமல் உனை யோசித்து
நீ தந்த வலிகளோடு
இன்னும் உயிர்
வாழ்கின்றேன் பெண்ணே

றொஷான்
அளவெட்டி

## ஏமாறுகிறேன்

முட்டாள் தினம் என்னவோ
ஏப்ரல் 1 இல்
மட்டும் தான்
ஆனால்
நீ – என்னை
தினமும்
முட்டாள் ஆக்குகிறாய்
உனக்கான
காத்திருப்புக்களில்
என்னை ஏமாற்றிவிட்டு

ஜெ.சிந்து
வேலணை-02

## நட்பு

உயிரோடு இருக்க
ஒரு பிறவி போதும்
ஆனால் உன் நட்போடு
வாழ பல ஜென்மம் வேண்டும்
உறவுகள் சொல்ல பலர் இருந்தாலும்
என் உணர்வை புரிந்து கொள்ள
நீ மட்டுமே என் அன்புத் தோழனே!

வி.ருஷானி
புளியங்கூடல்

## பிச்சை

அம்மி மிதித்து அருந்ததி பார்த்து
வேதியர் மந்திரம் ஓத
நல்லநேரம் பார்த்து நாணேற்றி
கல்யாண ஒப்பந்தத்தில்
கைச்சாத்திடும் முன்
பத்து இலட்சத்தில் ஒரு இலட்சம்
குறைவென்று
பதறியடிக்கும் மாமியாரும்
திகைத்து நிற்கும் மணமகனும்
விலகி ஓடினால்
மதம் என்ன செய்யும்
அட்டமியும் நவமியும்
ஆளுக்கு ஆள் பார்த்த
நல்ல நேரமும்
தேடிக்கொண்டு வருமோ?
ஓடிப்போன மணமகனை
பணந்தான் உருவாக்கும்
பந்தத்தையும் பாசத்தையும்
பிறகேன் வெளிப்பகட்டுக்கு
சாஸ்திரமும் சம்பிரதாயமும்

ஏ.வி.கே.பேர்லின்
ஜேர்மனி

## ஓ... மந்தைகள்தான்

தாண்டிக் குளத்தையும்
நான் தாண்டியிருக்கின்றேன்
ஓமந்தை வழி
ஓரத்திலும் நின்றிருக்கின்றேன்

எமக்கு பார் தந்தால்
என்ன நிலை என்று
பார்த்தோமே பார்த்தோமே
பிடுங்குப்பாட்டைப் பார்த்தோமே

மத்திய நிலையம் ஒன்று அமைக்க
எம்மவர்க்கு மத்தியில்லை
அதை இங்குதான் அமைப்போம்
என்று சொல்லவும் சக்தியில்லை

தாண்டிக்குளம் என்று ஒரு குழு
ஓமந்தை என்று இன்னொரு குழு
ஓ... மந்தைகள்தான்– உமக்கு
ஓட்டுப்போட்ட தமிழர் மந்தைகள்தான்

ஒரு மத்திய நிலையத்திற்கே
கத்தல் கதறல் மறுத்தல்–இதில்
தமிழன் பாராள்வான் பருப்பாள்வான்
என்று கதை வேறு!

மாவை. நா.கஜேந்திரன்

# மௌனத்தின் தேடல்– 309



## சுகம்

அன்று அந்த சுகம்
உனக்கு இதமாச்சு
அதனால் தானே
இன்று அது சுமையாச்சு
உன்னையும் சுமந்து
உருவான சிசுவையும் சுமந்து
கேஞ்சி பின்னர் கொஞ்சி
வஞ்சித்தவனை தேடியா வந்தாய்?
காணமாட்டான் கடைசி வரை
களைத்து விட்டாய்
நிற்கமுடியவில்லையோ
நிலத்தில் அமர்ந்து
நீர் அருந்து நன்றாக
இனி நீ திருந்து
அதுவே சுகம்

சுந்தா
வவுனியா

## விதி

எதிர்கால கனவுகளோடு
எண்ணற்ற ஆசைகளை
நெஞ்சிலே சுமந்து
இன்பமாய் வாழ நினைத்த
மங்கையிவள் வாழ்வில்
விதி விளையாடியதோ
வேறொரு ரூபத்திலே

யோ.காண்டீபன்
மானிப்பாய்

## துடிக்கும் நிலை

பசியின் கொடுமை
பாதையில் வாட்டிட
பாவையள் வறண்ட – நாவை
நனைக்க நினைத்தாள்
நன்னீர் கிடைக்குமென
தாகத்தை தீர்க்க– அவள்
தள்ளாடி அமர்ந்தாள்
குழாயின் அருகே– அதிலும்
குடிதண்ணீரின்றி
குமுறியது நெஞ்சம்
வறண்ட பாலைவனம் போல்
பாவிகள் உள்ளம் வாடியது ஏன்?
குழாயின் நிலையும் அதுபோல்
ஆகியது ஏன் அசைவற்ற நிலையில்
குடிக்கும் தண்ணீரின்றி
துடிக்கும் நிலைகண்டு
துன்பம் போக்க துயர் துடைக்க
துணிவு கொண்ட தூய உள்ளம்
இல்லையோ இப்புவி மீதில்
இவர் துயர் யாவும் மறையாதோ

சி.திவ்வியா
யா/பண்ணாகம்
மெய்கண்டான் ம.வி.

## தண்ணீரே உணவு

பாவம்
வீதியில் வாழும்
இந்த அநாதைக்கு
குடிநீர் மட்டுமே
உணவாய்க் கிடைக்கிறது

சு.ஜெயரூபன்
பருத்தித்துறை

## தவிப்பு

கல்லுக்கு காசை வைத்து
கைகூப்பும் கனவான்களே
புள்ளுக்கு நீர் இறைத்து
புன்னகைக்கும்
புண்ணியவான்களே
பூமாலை அணிந்து கொண்டு
புன்முறுவல் புரிகின்ற
புகழேந்திகளே
வலுவிழந்து பரிதவிக்கும்
உறவுகளுக்கு எம் கரங்களை
ஒருமுறையேனும் நீட்டுவோம்

இளவரசு
ஒட்டுசுட்டான்

## உனக்காக உறவுண்டு

மேடு பள்ளமறியாது
மேனி தடுக்கியதோ
போர்தந்த வலியா
போதையின் வடுவா
காலமதன் வேகத்தில்
கானலாகியதோ
காவியம் தானுளதோ
தாகத்தின் நிலை கண்டு
தணித்திட முனையவில்லையோ
உறவென்று ஒன்று
உனக்காக உண்டு

அணிஞ்சில் புவபாலன்

## தாகசோகம்

காலநிலை மாற்றத்தாலேற்பட்ட
கடும் வரட்சியின் விளைவால்
நீர்நிலைகள் வற்றி வரண்டுபோக
நீருக்குத் திண்டாடியவேளை
வெயிலில் நீண்ட தூரம்
நடந்திளைத்த
கர்ப்பிணித் தாயொருத்தி
கடுந்தாகத்தால் வருந்தி
வீதியில் பொருத்தியிருந்த
நீர்க்குழாயில்
துளியாயொழுகிய நீரை
வாயாலேந்தி அருந்துகிறாள்
வாழ்வின் வசந்தம்
இதுதானோ?

துரை
தென்மட்டுவில்

# மௌனத்தின் தேடல் –310



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 13.07.2016ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளுக்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# மகிழ்ச்சியான திருமண வாழ்க்கைக்கான வழிகள்!



**பல** ஆண்கள் செய்யும் ஒரு தவறு இது... அதாவது தான் காதலில் கசிந்து உருகும் நேரத்தில் தன்னவளும் அப்படித்தான் உருகுவாள் என்று பல ஆண்கள் நினைத்துக் கொள்கிறார்கள். ஆனால் அது பெரும்பாலும் உண்மையில்லை.

இந்தத் தவறான புரிந்து கொள்ளலில் தான் பல பிரச்சினைகள் ஜோடிகளுக்கிடையே முளைக்கின்றன. ஒருவரைப் பற்றி இன்னொருவர் அதிகம் தெரிந்துகொள்ள வாய்ப்பில்லாத நிலையிலுள்ள புதிதாக திருமணம் ஆன ஜோடி அல்லது இப்போது

> "ஒரு பெண்ணின் உண்மையான தேவை அதுதான்"

தான் காதலிக்கும் ஜோடி என்று மட்டும் அல்ல திருமணமாகி பத்து வருடங்கள் கழிந்த நிலையில் உள்ள ஜோடிகள் இடையேயும்கூட இந்தக் கணிப்பு காரணமாகவே பல வீடுகளில் சண்டைகள் மூழ்கின்றன.

நான் உன்மேல் எவ்வளவு ஆசையோட இருக்கேன் தெரியுமா? ஆனா நீ அப்படி இல்லே. கொஞ்சம் கூட பிரியமே இல்லாமல் பேசுறே என்று ஆரம்பிக்கும் சண்டைகள் சில சமயங்களில் சந்தேகங்களையும் கூட முளைக்கவைத்துவிடும்.

இன்று காதலில் எத்தனையோ பிரேக் அப்கள் வருவதும்கூட இதனால்தான்.

ஆனால் எத்தனை சண்டைகள் வந்தாலுங்கூட பல ஆண்கள் மீண்டும் மீண்டும் அதேபோல தவறான கணிப்புக்கே போகிறார்கள். அதனாலேயே இந்த விடயத்தில் தொடர்ச்சியாக பல சச்சரவுகள் பல குடும்பங்களில் இருந்து கொண்டே இருக்கின்றன. தவிர உடல்ரீதியில் சூடான ஆண்மகன் பெண்ணை இந்த விடயத்தில் வற்புறுத்தும்போது அது அவளுக்கு ஒரு வலியாக மாறிப்போகிறது.

ஏன் எதனால் தன் துணை இப்படி இந்த நேரத்தில் தன் போலவே பொங்கி வரும் ஆசையின்றி இருக்கிறான் என்று யோசிப்பதைவிட்டு அவனைக் குற்றஞ்சாட்டும் நிலையில் பல ஆண்கள் இருக்கிறார்கள்.

ஒரு பத்திரிகையுலக ஓவிய நண்பர் சொல்வார்.

பெண்களின் புகைப்படம் அல்லது நினைவேகூட போதும். ஒரு ஆணின் மனதில் கிளர்வு ஏற்படுவதற்கு என்பார்.

அதையே தான் மருத்துவமும் சொல்கிறது. ஒரு ஆண்மகன் உடல் ரீதியில் மிக வேகமாக கிளர்வு ஏற்படும் விதத்தில் உருவா க்கப்பட்டிருக்கிறான். ஆனால் பெண்ணோ அவ்வளவு எளி தாக உடல் ரீதியில் கிளர்வு கொண்ட வளாக ஆகமாட்டாள் என்கிறது.



பெண்களுக்கு எப்போது தன்னவனை வேறெப்போதையும் விட ரொம்பப் பிடிக்கிறது? அல்லது எப்போது அவன் மேல் ஆசை பெருக்கெடுக்கிறது.

உடல் ரீதியில் அவளை அணைப்பதைவிட அவளை மனரீதியாக அணைத்துப்பாருங்கள். அப்படியே விழுந்து விடுவார்கள்.

ஆணாம் ஆண்களின் ஸ்விட்ச் உடலில் இருந்தால் பெண்களின் ஸ்விட்ச் மனசில் இருக்கிறது.

மனசின் ஸ்விட்சை எதன் மூலம் ஒன் செய்ய தன்னவனின் உண்மையான முகம் இதுவல்ல என்று அவள் உணரும் போது அவள் வெளியே சொல்லமுடியாதவொரு ஏமாற்றப்பட்ட உணர்வில் ஆழ்ந்து போகிறாள்.

தவிர தன் சுயநலத்துக்காக காரியத்தைச் சாதித்துக் கொள்வதற்காக இவன் எப்படி வேண்டுமானாலும் நாடகமாடுவான் என்ற உணர்வு ஏற்பட்டாலே அவளுக்கு அவனிடம் வெளியே தெரியாத ஒரு மனதூரம் ஏற்பட்டுவிடுகிறது?

எனவே உங்கள் பெண் துணையிடம் பேசும் போது நிஜமாகவே மனசார பேசுங்கள். பாராட்டானாலும் உண்மையாகவே மனசார இரசித்துப் பாராட்டுங்கள். ஒரு பெண்ணின் உண்மையான தேவை அதுதான்!

என் கணவர் என்னோடு நெருக்கமாக இருக்கும் நேரங்களை விட அவர் என்னோடு மனசுவிட்டு பேசிக் கொண்டே இருக்கும் அந்த நேரங்கள் தான் எனக்கு அவர் மீதான காதல் பொங்கி 'வழிவதாக உணர்கிறேன் என்று சொன்னார் கவிதை எழுதும் ஒரு ஐடி யுக இளம்பெண்.

மனசுவிட்டு என்றால்... என்ன பேசுவது என்கிறீர்களா? முடியும் அந்த ஆண்மகனின் பேச்சினாலும் செயற்பாடுகளாலும் தான்!

இங்கே இன்னொரு விடயத்தையும் நான் குறிப்பிட்டாகவேண்டும். பேச்சின் மூலமோ, செயற்பாடுகள் மூலமோ ஒரு பெண்ணை சந்தோசப்படுத்துவது என்பது அப்படியே அவள் அழகை ஓவராக புகழ்வது இல்லை அவள் கேட்டதையெல்லாம் வாங்கிக் கொடுப்பதும் இல்லை.

அதை பெண்கள் விரும்புவார்கள் என்றாலும் கூட அதை மட்டுமே எந்தப் பெண்ணும் விரும்புவதில்லை. தவிர இப்படிச் செய்தால்தான் இவள் மனசை இளக வைக்க முடியும் என்று சில ஆண்கள் தன் துணையிடம் தன் காரியத்தை அந்த நேரத்தில் சாதித்துக் கொள்வதற்காக ஏதோ வாயில்வந்த புகழுரைகளையோ கொடுப்பதுண்டு அல்லது வாக்குறுதிகளையோ கொடுப்பதுண்டு. உண்மையில் இது தான் இன்னும் தவறு காரணம் எது வேண்டுமானாலும்!

மனசைக் கவர்ந்த நபர்கள் எதிர்வீட்டுக் குழந்தையின் குறும்பு, ரூர் அனுபவம் தன் அம்மாவை ஏன் இத்தனை விரும்புகிறேன் என்பது முதல் அஜித், விஜய், பிடித்த சாப்பாடு, மழை பற்றி ஒரு கவிதை அல்லது கருத்து எங்கே வீட் டுக்கான பேர்னிச்சர் வாங்கலாம் என்று எது வேண்டுமானாலும்!

என் மனசை இவளிடம் திறந்து பேசலாம் என்று நம்பிக்கையோடு அந்தக் கணவன் அல்லது காதலன் அவளிடம் பேசுமுறைவதே அவனை இந்த உலகத்தில் வேறு யாரையும் விட மிக அதிகமாக அவள் விரும்பும்படி செய்கிறது.

அந்த நம்பிக்கை தான் உலகின் மிக அதிகபட்ச அன்பு! அந்த நம்பிக்கை தான் உலகில் வேறு யாரையும் விட அவனை அவள் அதிகம் விரும்ப வைக்கிறது! அந்த விருப்பமே கிளர்வாக உடலில் எதிரொலிக்கிறது. அதனால் தான் வாத்சாயனாரில் ஆரம்பித்து நவீன மருத்துவர்கள் வரை முத ல் பெண்ணிடம் பேசுங்கள், கொண்டாடுங்கள் பிறகு வாழ் க்கை இனிக்கும் என்கிறார்கள்●

## இது தெரியலையா?

*அதிகாலை இரண்டு மணிக்கு கணவனை தூக்கத்திலிருந்து எழுப்பினாள் மனைவி. அடுத்தடுத்து கேள்விக்கணைகள். இவன் உற்சாகமாக பதில் சொன்னான்.*

*அரண்மனை படத்தில் யார் யார் ஹீரோயின்கள்?*

*ஹன்சிகா , ஆண்ட்ரியா,ராய் லட்சுமி!*

*சந்திரமுகி படத்தில ஜோதிகா கரக்டருக்கு என்ன பேரு?*

*கங்கா!*

*எதிர்வீட்டு கவிதா இங்க குடிவந்து எவ்வளவு நாள் ஆகுது?*

*போன புதன்கிழமையோட ரெண்டு மாசம் முடிஞ்சிருக்கு ! ஆமாம் டார்லிங் , இந்த அதிகாலையில என்னை எழுப்பி ஏன் இதையெல்லாம் கேட்குற?*

*, அவன் குழம்பினான்.*

*மனைவி அவனை அமைதியாகப் பார்த்து விட்டு சொன்னாள். இதெல்லாம் தெரிஞ்சிருக்கு! இன்னைக்கு என் பர்த்டேங்கிறது தெரியலையா?*

*செத்தான்டா சேகரு!*

# ஒரே அலுவலகத்தில் பணிபுரியும் தம்பதியா?

## பிரச்சினைகளை எப்படி எதிர்கொள்வது?



இன்றைக்கு வேலை பார்க்காத பெண்களை விரல் விட்டுஎண்ணிவிடலாம்.

இதில் கணவனும் மனைவியும் வெவ்வேறு அலுவலகத்தில் பணிபுரியும் சூழ்நிலையை விட ஒரே அலுவலகத்தில் பணிபுரியும் சூழ்நிலை சற்றே வித்தியாசமானது.

**● ஈகோ அல்லது சந்தேகம்...**

எதிர்பாலினத்தவர் உங்கள் கணவர்/மனைவியுடன் அலுவலகரீதியாக மீட்டிங், கிளைண்ட்களைச் சந்திப்பது போன்ற வேலைகளை ஒன்றாகச் செய்ய வேண்டியிருக்கும்.

இதில் நீங்கள் கஷ்வலாக எடுத்துக் கொண்டாலும் உங்கள் அலுவலகத்தோழமைகள் உங்கள் ஈகோ வையோ சந்தேகத்தையோ தூண்டி விடலாம்.

தீர்வு: இது போன்ற சமயங்களில் என் லைப் பார்ட்னரைப் பற்றி என்னைவிடவா இவர்களுக்குத் தெரிந்து விடப் போகிறது என்று உறுதி எடுத்துக் கொள்ளுங்கள் பிரச்சினையே வராது.

**● இறந்தகாலம் பிரச்சினையானால்...**

ஒரு வேளை, கணவனும் மனைவியும் திருமணத்திற்கு முன்பிருந்தே ஒரே அலுவலகத்தில் பணியாற்றியிருந்தால் அப்போது நீங்கள் அலட்டிக் கொள்ளாத சின்னச் சின்ன விடயங்கள் இப்போது பெரிய பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும். இது போன்ற காரணங்களினால் விவாகரத்து வரைக்கும் சென்ற தம்பதியரும் சமுதாயத்தில் இருக்கவே செய்கிறார்கள்.

தீர்வு: திருமணத்துக்கு முன்னால் நீங்களே சின்ன விடயம் என்று ஒதுக்கியதை திருமணத்துக்குப்பின் பூதக் கண்ணாடியால் பார்ப்பானேன்?

**● மனைவி அதிகம் சம்பளம் வாங்கினால்...**

ஒரே அலுவலகத்தில் பணிபுரியும் தம்பதியரில் கணவருக்குப் புரமோஷன், சம்பள உயர்வு ஆகியவை கிடைத்தால் பெரும்பாலான மனைவிகள் மகிழ்ச்சியடைவார்கள். ஆனால் ஆண்கள் அப்படியில்லை. ஆண்களின் அடையாளமாகக் கருதப்படும் ஆதிக்க குணம் அவர்களை மகிழ்ச்சியாக இருக்க விடாது. ஒரே அலுவலகத்தில் நம்மைவிட உயர் பதவியில் , அதிக சம்பளம் வாங்கும் மனைவி , நம்மை மதிக்க மாட்டாள் என்கிற விம்பம் தான் முக்கால் வாசி ஆண்களின் எண்ணம்.

ஒரு வேளை சம்பந்தப்பட்ட ஆண் அதிலிருந்து மாறுக் கருத்து உடையவராக இருந்தாலும் அவரின் நண்பர்கள் , உறவினர்கள் அக்கம் பக்கத்தினர், ஒரே ஆபிஸில உன்னை விட அதிக சம்பளத்தில, பெரிய பதவில, இருக்கோங்குற திமிர்டா உன் பொண்டாட்டிக்கு என்று உங்கள் குடும்பத்தில் ஒரு பிரச்சினை வரும் போது அதில் தலையிட்டு குளிர் காய்வார்கள்.

தீர்வு: அடுத்தவர்கள் குளிர் காய என் வீட்டு விடயத்தை ஏன் தர வேண்டும்? என்ற சின்னத் தெளிவு இருந்தாலே இந்தப் பெரிய பிரச்சினை உங்கள் வீட்டுக்குள் வராது.

**● விருப்பு வெறுப்புக்கான இடமா இது?**

சில சமயங்களில் மனைவிக்கு பிடிக்காத பெண்ணுடன் கணவனோ, கணவருக்குப் பிடிக்காத ஆணுடன் மனைவியோ அலுவலக விடயங்களில் சேர்ந்து பணியாற்ற வேண்டியதிருக்கும்.

தீர்வு: இந்தச் சூழ்நிலையில் நீங்கள் பக்குவமாக செயற்பட வேண்டும். இங்கு தான் உங்கள் இருவருக்குமிடையே இருக்கும் புரிதலின் லெவலை இன்னும் உயர்த்தி, உங்கள் துணையின் மேலுள்ள நம்பிக்கையை அதிகரிக்க வேண்டும். நமக்கானவர் எந்தச் சூழ்நிலையிலும் நம்மனம் நோகும்படி நடந்து கொள்ள மாட்டார் என்ற எண்ணத்தை மனதில் கொள்ளுங்கள்●

## இவற்றில் கவனமாக இருங்க!

- ஒரே அலுவலகம் என்பதால் உங்கள் லைஃப் பார்ட்னர் பற்றி உங்களுடன் பணி புரிபவர்களிடமிருந்து வரும் கமெண்டுக்களுக்கு இடம் கொடுக்காதீர்கள்.
- இருவருக்கும் அலுவலகத்தின் நிறை –குறைகள் நிச்சயம் தெரிந்திருக்கும். அதற்கேற்றாற்போல் நடந்து கொள்ளுங்கள்.
- அலுவலகத்தில் உங்கள் கணவன்/மனைவி மேல் அதிக அட்வாண்டேஜ் எடுத்துக் கொள்ளாதீர்கள். உடன் பணிபுரியும் நண்பர் போல் நடந்து கொள்ளுங்கள்.
- அலுவலக நண்பர்களிடம் உங்கள் துணையின் குறைகளைச் சொல்லாதீர்கள். நிறையையும் எப்போதாவது மட்டுமே சொல்லுங்கள். சதா அவர்களின் புராணம் பாடாதீர்கள்.
- எல்லாவற்றுக்கும் மேலாக எப்போதும் ஓடை நீர் போல தெளிவாக ஓடிக் கொண்டிருங்கள். உங்களிடம் புரிதல் மற்றும் விசால மனப்பான்மை ஆகிய இரண்டும் இருந்தால் எந்த சூழ் நிலையிலும் வாழ்க்கை உங்கள் வசமாகும்!

# தொழில் வேறு, சமூகத்துக்கு உதவுவது வேறு!

அநேகமாக எல்லாத் தொழிலதிபரும் சொல்கிற வாசகங்கள் இவை. இலாபம் சம்பாதிப்பதற்காக ஏதேனும் ஒரு தொழிலைச் செய்வது, பின்னர் அதில் கிடைத்த வருமானத்தை வைத்து சமூகத்தில் ஏதாவது நலப்பணிகளுக்கு உதவுவது- இதைத்தான் பெரும்பாலானோர் பின்பற்றுகிறார்கள். சொல்லப்போனால் வெறுமனே பணம் சம்பாதித்துவிட்டு யாருக்கும் எதுவும் செய்யாமல் இருப்பதைவிட இது சிறந்ததுதான்.

இன்னொரு பக்கம் இலாப நோக்கமில்லாத நிறுவனங்கள் செயற்படுகின்றன. இவர்களுடைய நோக்கமே சமூகத்துக்கு உதவுவதுதான். பல்வேறுநபர்கள் நிறுவனங்களிடம் நன்கொடை பெற்று பெரிய வருமானம் எதையும் எதிர்பார்க்காத தன்னார்வலர்களின் உதவியுடன் இவர்கள் தங்களுடைய நலத்திட்டங்களை நிறைவேற்றுகிறார்கள்.

இந்த இரண்டுமே நல்ல விடயங்கள்தான். ஆனால் இவை தனித்தனியே இருக்க வேண்டுமா? இவற்றை ஒன்றாகச் சேர்த்தால் என்ன?



அதாவது ஒரு தொழில் இலாபநோக்கத்துடன் இயங்கட்டும். ஆனால் அந்தத் தொழிலின் மையக்கருத்தே சமூகத்துக்கு ஏதோ ஒருவிதத்தில் உதவுவதாக இருக்கட்டும்.

அப்படி ஒரு பிஸினஸ் வழிமுறையை அறிமுகப்படுத்திய நிறுவனம் KIND.

இந்தப் பெயரில் அவர்கள் ஆரோக்கியமான தின்பண்டங்களைத் தயாரிக்கத் தொடங்கினார்கள்.

அந்த ஆரோக்கிய உணவுகளை வைத்து இலாபம் சம்பாதிக்கின்ற ஒரு நிறுவனமாகவே இயங்கவேண்டும் என்றும் அது விரும்பியது. அப்போதுதான். இதனை நாடு முழுவதும் கொண்டு செல்ல இயலும். பல புதிய பொருட்களை அறிமுகப்படுத்த இயலும். இன்னும் பல சமூக சேவைகளில் ஈடுபட இயலும். அதைவிட முக்கியம் இதைப்பார்த்து மற்றவர்களும் இதுபோன்ற சமூகப் பொறுப்புள்ள தொழில்களைத் தொடங்க முன்வருவார்கள்.

இந்த எண்ணத்துடன் தொடங்கிய டேனியல் லுபெட்ஸ்கி அடுத்த சில ஆண்டுகளில் மிகப்பெரியளவில் வெற்றியடைந்தார்.

கார்ப்பரேட் நிறுவனங்கள் தொழில்வேறு, சமூகப் பொறுப்பு வேறு என்று பிரித்துப் பார்க்கவேண்டியதில்லை. தங்கள் தொழில் மூலமாகவே சமூகத்துக்கு உதவலாம். அதேசமயம் தனிப்பட்ட முறையிலும் வெற்றியடையலாம் என்று நிரூபத்திருக்கும் டேனியல் இதுபோல் தாங்களும் சமூகத்துக்குப் பயனுள்ள வகையில் முன்னேறவேண்டும் என்றெண்ணும் இளைஞர்களுக்காக தனது நிறுவனத்தின் கதையை சுவையாக எழுதியுள்ளார். Do The KIND Thing என்கிற அந்தப் புத்தகம் பல பிரக்டிக்கல் பாடங்களைச் சொல்கிறது.


டேனியலின் தந்தை ஹிட்லர் படையின் தாக்குதலிலிருந்து தப்பியவர். அப்போது



முகம் தெரியாத யார் யாரோ அவருக்கு உதவியிருக்கிறார்கள். அவர்களுடைய கருணையால்தான் அவர் உயிர்பிழைக்க முடிந்தது.

அவ்விதத்தில் டேனியல் குடும்பத்தின் இன்றைய நலவாழ்வுக்குக் காரணம் அந்த அந்நியர்கள்தான். அவர்கள் சகமனிதர்மீது காட்டிய அன்புதான்.

இந்தக் கதைகளைத் தன் தந்தையிடமிருந்து கேட்ட டேனியல் வெகுவாகக் கவரப்பட்டார். தானும் மற்றவர்களுக்கு ஏதாவது செய்ய



வேண்டும் என்று எண்ணினார்.

அப்போதுதான் ஆரோக்கிய உணவுகளைத் தயாரித்து விற்கும் திட்டம் அவருக்குத் தோன்றியது.

நான் செய்வது சரிதானா? இதனால் எனக்கும் சமூகத்திற்கும் நல்லது வருமா என்று என்னை நானே பலமுறை கேட்டுக்கொண்டேன் என்கிறார் டேனியல். அதாவது என்னை நானே விமர்சனம் செய்து கொண்டேன். பலநாள் யோசித்து இது சரிதான் என்று உறுதி செய்து கொண்டேன்.

அதேசமயம் நிறுவனத்தைத் தொடங்கிய பிறகு நான் கேள்வி கேட்பதை நிறுத்திவிட்டேன். காரணம் நான் செய்வது தொழில் ரீதியிலும் நல்லது சமூக ரீதியிலும் நல்லது என்பதை நான் ஏற்கனவே யோசித்து உறுதி செய்து கொண்டுவிட்டேன்.

> **தொழில் மூலமாகவே சமூகத்துக்கும் உதவலாம், தனிப்பட்ட முறையிலும் வெற்றியடையலாம்!**

அதன்பிறகு அந்தத் திட்டத்தின்மீது சந்தேகம் வரக்கூடாது. அதைச் சரியாக நடைமுறைப்படுத்தி வெற்றியடைவதில் மட்டுமே கவனம் செலுத்த வேண்டும்.

சமூகப்பொறுப்போடு செயற்பட விரும்பும் இளைஞர்கள் இதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். எத்தனை தோல்வி வந்தாலும் நம்பிக்கையிழந்து இலாபம் மட்டும் போதும் என்று நினைத்துவிடாதீர்கள். ஒரே நேரத்தில் நம் தொழிலால் சமூகத்திற்கும் நன்மை வேண்டும், நாமும் நன்றாக இருக்க வேண்டும். இந்த முனைப்போடு சிந்தித்தால் உங்களுக்கேற்ற சரியான தொழிலைக் கண்டறியலாம். பிறகு அதில் துணிச்சலுடன் இறங்கி வெற்றியடையலாம் ●







அந்த ஆபீசர் தனக்கு வரியில்லா வருமானம் மாதத்துக்கு 50 ஆயிரம் ரூபாய் வரும்னு சொல்றாரே... அது என்ன?
அவர் வாங்கிற இலஞ்சத்தை தாங்க அப்படி பாலிஷா சொல்றாரு!



கடன் வாங்கி மோசடி பண்ணினது இவராகத்தான் இருப்பார்ன்னு ஏன் இந்த ஆளை அரெஸ்ட் பண்ணிக் கொண்டு வந்தீங்க? நிம்மதியான தூக்கமே இல்லை என்று இவர் பேசிட்டு இருந்ததை கேட்டேன் சார்!



வாங்கின கடன ஒழுங்கா திருப்பிச் செலுத்தல எங்கம்மா உன் புருஷன்?
அப்புறமா வாங்க சார்... அவர் நிம்மதியா தூங்கிட்டு இருக்கார்.




ஆச்சரியமா இருக்கு...அந்த பார்ல ஏன் கூட்டமே இல்லை?
பாரடங்கு உத்தரவு போட்டிருக்காங்களாம்!


தலைவரே... நான் பேசுறது கேட்குதா?
ஜெயிலருக்கே கேட்டிடும்... மெதுவா பேசு



ஸ்பொட்டுக்கு வராமலேயே உன் கூட்டாளி பக்கிரிதான் பாங்க் லொக்கரைத் திறந்து குடுத்தானா...
எப்படி?காணொளி காட்சி மூலமா திறந்து கொடுத்தான் எஜமான்!



தலைவர் எதுக்காக உங்களைக் கட்சியிலிருந்து நீக்கினார்... அளவுக்கு அதிகமா சொத்து சேர்த்ததாலயா?
ம்ஹூம் அவரைவிட... அதிகமாக சொத்து சேர்த்ததால!



நீதிபதி ஐயா! மனைவியை அவங்க தாய் வீட்டில ஒரு வாரம் விட்டுட்டு வர பைக்ல அழைச்சிட்டு போன போது ட்ராபிக் பொலிஸ் என்மேல வழக்கு போட்டுட்டாங்க...!அப்போ நிச்சயம் நீ சந்தோஷத்துல வேகமா பைக்கை ஓட்டியிருப்பே... அபராதத் தொகை ஒழுங்கா கட்டிடு..!



நம்ம தலைவரை சினிமாவில் நடிக்க கூப்பிடுறாங்களாம்...
சினிமாவிலேயுமா...?



காலையில வாக்கிங் போன நம்ம தலைவரை பறக்கும் படை சோதனை போட்டாங்களாமே ஏன்?!
யாரோ பீச்ல நடமாடும் ஏ.டி.எம்.மே ன்னு தலைவருக்கு பேனர் வச்சிருந்தாங்களாம் அதான்!



வங்கிக்கு பணம் கொண்டு சென்ற தலைவர் கைதா...ஏன்?
வாக்கு வங்கிக்கு கொண்டு சென்றாராம்!



என் மனைவிக்கு நான் தான் உலகம்...!
உலகம் தெரியாதவங்களா இருப்பாங்க போலிருக்கே...?

சிறுகதை

# நீயும் நானும் ஒன்று தானே

சிவராசா படிக்கட்டில் இருந்து வெற்றிலைத் தட்டத்தை தூக்கி தன்னுடைய மடியில் வைத்துக் கொண்டார்.அவருடைய கைகள் வெற்றிலைச் சீவல்களை பொறுக்கிக் கொண்டிருந்தன.அப்பொழுது படலையடியில் இரண்டு,மூன்று மோட்டார் சைக்கிள்கள் வந்து நிற்பதை அவதானித்தார்.அவருடைய மனம் திக்கென்று அடித்துக் கொண்டது.இரவு நேரந்தான்.ஆனால் சனப்புழக்கம் உள்ள இந்த நேரத்தில் அவர்கள் வர மாட்டார்கள்.தனக்குள்ளே நினைத்துக் கொண்டு, வெற்றிலைத் தட்டத்தை படியில் வைத்துவிட்டு, வந்தவர்கள் யார் என்று பார்ப்பதற்காக படலையடிக்குச் சென்றார்.

ஐயா, என்ஜினியர் ரவிக்குமாருடைய வீடு இது தானோ? ஆம் என்று பதிலளித்தார் சிவராசா.நாங்கள்......கல்லூரியில் படிப்பிக்கிற னாங்கள்.அவரைச் சந்திக்க வேணும். இருக்கிறாரா?வாருங்கள் மகன் உள்ளே தான் இருக்கிறார்.அவர்களை அழைத்துக் கொண்டு சிவராசா வீட்டுக்குள் சென்றார்.தம்பி தம்பி என்று குரல் கொடுத்தார்.தகப்பனின் குரலைக் கேட்டு ரவிக்குமார் வெளி விதிக்கு விரைந்து வந்தார்.அவர்களுக்கு வணக்கம் தெரிவித்துவிட்டு அவர்களை உட்காரும்படி கேட்டுக் கொண்டார்.தானும் ஒரு சொகுசுக் கதிரையில் உட்கார்ந்து கொண்டார்.



நாங்கள் ...கல்லூரியில் படிப்பிக்கிறனாங்கள். நீங்கள் அந்தக் கல்லூரியின் பழைய மாணவராக இருக்கிறீங்கள்.இந்த முறை பரிசளிப்பு விழாவுக்கு உங்களைப் பிரதம விருந்தினராக அழைக்க எங்களுடைய பெற்றோர், ஆசிரியர் சங்கம் தீர்மானித்துள்ளது, நீங்களும் உங்களுடைய மனைவியும் வருகை தந்து சிறப்பிக்க வேண்டும்.ஒக்டோபர் பதினைந்தாம் திகதி பரிசளிப்பு விழாவை நடத்துவதற்கு தீர்மானித்திருக்கின்றோம். வந்தவர்களில் ஒருவர் கூறினார்.

“உங்களுடைய விருப்பம் அதுவாக இருந்தால் நான் அதை ஏற்றுக் கொள்கின்றேன்” என்று புன்முறுவலுடன் பதிலளித்தார் ரவிக்குமார்.

அப்பொழுது ரவிக்குமாருடைய மனைவி அவர்களுக்கு தேநீரும் , பிஸ்கற்றுக்களும் கொண்டு வந்து பரிமாறினாள்.சிறிது நேரத்தின் பின்னர் அழைப்பிதழுடன் வந்து சந்திப்பதாகக் கூறி விட்டு அவர்கள் புறப்பட எழுந்தார்கள். ரவிக்குமார் படலை வரை சென்று அவர்களை அனுப்பி வைத்தார்.

அந்த நாளும் வந்தது.ரவிக்குமார் தன்னுடைய காரில் புறப்பட ஆயத்தமானார்.அவருடைய மனைவி முன் ஆசனத்தில் அவருக்கு அருகில் இருந்தாள். ரவிக்குமாருடைய பெற்றோர்கள் பின் ஆசனத்தில் ஏறி உட்கார்ந்தார்கள்.அவர்கள் அந்தக் கல்லூரியை சென்றடைந்ததும் அவர்களுக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.ரவிக்குமார் தன்னுடைய மனைவி சகிதம் மேடையில் உட்கார்ந்து இருந்தார்.அவருடைய பெற்றோர்கள் மண்டபத்தில் முன் வரிசையில் அமர்ந்து இருந்தார்கள்.

முன் வரிசையில் இருந்த சிவராசாவின் சிந்தனை அவருடைய பாடசாலை வாழ்வை நோக்கி பின்னோக்கிப் பறந்தது.அவருடைய பாடசாலை வாழ்க்கை வேதனை நிறைந்ததாக இருந்தது.படிக்க வேண்டும் என்ற ஆசை இருந்தது.ஆனால் சந்தர்ப்ப சூழ்நிலை அதற்கு இடம் கொடுக்கவில்லை.வகுப்பில் எப்போதும் கடை நிலையிலிருந்தார். ஆசிரியர்களுடைய பிரம்படிக் காயங்களை விட அவர்களுடைய ஏளன வார்த்தைகள் அவருடய மனதை குத்திக் குதறின. தான் அந்தப்பாடசாலையில் மற்றவர்களால் புறக்கணிக்கப்பட்டு தாழ்வு மனப்பான்மையால் வருந்திய சந்தர்ப்பங்களை நினைத்துப் பார்த்தார்.

இன்று அதே பாடசாலையில் தன்னுடைய மகன் பிரதம விருந்தினராக இருப்பதைப் பார்த்து ஆனந்தக் கண்ணீர் விட்டார்.இப்பொழுது பிரதம விருந்தினர் ரவிக்குமார் அவர்கள் உரையாற்றுவார் என்ற அறிவிப்பை கேட்டு சிவராசாவின் சிந்தனை தடைப்பட்டது.தன்னுடைய மகனின் பேச்சை முதன் முறையாக அன்று தான் அவர் கேட்கப் போகின்றார்.மகன் என்ன கூறப் போகின்றான் என்பதை அறிந்து கொள்ளும் ஆவலில் தன்னுடைய முழுக் கவனத்தையும் மேடையை நோக்கிச் செலுத்தினார்.

ரவிக்குமார் தன்னுடைய பேச்சின் போது நான் உங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு பரிசு தர இருக்கின்றேன்.அது என்றென்றும் உங்களுக்கு மட்டுமல்ல, உங்களுடைய சந்ததிக்கும் பிரயோசனப்படும். அது தான் என்னை இந்த நிலைக்கு உயர்த்திய என்னுடைய அனுபவம்.ஒரு வகையில் அது ஒரு சுயசரிதையாகவும் இருக்கலாம்.

என்னுடைய தந்தையின் வார்த்தைகள் தான் என்னை இந்த நிலைக்கு உயர்த்தின.“மகனே எந்தப் பாடசாலையை காண, கால் மிதிக்க அஞ்சினேனோ அந்தப் பாடசாலையில் சந்தோசத்துடன் என் கால் பதிக்க செய்” இது தான் என் தந்தை கூறிய வார்த்தைகள்.

தென்மராட்சிக்குச் சென்று தேங்காய்கள், மரக்கறிகள் வாங்கி வந்து விற்று குடும்பத்தை நடத்தினார்.நான் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையவில்லை. என்னுடைய திறமையில் எனக்கு நம்பிக்கை இருந்தது. என்னுடைய திறமையை காட்டுவதற்கு பல சந்தர்ப்பங்கள் இருக்கின்றன என்பதை உணர்ந்தேன்.ஆறாம் வகுப்பிலிருந்து ஒவ்வொரு தவணையிலும் எல்லாப்பாடங்களிலும் தொண்ணூறுக்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றேன்.நான் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையவில்லை என்ற கவலை கரைந்துவிட்டது. க.பொ.த (சாதாரண) தரப்பரீட்சையில் ஒன்பது A யும் , க.பொ.த (உயர்) தரப் பரீட்சையில் மூன்று Aயும் பெற்றுக் கொண்டேன்.இன்று நான் ஒரு பொறியியலாளராகவும் பிரதம விருந்தினராகவும் உங்கள் முன்னிலையில் நிற்கின்றேன்.

நற்குணங்களும் தன்னம்பிக்கையும் இளமையில் இருந்து வளர வேண்டும்.எனக்குத் தெரியாதது அநேகம் என்று நினைத்துக் கொண்டு நீங்கள் பெற்றுக் கொள்வது அநேகம்.எனக்கு அநேகம் தெரியும் என்று நினைத்துக் கொண்டால் நீங்கள் அநேகமானவற்றை இழந்து போவது மட்டுமல்ல சிக்கல்களிலும் மாட்டிக் கொள்வீர்கள்.இது தான் நான் உங்களுக்கு வழங்கிய பரிசாகும். அவருடைய பேச்சு முடிந்ததும், ரவிக்குமாரின் மனைவி பரிசில்களை வழங்கினார்.

பரிசளிப்பு விழா முடிந்ததும் பேச்சாளர்கள், ஆசிரியர்கள், நலன் விரும்பிகளுக்கு விருந்துபசாரம் வழங்கப்பட்டது.பலரும் ரவிக்குமாரின் பேச்சைப் பாராட்டினார்கள். சிவராசாவின் மனம் மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்தது. விருந்து முடிந்து காரில் ஏறும் போது சிவராசா அந்தப் பாடசாலையை ஒரு முறை திரும்பிப் பார்த்துக் கொண்டார்.நீ அடைய முடியாததை உன் மகன் மூலம் அடைந்து விட்டாய் அல்லவா! வாழ்த்துக்கள்! என்று அந்தப் பாடசாலை வாழ்த்தி வழியனுப் புவது போல அவருக்கு இருந்தது.

க.தர்மலிங்கம்,
கோண்டாவில்.

# அப்பாக்களுக்கு மட்டும்!

அப்பாக்களுக்கு மட்டுமே தெரியும், தங்கள் குழந்தைகளை வளர்ப்பது எவ்வளவு கடினம் என்பது.


ஒரு தாய் தனது குழந்தைகளை கருவில் சுமந்தாள், தந்தை தனது வாழ்நாள் முழுவதும் தோளிலும், மனதிலும் சேர்ந்து சுமக்கிறார்.

அம்மா தனது குழந்தைக்கு அன்பினை ஊட்டி வளர்த்தால், அப்பா அறிவை புகட்டி வளர்க்க வேண்டும்.

அப்பா க்கள் என்றாலே, அடிப்பார் மிரட்டுவார் என்ற பெயர் உண்டு.

ஆனால் அதனை அவர்கள் வேண்டுமென்றே செய்வதில்லை.

தனது பிள்ளை ஒழுக்கத்தில் சிறந்து விளங்க வேண்டும் என்பதற்காக, மனதுக்குள் பாசம் இருந்தாலும், வெளியில் தன்னை ஒரு கோபக்கார அப்பாவாக காட்டிக்கொள்வார்.



காலையில் எழுந்து மனைவி கொடுக்கும் உணவினை வாங்கிக் கொண்டு, வேலைக்கு செல்லும் அப்பாக்கள் மாலைப் பொழுதில் வீடு திரும்புகையில், தனது குழந்தைகளுக்கு எதையாவது வாங்கி வர வேண்டும் என ஆசைப்படுவார்.

ஏனெனில், அப்பாவின் கைகளை எதிர்பார்த்து காத்திருக்கும் பிள்ளைகள் ஏராளம், குழந்தைகளுக்கு அடுத்ததாக மனைவியும் இந்த வரிசையில் சேர்ந்துவிடுவாள்.

அவளும், கணவன் வீடு திரும்புகையில் அதை வாங்கிக் கொண்டு வாருங்கள், இதை வாங்கி வாருங்கள் என செல்ல கட்டளையிட்டு அனுப்புவாள்.

இதற்கெல்லாம் கீழ்ப்படிந்து தனது குடும்ப உறுப்பினர்களின் தேவைகளை நிறைவேற்றுவதில் கண்ணும் கருத்துமாக செயற்படுவார்.

பண்டிகை நாட்கள் என்று வந்துவிட்டால், குடும் பத்தில் உள்ள அனைவரும் விரும்பும் ஆடைகளை எடுத்துக் கொடுத்துவிட்டு, தனக்கு மட்டும் பேருக்கு ஒருஆடையை எடுத்துக் கொள்வார்.

தனது பிள்ளை நன்றாக படித்துப் பெரிய ஆளாக வேண்டும் என்று ஆசைப்படும் அவர், படிப்பிற்கு தேவையான அனைத்தையும் செய்து கொடுத்து விடுகிறார்.மகனோ, மகளோ படித்து வேலைக்கு செல்லும் வரை, குடும்பப் பொறுப்பைத் தனது தோளில் சுமந்து கொண்டு பயணிக்கிறார்.

சில குடும்பத்தில் மகன்கள் கடைசி வரை வேலைக்கு செல்லாமல் ஊதாரியாக சுற்றிக் கொண்டு இருந்தால், மகனை எப்படியாவது திட்டி வேலைக்கு அனுப்பி விட வேண்டும் என்பதில் முனைப்போடு செயற்படுவார்.

இந்த விடயத்தில், அப்பாவுக்கும் மகனுக்கும் சண்டை வர, ஒரு கட்டத்தில் தனது மகனுக்கே எதிரியாகி விடுகிறார்.

வீட்டில்அம்மாக்கள்செய்பவை தான் சிறந்தது என பிள்ளை கள் நினைப்பார்கள், ஆனால் அப்பாக்கள் என்ன தான் பிள்ளைகளுக்கு பார்த்து பார்த்து செய்தாலும், அவரின் பெயர்வெளிவருவதில்லை.

பிள்ளைகளில் இருக்கும் அன்பை வெளிக்காட்டிக் கொள் ளாமல் மனதுக்குள் வைத்து பூட்டி வைத்து விட்டு தன் பிள் ளையின் எதிர்காலத்திற்காய் தன்னையே அர்ப்பணிக்கும் தந்தை என்றும் ஓர் ஏணிப்படியே!

# இதுக்கெல்லாமா அபராதம்...? வியக்கவைக்கும் வித்தியாசமான சட்டங்கள்



உலகின் பல நாடுகளில், வித்தியாசமான சட்டங்கள் உள்ளன, நாம் நம் நாட்டில் அன்றாடம் செய்யும் சில அங்கு தண்டனைக்குரிய குற்றம் என்பது மிகவும் வேடிக்கையாக உள்ளது.

## அரபு நாடுகள்:

பொது இடங்களில் ஜோடிகள் அன்பை வெளிப்படுத்துவது, கட்டிப் பிடிப்பது, சிறியதாக கன்னத்தில் முத்தம் கொடுப்பது கூட 10 நாட்கள் சிறை தண்டனைக் குரியதாம். இதில் நீங்கள் கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டு வாயோடு வாய் வைத்தால் ஒரு வருட சிறைத் தண்டனை கன்ஃபார்ம்.

## அமெரிக்கா

அமெரிக்காவின் சான் பிரான்ஸிஸ்கோ மாகாணத்தில் புறாக்களுக்கு உணவளிப்பது தண்டனைக்குரிய குற்றமாகும். இதேபோல் இத்தாலியிலும் பறவைகளுக்கு பொது இடங் களில் உணவளிப்பது தண்டனைக் குரிய குற்றமாம்.

வோஷிங்டனில் நோயை வெளிக்காட்டக் கூடாதாம். நோய் வாய்ப்பட்டவர், வெளியே வந்தால் அவருக்கு சட்டப்படி அபராதமும், சிறைத் தண்டனையும் கிடைக்குமாம்.

கொலராடோ மாகாணத்தில் விவசாயிகள் கூட மழை நீரை சேமிப்பது சட்டப்படி குற்றம்.

## கனடா

கனடாவில் 10 டொலருக்கு அதிகமாக பொருள் வாங்கிவிட்டு, சில்லறையாக பணம் செலுத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாம்.

## ரஷ்யா

ரஷ்யாவின் மொஸ்கோ நகரில், பொதுமக்கள் தங்கள் சொந்த வாகனமான கார், வான் போன்றவற்றை சுத்தமாக வைக்காவிட்டால் அபராதம் விதிக்கப்படுமாம்.

## சிங்கப்பூர்

சிங்கப்பூரில் பபுல்கம் மெல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது, பபுல்கம் மெல்ல மருத்துவரின் பரிந்துரை இருந்தால் மட்டுமே அங்கு பூமர் சாப்பிட்டு முட்டை விட முடியும்!!

## ஜப்பான்

ஜப்பான் நாட்டில் மக்கள் தங்கள் எடையை பராமரிக்க வேண்டுமாம், இதற்கு மீறி அவர்கள் சதைபோட்டு குண்டானால் அவர்களுக்கு அபராதம் விதிக்கப்படுமாம், அதாவது அங்கு குண்டானவர்களுக்கு அபராதம் நிச்சயம்.

## டென்மார்க்

டென்மார்க் ஹோட்டல்களில் சாப்பிட்டு, வயிறு நிறையவில்லை என்றால் சாப்பாட்டிற்கு பணம் செலுத்த தேவையே இல்லை என்று ஒரு சட்டம் உள்ளதாம்.

அதோடு, நம்ம ஊர்ல நைட்லயே லைட் போடு வண்டி ஓட்ட மாட்டோம், ஆனா, இந்த நாட்டில பகல் லைட் போடாம ஓட்டினா கூட அபராதம் விதிக்கிறாங்களாம்.

## ஜேர்மனி

ஜேர்மனியில், வாகனத்தில் எரிபொருள் தீர்ந்து வீதியில் நின்றுவிட்டால், ஓட்டுநருக்கு சிறைத் தண்டனையும் அபராதமும் கிடைக்குமாம்.

## சவுதி

சவுதி அரேபியாவில், பெண்கள் வாகனம் ஓட்ட உரிமை இல்லையாம்.

## அவுஸ்திரேலியா

அவுஸ்திரேலியாவின் விக்டோ ரியா நகரில், எலக்ட்ரிகல் வேலைகளை பொதுமக்கள் செய்யக் கூடாதாம், சிறிய பல்வு மாற்றினாலும் அதற்கு சான்று பெற்ற எலக்ட்ரீசியன் வரவேண்டுமாம்.

# காலத்தால் அழியாத கானங்கள் ...

திரைப்படம் : பார்த்தால் பசி தீரும்
பாடியவர் : பி.சுசிலா
இசை : எம்.எஸ்.விஸ்வநாதன்
வரிகள் : கண்ணதாசன்



யாருக்கு மாப்பிள்ளை யாரோ
அவர் எங்கே பிறந்திருக்கின்றார் ஒ ஒ ஒ
யாருக்கு மாப்பிள்ளை யாரோ
அவர் எங்கே பிறந்திருக்கின்றாரோ
எந்தப் பார்வை பட்டு சொந்த உள்ளம் கேட்டு
எங்கே மயங்கி நின்றாரோ

யாருக்கு மாப்பிள்ளை யாரோ
அவர் எங்கே பிறந்திருக்கின்றாரோ

கட்டவிழ்ந்து கண் மயங்குவாரோ
அதில் கை கலந்து காதல் புரிவாரோ
கட்டவிழ்ந்து கண் மயங்குவாரோ
அதில் கை கலந்து காதல் புரிவாரோ
தொட்டுத் தொட்டுப் பேசி மகிழ்வாரோ
இல்லை தூர நின்று ஜாடை புரிவாரோ
தொட்டுத் தொட்டுப் பேசி மகிழ்வாரோ
இல்லை தூர நின்று ஜாடை புரிவாரோ
தூர நின்று ஜாடை புரிவாரோ

எந்தப் பார்வை பட்டு சொந்த உள்ளம் கேட்டு
எங்கே மயங்கி நின்றாரோ
யாருக்கு மாப்பிள்ளை யாரோ
அவர் எங்கே பிறந்திருக்கின்றாரோ

ஊரறிய மாலையிடுவாரோ
இல்லை ஓடி விட எண்ணி விடுவாரோ
ஊரறிய மாலையிடுவாரோ
இல்லை ஓடி விட எண்ணி விடுவாரோ
சீர் வரிசை தேடி வருவாரோ
இல்லை சின்ன இடை எண்ணிவருவாரோ
சீர் வரிசை தேடி வருவாரோ
இல்லை சின்ன இடை எண்ணிவருவாரோ
சின்ன இடை எண்ணி வருவாரோ

எந்தப் பார்வை பட்டு சொந்த உள்ளம் கேட்டு
எங்கே மயங்கி நின்றாரோ
யாருக்கு மாப்பிள்ளை யாரோ
அவர் எங்கே பிறந்திருக்கின்றாரோ ஒ ஒ ஒ

இப்பாடலை
SMS மூலம் விரும்பிக்
கேட்டவர்கள்:
எனது குடும்பத்தினருக்காக
S.ஐங்கரன் ஆதி கோவிலடி,
வல்வெட்டித்துறை,சாரங்கன்
ஜானகி, விமலா குடும்பம்,
நெல்லியடி,எஸ். சாந்தன்
மருதடி காரைநகர்
அப்பா தவலிங்கம்
அவர்களுக்காக தங்கை
லோஜிதா-பருத்தித்துறை
விஜயன்,நெல்லியடி.

*அன்பு வாசகர்களே!*
காலத்தால் அழியாத கானம் பகுதிக்கு நீங்களும் பாடல்களை விரும்பிக் கேட்கலாம். உங்கள் பெயர், முகவரியுடன் விரும்பிக் கேட்பவர்கள் பெயர், முகவ ரியையும்
**021 567 1543**
எனும் இலக்கத்திற்கு **SMS** செய்யுங்கள்.

## பிரெஞ்ச் நடிப்பு பட்டறை அனுபவத்தை பகிரும் மன்மதன் பாஸ்கி



ஈழ கலைஞர்களுக்கு அனைவருக்கும் பரீச்சயமானவர் மன்மதன் பாஸ்கி. தனது நகைச்சுவை பேச்சாலும் நடிப்பு திறமையாலும், இசை, இயக்கம் என பல கலைத்துறை மூலம் மக்கள் மனங்களில் தனக்கென ஒரு தனி இடம் பிடித்திருக்கும் மன்மதன் பாஸ்கி அவர்களுக்கு அண்மையில் பிரபல இயக்குநர்களின் பிரான்சு திரைப்படம் ஒன்றில் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடிக்க வாய்ப்பு கிடைத்தது. அதற்காக இத்திரைப்படத்தின் தயாரிப்பாளர்கள் பாரிஸ் நகரில் உள்ள முதன்மையான திரைப்பட கல்லூரியில் நடிப்பு கற்றுக்கொடுக்கும் ஆசிரியர் Dany Hèri என்பவரின் பட்டறையில் நடிப்பு பயிலும் சந்தர்ப்பத்தை வழங்கினர். Dany Hèri ஏற்கனவே இந்த இயக்குநர்கள் இயக்கிய திரைப்படத்தில் நடித்த நடிகர்களுக்கு நடிப்பு பயிற்றுவித்தவர். அதில் குறிப்பாக இன்று பிரபலமாக இருக்கும் நடிகர் Omar Sy ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

படத்தில் வரும் கதாபாத்திரத்தின் நடிப்புக்கான பயிற்சி 5 நாட்கள் நடைபெற்றன. அதில் 1 நாள் கேசவன், 3 நாட்கள் Uncle உம் கலந்துகொண்டார்கள். அதன் பின் இன்றுவரை பட்டறையில் ஒரு நடிகனுக்கான அத்தனை அம்சங்களையும், நடிப்பு நுணுக்கங்களையும், செயல் முறைகளையும், கற்றுக்கொள்ளும் சந்தர்ப்பமும் கிடைத்துள்ளது.இன்றுடன் 30 நாட்கள் முடிந்து விட்டன. இன்னமும் 15 நாட்கள் இருக்கின்றன. தமிழ்நாட்டு செல்லும்போது நடிகர் நாசரின் பட்டறையில் சில நாட்கள் கற்றுக்கொண்டு, முழுமையாக கற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஆர்வமும்,நோக்கமும் இன்று நிறைவேறியதை நினைக்கும்போது, உடல் இயக்கத்தினால் பேசும் மொழி நடிப்புக்கலை. இக்கலையை கற்றுக்கொள்ளும் ஆசையும் கனவும் நீண்டகாலமாக இருந்தாலும் அதற்கான சந்தர்ப்பம் நம்மில் பலருக்கு அமைவதில்லை.

அவ்வாறான ஒரு சந்தர்ப்பத்திற்கு காத்திருக்கும் ஒரு உண்மையான கலைஞனுக்கு அது கிடைக்கும் பொழுது அவன் உள்ளம் சந்தோசத்திற்கும் அப்பாற்பட்ட ஒரு உணர்வை பெறுகின்றது.

ஒரு நடிகனாக ஆசைப்படும் அனைவரும் கற்றுக்கொள்ள வேண்டும் என்பது இப்போதுதான் தெரிகின்றது என்பதையும் கூறினார். மன்மதன் பாஸ்கியின் "Selfie அக்கம் பக்கம்" லங்காசிறி மற்றும் சினி உலகம் ஊடக அனுசரணை மூலம் இணையத்தளங்களில் வெற்றி நடைபோடுகிறது.

## பரந்த உலகில் ஒரு கறுப்புலகம்



ஏ.ஜே. பெலிசியன் என்ற கலைஞனின் கதை, இயக்கம் மற்றும் படத்தொகுப்பில் தயாராகி வரும் குறும்படம் கறுப்புலகம். சுபாஸ்கரன் மற்றும் பல கலைஞர்கள் நடிக்க ஜெல்சின் இசையமைத்து வரும் இந்த குறும்படத்தின் போஸ்டர்கள் ஏற்கனவே வெளியாகி ரசிகர்களின் அமோக வரவேற்பை பெற்றது.

இந்நிலையில் இப்படைப்பின் டீஸர் ஒன்றை படக்குழுவினர் வெளியிட்டுள்ளனர். டீஸரை பார்க்கும் போது இந்த படைப்பு எப்படிப்பட்ட கதையாக இருக்கும் என்று யூகிக்க வைக்கிறது.

## என்னம்மா இப்படி பண்றீங்களேம்மா - இளைஞர்களின் கதறல்



என்னம்மா இப்படி பண்றீங்களேம்மா என்ற பெயரில் இளம் கலைஞர்களின் உழைப்பில் ஒரு குறும்படம் தயாராகி வருகிறது.

காமெடி கலந்த த்ரில்லர் குறும்படமாக தயாராகி இருக்கும் இந்த படைப்பிற்கு பிரணவன் கதை எழுத, கஜீவன் இயக்கியுள்ளார். இது ஒரு சீரியஸான கதையல்ல, ஆனால் கண்டிப்பாக அனைவரும் விழுந்து விழுந்து சிரிப்பீர்கள் என்று படக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் தற்போது குறும்படத்துக்கான டிரைலர் ஒன்று வெளியாகியுள்ளது.

# ஈழத்து கவிதைகள்

## விசாரம்

மற்றொரு நாள் மாலை...
மரக்குற்றி ஒன்றின் மேல்
சற்றே இருந்தான் தனி மனிதன்
சுற்றுமுற்றும்
பார்த்தான்
அருகே பனங்கூடல்!
ஓர் சுடலை
மேற்கே: அடுக்கு விறகு
அடுக்கு விறகின்-அனலில்
எரிந்து கிடக்கும் பிணம்
புகைந்து காற்றில்
ஒடுக்கமுறும்
சம்பவத்தைப் பார்த்தான்.
தனக்குள் அவன் நினைத்தான்
பம்பி வரும் எண்ணம் பல
விறகும் பிணமுமொரு மிச்சமின்றி
வேவதில்லை பிறகும் எலும்பு கரிகள்
நிறைய உண்டே!
ஆவியும் போகும் அதிகம் அதிகமாய்
சீவியத்தில் ஆவியுமோ சேர்ப்பு?
ஆவியும் காற்று
அதிகமில்லை வேற்றுமைகள்
ஆவி உயிர் எனலும் ஆகுமோ?
சீவனென்று
பேசப் படுவதென்ன?
பேர் என்ன?
எங்களுக்குள் ஆசைப் படுகிறதார் ஆள்?
உண்பது நாழி
உடுப்பது நான்கு முழம்
எண்பது கோடி நினைந்தெண்ணுவன
எண்ணுகிற
பண்டமென்ன?
உள்ளே பரபரக்கும் வேட்கை என்ன?
அண்டமென்ன? பிண்டமென்ன?
ஆர்? நான் ஆர்?
என் எண்ணம் ஆர்?
ஞானங்கள் யாவையோ!
தேன் ஏன் இனிக்கிறது?
தேசிக்காய் ஏனோ புளிக்கிறது?
வெள்ளப் புனல் ஏன் குளிர்ந்து
சுழிக்கிறது,பாடிச் சுழன்று?
சாப்பிட்ட வேளை சரீரம் நிறைகிறது.
கூப்பிட்டுப் பெண்ணுடனே கூடுகையில்
ஏற்பட்டுப் பொங்கும் சுகத்தின்
துணிகள் கணச் சுவர்க்கம்
மங்கிவிடும் பின்னர் மறைந்து.
கள்ளுக் குடித்தாற் களிப்பு வருகிறது
சுள்ளென்று மொய்க்கும் துகில் போன்ற
உள்ளத்து
நோவெல்லாம் போய்
இதமாய் நோக்கம் இருண்டுவிட
மேகமொன்று மூடும் விழுந்து
கஞ்சா புகைத்தால்....
கனவுச் சுருள் விரிய
எண்சாண் உடம்பும் இலேசாகி பஞ்சாய்
மிதக்கும் உணர்வு விளைகிறதே!
ஏனோ?
இதற்குப் பொருள்தான் எது?
உண்ட...களைப்பால் உறங்குகிற வேளைகளில்
மண்டலங்கள் எல்லாம் மறைந்து விடும்.
குண்டலங்கள்
ஆடும் செவியாள் அணைத்தும்
விழிப்படையா நீடு துயில்
ஓர் நிழல்...
இவ்வாறே எல்லாம் எமது சுகதுக்கம்
செவ்வாய்கள், திங்கள், புதன் என்று
நில்லாமல்
பாய்ந்து தொடர்ந்து படர்வது மெய்
நாம் சாக
மாய்ந்திடுமோ எங்கள் மனம்?
மயானத்தருகே
மரக்குற்றி மீதே
தியானத்தமர்ந்த திருவன்
சுயாதீனச்
சிந்தனையில் வந்த சில செய்தி திகைப்பளிக்க
விந்தையுடன் மீளுகிறான் வீடு.

1986 இல் வெளிவந்த கவிஞர்
முருகையனின்
அது- அவர்கள் எனும் நூலில் இருந்து...

# தில்லுக்கு துட்டு

## திரைவிமர்சனம்

தமிழ் சினிமாவில் ஒரு வழக்கம் உண்டு, ஒவ்வொரு ஹீரோவும் கட்டாயம் ஒரு படத்திலாவது பொலிஸாக நடிப்பார்கள்.

அது போல இப்போது இருக்கும் trend ஒரு பேய் படத்திலாவது நடிக்க வேண்டும், இந்த வரிசையில் தற்போது சந்தானம் நடித்து வந்திருக்கும் பேய் படம் தில்லுக்கு துட்டு.

சிவன்கொண்டைமலை என்ற ஒரு மலையில் ஒரு அமானுஷ்ய பேய் பங்களா அங்கு பேய் எப்படி வந்தது என்பதற்கு ஒரு flash back. பின்

சென்னையில் சந்தானத்துக்கும் ஷனாயாவிற்கும் காதல். ஒரு கட்டத்தில் இவர்கள் இருவரின் குடும்பத்தினரும் அந்த பங்களாவிற்கு செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது.

அங்கு எதற்காக செல்கிறார்கள். பேய் இவர்களை என்ன செய்தது என்பதை காமெடி கலாட்டாவாக சொல்லியிருக்கும் படம் தான் இந்த தில்லுக்கு துட்டு.

இனிமே ஹீரோதான் என பட்டையை கிளப்பி வரும் சந்தானம், இப்படத்திலும் இவருக்கு சூட் ஆகும் கதாப்பாத்திரத்தில் கலக்கியுள்ளார், காமெடி டான்ஸ் ஃபைட் என எல்லா ஏரியாவிலும் பவுண்டரி விலாசுகிறார். ஷனாயா பார்க்க அழகாக இருக்கிறார். நடிப்பிலும் குறை சொல்லும் படி இல்லை.



காமெடி படம் என்றால் கண்ணை மூடிக்கொண்டு ராஜேந்திரனை புக் செய்து விடலாம் போலும். இப்படத்திலும் செம பெர்ஃபாமன்ஸ் கொடுத்து அப்லாஸ் அள்ளுகிறார்.

நானும் ரௌடிதானுக்கு பிறகு ஆனந்த் ராஜிற்கு வெயிட்டான ரோல். அதிலும் காமெடி பண்ணரேன்னு நான் பழைய வில்லன்றத மறந்துறாத என சொல்லும் இடம் மாஸ்! இவ்வளவு காமெடி நடிகர்கள் இருந்தாலும் கருணாசும் தனித்து தெரியும் அளவில் சிரிப்பு காட்டுகிறார்.



மாமனார் மருமகனாக வரும் சௌரப்ஹுக்லா, T M கார்த்திக்கின் நடிப்பு ரசிக்க வைக்கிறது.

வாராவாரம் வரும் காமெடி பேய் படங்களில் இதுவும் ஒன்று என்றாலும் இதன் பலமே எல்லா நகைச்சுவைகளுக்கும் ஆடியன்ஸிடம் இருந்து நல்ல ரெஸ்பாண்ஸ் வருகிறது.

படத்தின் ஆரம்பத்தில் சீரியஸ் பேய் படம் போல ஆரம்பித்தாலும் பின்னர் காமெடி திரைக்கதை மூலம் சரவெடியை கொளுத்தி விடுகிறார் இயக்குநர் ராம்பாலா. படத்தின் எந்த கதாப்பாத்திரதிற்கு யார் பொருத்தம் என நல்ல casting அமைததும் படத்தின் பலம்.

பின் இரண்டாம் பாதியின் ஆரம்பம் சற்று மெதுவாக அரம்பித்து பின் சுதாரித்து படம் நகர்கிறது. ஆனால் படத்தில் ஹீரோ என்ன செய்கிறார், திபத்திய சாமியாருக்கு தமிழ் மிக எளிதாக வருவது, ஊரையே அடித்து போடும் உக்கிரமான பேய் இவர்களின் விளையாட்டில் பங்கேற்கிறது என பல லொஜிக் மீறல்களும் இருக்கத்தான் செய்கிறது.

தேவையற்ற காட்சிகளை தவிர்த்திருக்கலாம். தன் மகள் விரும்பும் காதலனை குடும்பத்தோடு வீட்டுக்கு வர சொல்லி அவமானப்படுத்துவது போன்ற காட்சிகள் எல்லாம் இன்னும் எத்தனை காலத்துக்கு பாஸ்! என்னதான் இது பேய் படம் என்றாலும் இதில் பேய்கே guest role தான்.




தமனின் இசையில் பாடல்கள் படத்தோடு பார்க்க நன்றாக உள்ளது, பின்னணி இசை படத்திற்கு பலம் சேர்கிறார். தீபக் குமார் பாடியின் ஒளிப்பதிவு ஒரு பக்கம் மிகவும் colorful ஆகவும் இன்னொரு பக்கம் பேய் பங்களாவில் இருட்டிலும் திகில் காட்டுகிறது.

படத்தின் காமெடிக்கு பஞ்சமே இல்லை, அனைத்து நடிகர்களும் அவர்களின் பங்கை மிகச் சரியாக செய்துள்ளனர். படத்தின் தொழில் நுட்ப கலைஞர்களின் பங்கு பாராட்டத்தக்கது.

தேவையற்ற சில காட்சிகளை தவிர்த்திருக்கலாம். லொஜிக் மீறல்களிலும் சில க்ளீஷேக்களையும் அதிக கவனம் செலுத்தி குறைத்திருக்கலாம். மொத்தத்தில் தில்லுக்கு துட்டு முழு பைசா வசூல்!







# மேற்கிந்திய தீவுகளில் சாதிப்பாரா கோலி?

இந்திய அணி மேற்கிந்தியத் தீவுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 4 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடவுள்ளது. 2006-ல் ராகுல் டிராவிட், 2011-ல் டோனி ஆகியோர் தலைமையில் மே.இ. தீவுகளில் டெஸ்ட் தொடர் களை வென்றதையடுத்து கோலி தற்போது வென்று ஹட்ரிக் வெற்றியை இந்திய அணிக்காக சுவீகரிக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

இதுவரை இந்தியா- மே.இ.தீவுகள் இடையே 90 டெஸ்ட் போட்டிகள் நடந்துள்ளன. இதில் மே.இ.தீவுகள் 30-ல் வெல்ல, இந்திய அணி 16-ல் மட்டுமே வென்றுள்ளது. ஏனைய போட்டிகள் சமநிலை ஆகியுள்ளன. இந்தியா பெற்ற 16 டெஸ்ட் வெற்றிகளில் பெரும்பாலும் உள்நாட்டிலும், சரிவு கண்ட மே.இ.தீவுகள் அணிக்கு எதிராகப் பெற்ற வெற்றிகளே.

இலங்கை, தென்னா பிரிக்காவை டெஸ்ட் தொடர்களில் கோலி தலைமையில் இந்திய அணி வீழ்த்தியதால் தற்போது கோலி மீது எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. மேலும் அனில் கும்ப்ளேயை பயிற்சியாளராக நியமித்ததும், இந்த அணியை பற்றி இவரும் ரவி சாஸ்திரியும் அளித்த 'பில்ட்-அப்' ஆகியவையும் சேர்ந்து எதிர்பார்ப்புகளைக் கூட்டியுள்ளது.

முரளி விஜய் உத்தி ரீதியாக மிகச்சிறந்த தொடக்க வீரராக விளையாடி வருகிறார், கவாஸ்கர் வாயால் சிறந்த உத்தி பட்டம் பெற்ற 'பிரம்ம ரிஷி' தற்போது முரளி விஜய்.

விராட் கோலி தனது சிறந்த பார்மின் உச்சத்தில் இருக்கிறார். அவர் இருபது-20, ஒருநாள், டெஸ்ட் என்று வித்தியாசம் பார்க்காமல் தனது பாணி ஆட்டத்தை ஆடினால் நல்லது.

அஜிங்ய ரஹானே சிறந்த பட்ஸ்மென் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை, லார்ட்ஸில் கிரீன் டாப் பிட்சில் அண்டர்சன், ஸ்டூவர்ட் பிராட் உள்ளிட்டோருக்கு எதிராக முதல் நாள் பிட்சில், விக்கெட்டுக்களை இழந்து தவித்த இந்திய அணிக்காக, அடித்த சதம் உலகத்தரம் வாய்ந்தது.

ஸ்பின் பிட்ச் போட்டால் நிச்சயம் இந்திய அணி வெற்றி பெறவே வாய்ப்பு. ஆனால் அதேவேளையில் மே.இ.தீவுகளில் சுனில் நரைன் சேர்க்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. மேலும் மே.இ.தீவுகளில் தற்போது வேகப்பந்து வீச்சை விட ஸ்பின் நன்றாக உள்ளது.

வேகப்பந்து வீச்சுக்குச் சாதக பிட்ச் போட்டாலும் இந்தியாவில் மொகமது ஷமி, இசாந்த் சர்மா, உமேஷ் யாதவ் ஆகியோர் உள்ளனர், மேலும் புவனேஷ் குமார், மும்பை இளம் வேகப்பந்து வீச்சாளர் ஷர்துல் தாக்கூர் உள்ளனர்.

எனவே மே.இ.தீவுகளுக் குத்தான் நெருக்கடி அதிகம். மே.இ.தீவுகள் இந்தத் தொடரில் 4 டெஸ்ட் போட்டிகளில் சமநிலையுடன் எஸ்கேப் ஆனால் அது அந்த அணிக்கு மிகப்பெரிய உத்வேகம் அளிக்கும்.

**மே.இ.தீவுகளில் இந்தியா ஒரு பார்வை**

1948 ஆம் ஆண்டு இந்தியாவும் மே.இ.தீவுகளும் முதல் டெஸ்ட் போட்டியில் மோதின. 1970-71 இல் இந்தியா முதன் முதலில் மே.இ.தீவுகளில் டெஸ்ட் தொடரை வென்றது, அப்போதைய வலுவான அணிக்கு எதிராக இதனைச் சாதித்த இந்திய கப்டன் அஜித் வடேகர். இந்த தொடரில் அறிமுகமான சுனில் கவாஸ்கர் இரு இன்னிங்ஸ் சதங்கள் சாதனையுடன் ஒரே தொடரில் 774 ஓட்டங்கள் விளாசி கிரிக்கெட் உலகில் பரவலாக பேசவைக்கப்பட்டார். திலிப் சர்தேசாயும் இந்தத் தொடரில் 612 ஓட்டங்களை எடுத்தார். பொதுவாக கவாஸ்கரை குறிப்பிடுபவர்கள் இந்தத் தொடரில் திலிப் சர்தேசாயின் சாதனைகளை குறிப்பிட மறந்து விடுவது வழக்கம்.

இதற்கு முன்னதாக 1952-53-ல் 1:0 என்று இந்திய அணி தோற்றது, பிறகு 1961-62 தொடரில் 0:5 என்று உதை வாங்கியது. 1975-76 டெஸ்ட் தொடரில் பிஷன் பேடி தலைமையில் போர்ட் ஆப் ஸ்பெயின் டெஸ்டில் 4-வது இன்னிங்சில் 406 ஓட்டங் களை எடுத்து இந்தியா மரதன் வெற்றியை பெற்று, கவாஸ்கர், விஸ்வநாத் இருவரும் அபாரமான சதம் எடுத்தனர், ஆனால் தொடரை இந்தியா 1:2 என்று இழந்தது. இந்த சாதனை டெஸ்ட் விரட்டல் 2013-ம் ஆண்டு மே.இ.தீவுகளாலேயே முறியடிக்கப்பட்டது. அவுஸ்திரேலியாவுக்கு எதிராக 418 ஓட்டங்கள் இலக்கை விரட்டி மே.இ.தீவுகள் வென்றது. இப்போது இந்தியாவின் அந்த விரட்டல் 3-வது இடத்தில் உள்ளது.

1982-83 இல் கபில்தேவ் தலைமையிலான இந்திய அணி மே.இ.தீவுகளுக்குச் சென்றபோது 5 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரை இந்தியா 2:0 என்று தோற்றாலும் கபிலின் பந்து வீச்சும் பட்டிங்கும் உலகிற்கு அறிவிப்பதாக அமைந்தது. இந்தத்தொடரில் நடைபெற்ற ஒருநாள் போட்டி ஒன்றில் மே.இ.தீவுகளை இந்தியா வீழ்த்தியதே பிற்பாடு 1983 உலகக்கோப்பை வெற்றிக்கான முன்னோடியாக அமைந்தது.


இன்று விபரம் புரியாமல் சுனில் கவாஸ்கரை கேலி பேசுபவர்கள் இந்தப் போட்டியை பார்த்திருந்தால் கருத்தை மாற்றிக் கொள்வார்கள், கவாஸ்கர் 90 ஓட்டங்களை எடுக்க கபில்தேவ் 36 பந்துகளில் 7 பவுண்டரி 3 சிக்சருடன் 72 ஓட்டங்களை விளாச 47 ஓவர்களில் இந்தியா 282 ஓட்டங்கள் விளாசியது. லாய்ட் கப்டன்சியில் எந்த ஒரு அணியும் ஓவருக்கு 6 ஓட்டங் கள் விகிதத்தில் குவித்ததி ல்லை. இந்த ஒருநாள் போட்டி யில் மே.இ.தீவுகள் 255 ஓட்டங்களை எடுத்து தோல்வியை தழுவியது. மொஹீந்தர் அமர்நாத் வேகப்பந்து வீச்சை எதிர்கொள்வதில் சிறந்த பட்ஸ்மென் என்ற பெயர் பெற்றார். இவர் இதற்கு முந்தைய பாகிஸ்தான் தொடரில் 583 ஓட்டங்களை யும் இந்தத் தொடரில் 598 ஓட்டங்களை யும் எடுத்தது குறிப்பிடத்தக்கது.

இதன் பிறகு 1988-89 தொடரில் திலிப் வெங்சர்க்கார் தலைமையில் இந்திய அணி இங்கு 0:3 என்று உதை வாங்கியது, இதிலும் கபில், ரவிசாஸ்திரி, வெங்சர்க்கார் சோபித்தனர்.

1996-97 சச்சின் தலைமையிலான தொடரில் இந்தியா 1:0 என்று தோல்வி தழுவியது. ஒரு டெஸ்ட் போட்டியில் வெற்றி இலக்கான 119 ஓட்டங்களை எடுக்க முடியாமல் பிஷப், ஆம்ப்ரோஸ், பிராங்க்ளின் ரோஸ் பந்து வீச்சில் இந்திய அணி 81 ஓட்டங்களுக்குச் சுருண்டது சச்சின் மனதில் தீராத வேதனையை அளித்தது.

2002-ல் சௌரவ் கங்குலி தலைமையில் இந்திய அணி மீண்டும் 1:2 என்று தோல்வியை தழுவியது. இடது கை வேகப்பந்து வீச்சாளர் ஒருவரிடம் சச்சின் பவுல்டு ஆகிக் கொண்டே யிருந்தார்.

பிறகு 2006-ல்தான் ராகுல் டிராவிட் தலைமை யில் மே.இ.தீவுகளில் இந்தியா 1:0 என்று டெஸ்ட் தொடரை வென்றது, இதன் பிறகு டோனி தலைமையில் டெஸ்ட் தொடரை வென்றது.



எனவே இம்முறை கோலி தலைமையில் தொடரை வென்றால் ஹட்ரிக் வெற்றியாகும். ரோஹித் சர்மா டெஸ்ட் போட்டிகளில் சரியாக ஆடுவதில்லை. எனவே அவருக்குப் பதிலாக ராகுல் மிடில் ஆர்டரில் களமிறக்கப்பட வேண்டும்.

அணி இப்படியிருந்தால் நன்றாக இருக்கும்: விஜய், தவான், புஜாரா, கோலி, ரஹானே, ராகுல், சஹா, ஜடேஜா, அஸ்வின், இசாந்த், மொகமது ஷமி. (க)

# facebook

## உங்க பேரைச் சொல்லி...




கந்தசாமி என்பவர் வேலை தேடி அடுத்த ஊருக்குச் சென்றார். அங்கே சிலர் வருத்தத்துடன் இருப்பதைப் பார்த்தார்.

உங்களுக்கு என்ன துன்பம் நேர்ந்தது? ஏன் இப்படி வருத்த மாக இருக்கிறீர்கள்? என்று அன்புடன் கேட்டார்.

இந்த ஊர் பண்ணையார் கொடுமைக்காரராக இருக்கிறார். எங்களிடம் அதிக வேலை வாங்குகிறார். கூலியும் சரியாக தருவது இல்லை. அவரை எதிர்க்க எங்களுக்குத் துணிவு இல்லை. நாங்கள் பசியாலும், பட்டினியாலும் வாடுகிறோம் என்றனர்.

அவர்கள் துன்பத்தைப் போக்க வேண்டும், அந்தப் பண்ணையாருக்கு நல்ல பாடம் கற்றுத் தர வேண்டும் என்று நினைத்தார் கந்தசாமி.

அந்த பண்ணையார் எப்படிப் பட்டவர்? அவரைப் பற்றிச் சொல்லுங்கள் என்று கேட்டார்.

அவர் சண்டைச் சேவல்கள் வைத்திருக்கிறார். எங்கே சேவல் சண்டை நடந்தாலும் அதில் அவர் கலந்து கொள்வார் என்றான் அவர்களில் ஒருவன்.

இந்தச் செய்தி எனக்குப் போதும். நான் சொல்வது போலச் செய்யுங்கள். உங்கள் துன்பத்தை நான் தீர்த்து வைக்கிறேன் என்றார் கந்தசாமி.

நீங்கள் எது சொன்னாலும் நாங்கள் கேட்கிறோம்,என்றனர்.

எனக்கு ஒரு சண்டைச் சேவலும், இருநூறு பணமும் தேவை என்றார். தன் திட்டத்தை அவர்களிடம் சொன்னார்.

உடனே அவர்கள் அனைவரும் சேர்ந்து, இருநூறு பணம் திரட்டினர். ஒரு சண்டைச் சேவலையும் அவரிடம் தந்தனர்.

அவர்களில் நால்வரை மட்டும் தன்னுடன் அழைத்துக் கொண்டார் கந்தசாமி.

பண்ணையாரின் வீட்டிற்குச் சென்றார். அவர் கையில் சண்டைச் சேவல் இருந்தது.

பண்ணையாரை வணங்கிய அவர், ஐயா! சேவல் சண்டை என றாலே உங்கள் பெயர் எங்கும் பரவி உள்ளது. நேற்று எங்கள் ஊரில் சேவல் சண்டை நடந்தது.

அதில் உங்கள் பெயரைச் சொல்லி, இந்தச் சேவலை சண்டைக்கு விட்டேன். இந்தச் சேவல் வெற்றி பெற்று விட்டது. பரிசுப் பணமாக நூறு பணம் கிடைத்தது. உங்களால் கிடைத்த பரிசுப் பணம் இது. உங்களிடம் பணத்தைத் தர வந்தேன், என்றார். பணத்தை அவரிடம் நீட்டினார். பணத்தைப் பெற்றுக் கொண்டார் பண்ணையார்.

உன் சண்டைச் சேவல் நன்றாக உள்ளது. நல்ல பயற்சியும் தந்துள்ளாய். என் பெயரைச் சொல்லிப் போட்டியில் கலந்து கொள். மேலும், மேலும் உனக்கு வெற்றி கிடைக்கும், என்று பாராட்டினார்.

அடுத்த வாரம் மீண்டும் அங்கு வந்தார் கந்தசாமி.

அவருடன் அந்த ஊரைச் சேர்ந்த வேறு நான்கு பேர் வந்திருந்தனர்.

பண்ணையாரை வணங்கிய அவர், "உங்கள் பெயரைச் சொல்லி நேற்றும் சேவல் சண்டையில் கலந்து கொண்டேன். எனக்கே வெற்றி கிடைத்தது. பரிசாகக் கிடைத்த நூறு பணத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்" என்று தந்தார்.

அவர் சூழ்ச்சியை பண்ணையார் அறியவில்லை. அந்தப் பணத்தையும் மகிழ்ச்சியு டன் பெற்றுக் கொண்டார். அடுத்த வாரம் கந்தசாமி நான்கு பேரு டன் பண்ணையாரிடம் வந்தார். அவர் கையில் சண்டைச் சேவல் இல்லை.

இதை பார்த்த பண்ணையார், என்ன வெறுங்கையுடன் வந்தி ருக்கிறாய்? சண்டைச் சேவல் எங்கே? என்று கேட்டார்.

நேற்று நடந்த போட்டியில் என் சண்டைச் சேவல் தோற்று இறந்துவிட்டது. கண்டிப்பாக அது வெற்றி பெறும் என்று நம்பி னேன். அதனால் இவர்கள் ஒவ்வொருவரிடமும் நூறு பொற்காசு பந்தயம் வைத்தேன்.

இதுவரை வெற்றி பெற்றுக் கிடைத்த பணத்தை உங்களிடம் தான் தந்தேன். இப்போது தோற்று விட்டேன். இவர்களுக்கு நீங்கள்தான் பொற்காசுகளைத் தர வேண்டும் என்றார் கந்தசாமி.

நீ தோற்றதற்கு நான் எதற்கு பொற்காசுகள் தர வேண்டும்? என்ன விளையாடுகிறாயா?" என்று கோபத்துடன் கத்தினார் பண்ணையார்.

சேவல் வெற்றி பெற்ற போது நீங்கள் எப்படிப் பணத்தைப் பெற்றுக் கொண்டீர்கள். இதே போலச் சொல்லி அப்போது நீங்கள் மறுத்து இருக்க வேண்டாமா?

வெற்றி பெற்றால் பணம் உங்களுக்கு. தோல்வி அடைந்தால் இழப்பு எனக்கா? இது என்ன நியாயம்? நீங்கள் பணத்தைப் பெற்றதற்கு இந்த ஊரில் நிறைய சாட்சிகள் இருக்கின்றன. மரியாதையாக இவர்கள் நால்வருக்கும் ஆளுக்கு நூறு பொற்காசுகள் தாருங்கள். இல்லை என்றால் ஊரைக் கூட்டி, உங்களை அவமானப்படுத்துவேன். உங்களிடமிருந்து, கட்டாயப்படுத்தி அந்த பொற்காசுகளை வாங்குவேன், என்றார் கந்தசாமி.

அப்போதுதான் பண்ணையாருக்கு அவரின் சூழ்ச்சி புரிந்தது. ஊர் மக்களிடம் தன் பேச்சு எடுபடாது என்பதையும் அறிந்து கொண்டார்.

வேறு வழியில்லாத அவர், நானூறு பொற்காசுகளை அவர்களிடம் தந்தார். பேராசையினால் இப்படிப்பட்ட இழப்பு வந்ததே என்று வருந்தினார் பண்ணையார். அந்தப் பொற்காசு களை ஊர் மக்களுக்குப் பிரித்துக் கொடுத்தார் கந்தசாமி.

அந்த பண்ணையாருக்கு இந்த அடி போதும்... இனி அவர் உங்களைத் துன்பப்படுத்த மாட்டார். மகிழ்ச்சியாக இருங்கள், என்று சொல்லிவிட்டு அங்கிருந்து புறப்பட்டார்.


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 774

Search for people, places and things | Nagendram Home

### கேதன் தவ




### சோபிகா சோபி




### சர்மிளா




### குகதர்சன்




### கேதா ஒலிவண்ணன்




### சசிகாந்த்

ஒவ்வொரு ஆணும் தன் வாழ்வில் சந்தித்தே ஆக வேண்டிய இரண்டு பேரிடர்கள்..

இயற்கைப் பேரிடர் = காதல்

செயற்கைப் பேரிடர் = கல்யாணம்

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 41

## ஆட்டாமா உணவுகள் உடல் நிறையை கட்டுப்படுத்த உதவுமா?

ஆட்டாமா என்பது கோதுமை அரிசியை தீட்டாது தவிடு சேர்த்து திரிப்பதன் மூலம் பெறப்படுகிறது. பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு வரும் இந்த ஆட்டாமாவை பலரும் ஆர்வத்துடன் வாங்கி பயன்படுத்தி வருகிறார்கள்.

ஆட்டாமா உணவுவகைகளை உண்டால் உடல் மெலியும் என்று நம்பி தமது அன்றாட உணவில் அதிகளவு ஆட்டாமாவை சேர்த்து ரொட்டியாகவும் பிட்டு ஆகவும் உண்டு உடல் பருத்துப் போனவர்கள் பலர்.

கோதுமை அரிசியை தீட்டியபின் திரிப்பதன் மூலம் பெறப்படும் கோதுமை மாவுடன் ஒப்பிடும் பொழுது ஆட்டாமாவிலே தவிட்டுத்தன்மையும் நார்த்தன்மையும் அதிகமாக காணப்படுகிறது.

இதனால் ஆட்டாமா உடலினுள் அகத்துறிஞ்சப்படும் வேகம் ஒப்பீட்டளவிலே சற்றுக் குறைவாகும். ஆனால் குறைந்த வேகத்திலே ஆட்டாமாவில் இருக்கும் மாப்பொருள் அனைத்தும் அகத்துறிஞ்சப்பட்டு உடலினுள் செல்லும். எனவே உடல்நிறை குறைப்பிற்கு ஆட்டாமா உணவு வகைகள் உகந்தவை அல்ல.



சாதாரண நிறையுடைய நீரிழிவு நிலை உள்ளவர்களுக்கு கோதுமைமாவுடன் ஒப்பிடும் பொழுது ஆட்டாமா சிறந்தது எனக் கொள்ளலாம். ஆனால் எமது பிரதேசங்களில் விளையும் உழுந்து, பயறு, கௌப்பி, பருப்பு வகைகள் போன்றவை ஆட்டாமாவுடன் ஒப்பிடும் பொழுது எமது உள்ளூர் உற்பத்திகள் பல வழிகளிலும் சிறந்தவை ஆகும்.

தீட்டாத தவிடு சேர்க்கப்பட்ட ஊர் அரிசிமா வகைகளும் ஆட்டாமாவுக்கு ஒப்பானவை. எனவே நாம் உள்ளூரில் விளையும் உணவுவகைகளுக்கு முன்னுரிமை கொடுப்பது பயனுடையதாக அமையும்.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

# சிறுநீரக கற்கள்

### சிறுநீரகக் கற்கள் ஏன் ஏற்படுகின்றன?

- குறைந்த அளவு நீரை உள்ளெடுப்பதனால்
- அடிக்கடி சிறுநீர் தொற்று ஏற்படுபவர்களுக்கு
- சிறுநீர் கழிப்பதில் கஷ்டமிருப்பவர்களுக்கு சிறுநீர் கழித்த பின் கணிசமான அளவு சலம் சிறுநீர்ப்பையில் தேங்குவதால்
- சிறுநீர் தொகுதியில் ஏதும் குழாய்கள் / விரியலாக்கிகள் இணைக்கப்பட்டிருப்பின்
- கற்களை தோற்றுவிக்கக்கூடிய பதார்த்தங்களை அதிகம் உள்ளெடுக்கும் போது.

### இவை சிறுநீர் தொகுதியின் எப்பகுதியில் ஏற்படுகின்றன?

இவை எல்லாப் பகுதிகளிலும் ஏற்படலாம்.- சிறுநீரகம், சிறுநீர்க்குழாய், சிறுநீர்ப்பை, சிறுநீர் வழி

### சிறுநீர் கற்கள் இருப்பின் என்னென்ன அறிகுறிகள் தென்படும்?

- சிறுநீருடன் இரத்தம் வெளியேறல்
- சல எரிவு
- நாரி நோவு / அடி வயிற்றில் நோவு
- அடிக்கடி சலம் கழித்தல்
- இடுப்பிலிருந்து விதைப்பகுதியை நோக்கிய நோ

### சிறுநீர் கற்கள் தோன்றாமலிருக்க நான் என்ன செய்ய வேண்டும்?

- போதுமான அளவு நீரை அருந்த வேண்டும். விசேடமாக கோடை காலங்களிலும், கடினமாக வேலை செய்யும் போதும்
- சிறுநீர் கற்களை தோற்றுவிக்கக்கூடிய பதார்த்தங்களின் அகத்துறிஞ்சலை குறைக்க அதிக நார்ச்சத்துள்ள உணவுகளை உட்கொள்ள வேண்டும்.
- சிறுநீர் வெளியேற்றுவதில் சிரமம் இருப்பின் அடிக்கடி சலத்தை வெளியேற்ற வேண்டும்.

### சிறுநீர் கற்களுக்கு எவ்வாறான சிகிச்சை அளிக்கப்படுகிறது?

- சிறுநீர் கற்கள் தானாகவே சலத்துடன் வெளியேற மருந்து வழங்கப்படும்.இதில் 5 mm இலும் சிறிய கற்களே வெளியேறுகின்றன.
- புறஊதா கதிர்களை பயன்படுத்தி கற்களை உடைத்து சலத்துடன் வெளியேற செய்தல்.
- சிறுநீர் குழாய்க்குள் கமரா கொண்ட குழாயை செலுத்தி கமரா மூலம் பார்த்தவாறு கற்களை உடைத்து அகற்றல்.
- மேற்கூறிய முறைகளில் செய்ய முடியாவிடினோ அல்லது மேற்கூறிய முறைகள் பயனற்றுப் போயிடினோ சத்திரசிகிச்சை மூலம் அகற்றல்.



### சடுதியாக சிறுநீர் கழிக்க முடியாமற்போய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டீர்களா?

ஏன் இவ்வாறு ஏற்படுகின்றது?

சாதாரணமாக நாம் சிறுநீர் கழிக்கும் போது எமது சிறுநீர்ப்பை சுருங்குகிறது. அதைத் தொடர்ந்து சிறுநீர்ப்பையின் கீழ்ப்பகுதியிலுள்ள இறுக்குகிகள் தளர்வடைகின்றன. இதனால் சிறுநீர்ப்பையிலுள்ள சிறுநீரானது சிறுநீர் வழியினூடாக வெளியேறுகிறது.

### இச்செயற்பாடானது பின்வரும் செயற்பாடுகளால் பாதிக்கப்படலாம்.

- சிறுநீர்ப்பையில் ஏற்படும் கட்டிகள், சிறுநீர் கல்
- சுக்கில சுரப்பியில் (Prostate) ஏற்படும் வீக்கம்.
- சிறுநீர் வழி சுருக்கமடைதல் அல்லது கல் அடைத்தல்.

### இவ்வாறு மீண்டும் ஏற்படாமலிருக்க நீங்கள் கடைப்பிடிக்க வேண்டியவை

- வைத்தியர் வழங்கும் மருந்துகளை தொடர்ச்சியாக பாவிக்கவும்.
- இரவில் அதிகம் நீர் அருந்துவதை தவிர்க்க வேண்டும்.
- மலச்சிக்கலை தவிர்க்க வேண்டும்.
- புகைப்பிடித்தலை நிறுத்த வேண்டும்.
- இரவில் மதுபானம் அருந்துவதைத் தவிர்க்க வேண்டும்.
- சிறுநீர் தொற்றுக்கான அறிகுறி தென்படின் உடனடியாக வைத்தியரின் உதவியை நாடி மருந்து பெற வேண்டும்.
- உங்களால் சிறுநீர்ப்பையிலுள்ள சிறுநீரை முழுமையாக ஒரே தடவையில் வெளியேற்ற முடியாது.எனவே ஒரு தடவை சிறுநீர் கழித்த பின் பதினைந்து நிமிடங்களின் பின் மீண்டும் மீதமுள்ள சிறுநீரை வெளியேற்றுங்கள்.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

மருத்துவம், ஆரோக்கியம், சுற்றாடல், பாதுகாப்பு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் இந்த வைத்தியச்சுடர் சம்பந்தமானஉங்கள் அபிப்பிராயங்களையும் 0768363858 என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள்.